மஞ்சரி

விஜய - ஆவணி

ஆகஸ்ட், 1953

கவர்னரின் புலி வேட்டை
பாகிஸ்தானில் கலியாணம்
பட்டணத்தில் பாம்பு
உதட்டில் பொன் (சிறு கதை)
இதய நாதம் (நாவல் சுருக்கம்)

-6-
அணா

வியத்தலும் இகழ்தலும்

ஆற்று நீரில் செல்லும் மிதவை போல உயிர் விதியின் வழியே செல்லும் என்பதைப் பெரியோர்களின் நூல்களால் அறிந்திருக்கிறோம். அதனால் பெரியோரைக் கண்டு வியக்க மாட்டோம். அப்படி ஒருகால் வியந்தாலும், சிறியோரை ஒரு பொழுதும் இகழ மாட்டோம்.

—கணியன் பூங்குன்றன்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] விஜய-ஆவணி :: :: ஆகஸ்ட் 1953 [இதழ் 9

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

கொரியாவில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் எற்படும் என்று எல்லாரும் எதிர்பார்த்து மனம் சோர்ந்த நிலையில் அதற்கு உடன்படாமல் பிடிவாதம் பிடித்து வந்தார் தென் கொரியாவின் ஜனாதிபதி ரீ; பிறகு ஐஸன்ஹோவரின் தூதர் ராபர்ட்ஸன் அளித்த சில உறுதி மொழிகளின் மேல் தடை செய்யாமல் இருக்க இணங்கினார். 90 நாட்களுக்குள் உருப்படியாக ஒன்றும் சாதிக்காவிட்டால் தாம் மீண்டும் யுத்தம் தொடங்கப் போவதாகவும் இந்தியத் துருப்புகளும் கம்யூனிஸ்டு துருப்புகளும் தம் நாட்டு மண்ணில் கால் எடுத்து வைக்கக் கூடாதென்றும் நிபந்தனைகள் விதித்ததாகத் தெரிகிறது. ஆகவே, நடுநிலைப் பிரதேசத்தில் யுத்தக்கைதிகளை இந்தியத் துருப்புகள் காவல் காத்து வருவதற்கான எற்பாடுகளைச் செய்து தர ஐ. நா. தலைமை இசைந்திருக்கிறது. ஆனாலும் இரண்டு நாட்களுக்குமுன் ஒரு பக்கம் ஐஸன்ஹோவர் யுத்த நிறுத்த ஒப்பந்தம் விரைவில் எற்படும் என்று சொல்ல, அதே சமயம் ரீ, அமெரிக்காவும் ஐ. நா. தலைமையும் கம்யூனிஸ்டுகளோடு ரகசியமாக எதோ பேசித் தமக்கு ராபர்ட்ஸன் அளித்த வாக்குறுதியை மீறியிருப்பதாகக் குற்றம் சாட்டினார். அதோடு யுத்த நிறுத்த ஒப்பந்தம் எற்பட்டாலும் அதை மதிக்கப் போவதில்லை என்று வேறு பயமுறுத்தினார். இதெல்லாம் கேலிக் கூத்தாகத்தான் இருக்கிறது; இதற்கு முடிவு விரைவில் காணவேண்டியது ஐ. நா. தலைமை, ஐஸன்ஹோவர் இவர்கள் பொறுப்பாகும். நல்லவேளையாக, ஜூலை 27 அன்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது.

* * *

கொலைக் குற்றம் சாட்டப்பெற்ற ருஷிய வைத்தியர்கள் சிலர் விடுதலையானது முதல் ருஷியாவில் பல மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. அரசாங்கத் தலைமைப் பொறுப்பேற்று நடத்திவந்த பிரமுகர்கள் மூன்றுபேரில் பெரியா என்ற உள்நாட்டு மந்திரியைத் திடீரென்று 'துரோகி' என்றும் 'சதிகாரர்' என்றும் குற்றம் சாட்டிக் கைது செய்திருக்கிறார்கள். பெரியா பல பிரபல மாஜி கம்யூனிஸ்டு தலைவர்களைத் 'தீர்த்து'க்

கட்டிப் பெயரெடுத்தவர். லாட்வியா, கிழக்கு ஜெர்மனி இங்கெல்லாங்கூட இப்படிச் சில பிரபல கம்யூனிஸ்டு தலைவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் மிஸ்டர் ஆட்லி இதெல்லாம் நிலைமை சீர்திருந்துவதற்கு அறிகுறி என்று கருதுகிறார். இதற்கிடையே கிழக்கு ஜெர்மனியில் 'கிளர்ச்சி' ஏற்பட்டு அதன்பின் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்ற வதந்தி பரவியது. அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் தாம் உணவுப் பொருள் அனுப்பி உதவுவதாகத் தெரிவித்தார். ஆனால் மாலடோவ், இதை வெறும் பிரசாரத்துக்காகக் கையாளும் தந்திரம் என்று ஏற்க மறுத்துவிட்டார். இருந்தாலும் ஐஸன் ஹோவர் உணவு அனுப்பப் போவதாகத் தெரிகிறது. அமெரிக்கரும் சரி, ருஷியரும் சரி, அரசியல் சந்தர்ப்ப வாதத்தைக் கையாளாமல் பொது மக்களின் நலனைக் கவனித்து நடந்தால் உலகில் அமைதி ஏற்படுவது நிச்சயம்.

* *

கம்யூனிஸ்டுகள் எனப் பல பேரைச் சந்தேகித்து விசாரணை செய்ய அமெரிக்காவில் ஒரு கமிட்டி ஏற்பட்டது. அதற்கு அமெரிக்கக் குடியரசுக் கட்சி அங்கத்தினரான மெக்கார்த்தி என்பவர் தலைவராக இருந்து வருகிறார். சமீபத்தில் ரால்ஃப் பஞ்ச் என்ற பிரபல சமாதானப் பிரியர் மேல்கூட இந்த மாதிரி குற்றச் சாட்டைக் கொண்டு வருவார்களோ என்று அநேகர் பயந்தார்கள். அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர், காலஞ்சென்ற ரூஸ்வெல்ட்டின் மனைவியார் போன்றவர்கள்கூட இந்த மாதிரி விசாரணை முறையைக் கண்டித்துள்ளார்கள். ஜெர்மனியில் நாஜிகளின் கொடுமை தாங்காமல் அமெரிக்கக் குடியான பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன், 'இது அநியாய விசாரணை. அறிவாளிகளையெல்லாம் இப்படி விசாரிப்பதை எதிர்த்து நிற்கக் காந்தியடிகளின் அஹிம்ஸா முறை ஒத்துழையாமைதான் சரியான மார்க்கம்' என்று தம் மனத்தைத் திறந்து சொல்லிவிட்டார். இந்த விசாரணைபற்றிக் கேட்டு உலகமே அமெரிக்காவிடம் வெறுப்படையும் என்று பிரபல அமெரிக்க ஜனநாயகக் கட்சிப் பிரமுகர் ஸ்டீவன்ஸன் கருதுகிறார். ரோஸன்பெர்க் தம்பதிகள் அணுக்குண்டு ரகசியத்தை ருஷியருக்குத் தெரிவித்து அமெரிக்காவுக்கு விரோதமாகச் சதி செய்திருக்கலாம். அதனால் அவர்களுக்கு மரணதண்டனை விதித்தது பற்றி நாம் அபிப்பிராயம் சொல்லிக்கொண்டிருப்பது பொருத்தமில்லாவிட்டாலும், ஐன்ஸ்டீன் போன்ற அறிவாளிகளைச் சந்தேகிக்கும் நிலைக்கு அமெரிக்கா வந்துவிடுவதென்றால் உலகம் அமெரிக்கா விஷயத்தில் ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. ஆனால் மெக்கார்த்தி போன்றவர்களின் செல்வாக்கு விரைவில் மங்கி, ஆப்ரகாம் லிங்கன் போன்ற பிரபல அமெரிக்கத் தியாகிகளின் வழியை அமெரிக்கர் கடைப்பிடிப்பார்களென்று நம்புகிறோம்.

சபாபதி ஐயர்

திம்மாவஜ்ஜல கோதண்டராமையா

தியாகையரைப்போல் அதே காலத்தில் வாழ்ந்த பக்தர் இவர். க்ஷேத்ரஞரின் பதங்களைப் போலவே இவருடைய 'முவ்வகோபால' பதம் முதலிய சாகித்தியங்களும் பிரசித்தி பெற்றவை. தெலுங்கராக இருந்தாலும் இவர் தமிழ் மரபில் ஊறியிருந்தது அவற்றை அநுபவிப்போருக்கு விளங்கும்.

வித்யாநகரம் என்று பெயர் பெற்ற விஜயநகர சாம்ராஜ்யம் சின்னபின்னம் ஆகிவிட்டது. அதோடு ஆந்திரக் கலைகள் அரசாங்கப் புரட்சியற்ற தமிழ் நாட்டில் அடைக்கலம் புகுந்தன. நாயக்க மன்னர்கள் தம் ஆளுகைக்கு உட்பட்ட செழிப்பான தமிழ் நாட்டுப் பகுதியில் ஆட்சிக்கும் இலக்கியக் கலைத் தொடர்புக்கும் அவசியமான திறமை பெற்ற பலரைத் தம்முடன் கூடவே அழைத்துப் போனார்கள். தஞ்சாவூரை ஆண்ட ரகுநாத நாயக்கரும் அவர் மகன் விஜயராகவ நாயக்கரும் வைஷ்ணவ மதத்தையும் கலைகளையும் வெகுவாக ஆதரித்தார்கள். இவர்களுடைய வள்ளன்மையைக் கேள்விப்பட்ட பலர் ஆந்திர தேசத்திலிருந்து வந்து தம் திறமையை வெளியிட்டு ராஜ சம்மானம் பெற்றார்கள்.

தஞ்சாவூரை அடுத்த சூலமங்கலம், மெலட்டூர், மூவநல்லூர் இந்தக் கிராமங்களில் இட்படிச் சம்மானம் பெற்ற பல குடும்பத்தார் குடியேறினார்கள். பாகவத குடும்பங்களும் பல இருந்தன. சூலமங்கலத்துக் 'கதகளி' சம்பிரதாயம், கூச்சிபூடி பாகவத சம்பிரதாயத்தைச் சேர்ந்தது என்று சொல்லுவார்கள்.

நாயக்க மன்னர்கள் தூண்டுதலால் தமிழ் நாட்டில் சங்கீதமும் நாட்டியமும் தலை சிறந்து விளங்கின. இவர்கள் காலத்திலும் பின்பு வந்த மகாராஷ்டிர அரசர்கள் காலத்திலும் 'யட்சகானம்' 'வீதி பாகவதம்' (பகல் வேஷம்) முதலியவற்றால் பதங்களின் மேல் ஜனங்களுக்கு மிகுந்த பற்றுதல் உண்டாகிவிட்டது. ரகுநாத நாயக்கர் காலத்தில் க்ஷேத்ரக்ஞர் என்ற பிரபல கவி தஞ்சாவூரில் வந்து தங்கினார்; அரசருடைய குமாரர் விஜயராகவ நாயக்கர் விஷயமாக ஆயிரக்கணக்கில் பதங்களை இயற்றினார். சோழ மண்டலம் முழுதும் இந்தப் பதங்களினால் சிருங்கார ரசத்தில் மிதந்தது என்றே சொல்லவேண்டும். இவருடைய 'முவ்வ கோபால' பதங்களுக்குச் செல்வாக்கு மிகுந்தது. ஆந்திர பாகவதர்களைப் போலவே தமிழ் நாட்டுப் பாடகர்களும் அவற்றைப் பாடிச் சம்பிரதாயம் தவறாமல் அபிநயிக்க உற்சாகம் கொண்டார்கள்.

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

தஞ்சாவூருக்கு அருகில் வாழ்ந்த தெலுங்குக் குடும்பங்களில் தியாகையர் குடும்பமும் சபாபதி ஐயர் குடும்பமும் பிரசித்தி பெற்றவை. தியாகையர் ராம பக்தராய்ப் பரம பாகவத சிகாமணியாய்க் கர்நாடக சங்கீதத்துக்கு உயிர் நாடியாய்ப் பல கீர்த்தனங்களை இயற்றினர். சபாபதி ஐயர் மன்னார்குடியில் இருந்தார். ராஜகோபால பக்தராய் க்ஷேத்ரக்ஞரின் பதங்களைச் சம்பிரதாயம் தவறாமல் பாடி அவர் அபிநயித்து வந்தார். அதோடு நிற்கவில்லை; தம் இஷ்ட தெய்வமாகிய ராஜகோபாலன் விஷயமாக 'ராஜகோபால' முத்திரையிட்டு, க்ஷேத்ரக்ஞர் போலவே சிறந்த பதங்களை இயற்றிப் பதகர்த்தாவாகக் கீர்த்தி பெற்றார்.

இவரும் தியாகையரைப் போலவே முலகநாட்டு வைதிக மரபைச் சேர்ந்தவர். தஞ்சாவூரை அடுத்த மூவநல்லூர் அக்கிரகாரம் இவரது ஊர். பிற்காலத்தில் இவர் மன்னார்குடியில் வசிக்கலானர். அதனல் முவ்வலூர்ச் சபாபதி ஐயர், ராஜமன்னார்குடி சபாபதி ஐயர் என்ற பெயர்கள் இவருக்கு வழங்கின. பரத சாஸ்திரத்தில் மிக நிபுணர் என்று இவருக்குப் பெயர் இருந்தது. க்ஷேத்ரக்ஞர் பதங்களைப் பாடி அபிநயித்துத் தினந்தோறும் சிஷ்யர்களுக்கும் அவற்றைப் போதித்தார். அதனல் பத பாவத்தில் மெய்மறந்து விடுவார். ஆகவே நாயக நாயகி பாவத்தில் ஊறிய இவர் கவிதை பதமாகவே அமைந்துவிட்டது. இவர் பதங்களுக்கும் க்ஷேத்ரக்ஞர் பதங்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது.

இவர் சுமார் கி. பி. 1860 வாக்கில் வாழ்ந்தவரென்று தெரிகிறது. இவர் சிருங்கார ரசத்தில் பதங்கள் பாடியதோடு 'சிதா சுயம் வர'ப் பாட்டுக்களும் இயற்றியிருக்கிறார். வெகு காலம் தமிழ் நாட்டிலேயே பழகிவிட்டதால் தியாகையர் கீர்த்தனங்களில் இருப்பது போலவே இவருடைய பதங்களிலும் தமிழ் மரபு கலந்திருக்கிறது.

இவரைப்பற்றிய ஒரு விசேஷச் செய்தியைப் புதுக்கோட்டை வாசி ஒருவர் என்னிடம் சொல்லியிருக்கிறார்:

சபாபதி ஐயர் பெண்வேஷம் தரித்து க்ஷேத்ரக்ஞ பதங்களை அபிநயம் பிடிப்பார். இவர் அழகிய தோற்றமும் இனிய சாரீரமும் கொண்டவர். இவர் புடைவை உடுத்து அபிநயம் பிடித்தால் சபையோர் உண்மையில் ஒரு பெண்ணே தம்முன் வந்து ஆடுவதாக நம்பி விடுவார்களாம். ஒரு தடவை சரபோஜி மன்னர், பரத சாஸ்திரத்தில் சிறந்த புலமையை வெளியிடுபவர் யாராயினும் சரி, அவர் கோரிய பொருள் எதுவாயினும் கொடுப்பதாகத் தெரிவித்தாராம். இந்தப் போட்டியில் பல ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டார்கள். எல்லோரையும் விட ஒரு பெண்மணி சிறப்பாகப் பாடி அபிநயித்தாளாம். அபிநயம் முடிந்த பின் பெண் வேஷத்தைக் களைந்தெறிந்து சபாபதி ஐயர் தம்முன் நிற்பதைக் கண்ட மன்னரும் மற்றவர்களும் ஆச்சரியத்தில் மூழ்கினர்களாம். எல்லோரும் சபாபதி ஐயரே பரத சாஸ்திரத்தில் வல்லவர் என்று ஒப்புக்கொண்டார்கள். மன்னர் அவர் விரும்பிய பொருளை அளிக்க இசைந்தார். ஐயர் சிறிது பொருளையோ, மானியத்தையோ சம்மானமாகக் கேட்பாரென்று

அரசர் நினைத்தார். சபாபதி ஐயரோ முற்றும் வேறுவிதமாக நினைத்தார். பரம பாகவதராகிய அவர், அரசருடைய அந்தப்புரத்தில், அநாதி காலமாக அரச பரம்பரையினர் பூஜித்துவந்த ஒரு கிருஷ்ண விக்கிரகத்தைக் கேட்டார். அரசர் இதை எதிர்பார்க்கவில்லை. சபையோர்களும் திடுக்கிட்டார்கள். மன்னர், "இந்த விக்கிரகத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வீர்கள்? வேறு ஏதாவது கேளுங்கள்; நீங்கள் கேட்கும் அளவு பணம் கொடுக்கிறேன்" என்றார்.

சபாபதி ஐயர் மிகப் பணிவுடன் வணங்கி, "மகாராஜா! எனக்குப் பணம் வேண்டாம். அது நிலையற்றது. உங்களிடம் அதைப் பெற்றுக் கொண்டேனானால் எனக்கு இந்த வித்தையின்மேல் அசிரத்தை ஏற்பட்டு விடலாம். கண்ணனின் அருளால் நான் கற்ற வித்தையை நாலு பேருக்குக் கற்பித்து அதன் மூலம் வாழ்க்கையை நடத்துவதிலே பேரானந்தம் காண்கிறேன். ஆசையை வளர்க்கும் ஐசுவரியம் எனக்கு வேண்டாம். தாங்கள் தயை செய்து மோகன ரூபனாகிய கண்ணனுடைய விக்கிரகத்தைக் கொடுத்தால் தேவதார்ச்சனையில் வைத்துக்கொண்டு தினமும் பூஜிப்பேன்" என்றார்.

சபாபதி ஐயருடைய கிருஷ்ண பக்தியின் தீவிரத்தை உணர்ந்த மன்னர் பரம்பரையாகத் தம் குலத்தவர் தொழுதுவந்த கிருஷ்ண விக்கிரகத்தை அவருக்குக் கொடுத்து மரியாதை செய்தார். ஐயரும் வெகு திருப்தியுடன் தினந்தோறும் அந்த விக்கிரகத்தைப் பூஜித்து வந்தாராம். சமீபகாலம் வரையில் அவருடைய தமையனார் பெண் அவருடைய வீட்டிலேயே அதைப் பாதுகாத்து வந்தாள். இரண்டு மூன்று வருஷங்களுக்குமுன் அந்த அம்மாள் எண்பது வயதில் காலமாகிவிட்டாள். பின்பு அவருடைய ஆஸ்தி பாஸ்திகளுடன் அந்த விக்கிரகத்தையும் தாயாதிகள் கொண்டுபோய் விட்டதாகத் தெரிகிறது. அரசன் சபைக்கு அழைத்தபோது, 'நிதிசால சுகமா, ராமுனி ஸந்நிதி ஸேவ சுகமா' என்ற கேள்வியைப் போட்டு ராஜசம்மானத்தை மறுத்த தியாகையரின் கொள்கையும் கிருஷ்ண விக்கிரகம் தவிர வேறு பரிசு வேண்டாம் என்று மறுத்த சபாபதி ஐயர் கொள்கையும் அடிப்படையில் ஒன்றே. தியாகையர் பக்தி பரவசராய்க் கிருதிகள் பாடி மெய்மறந்தார். சபாபதி ஐயர் ரஸபரவசராய்ப் பதங்கள் பாடி மெய்மறந்தார். தியாகையர் நாதப் பிரம்ம உபாசகர்; சபாபதி ஐயர் கலையை உபாசித்தவர். பிரம்மானந்தத்தை அநுபவிக்கத் தியாகையருக்குச் சங்கீதமும் சபாபதி ஐயருக்கு அபிநயமும் கருவிகளாயின.

'தாரிஜூசுசுன்னதி' என்ற சங்கராபரணப் பதம் பலருக்கும் தெரிந்ததே. 'அங்யாயமுகா நோப அருபாலைதி' என்ற காம்போதிப் பதமும் 'ஈலாகு பாங்துடவு' என்ற பிலஹரி ராகப் பதமும் 'ராரா விடிதிக' என்ற பந்துவராளிப் பதமும் இவருடைய ரசபாவத்தின் பெருமையைக் காட்டுகின்றன. சில வருஷங்களுக்கு முன்னால் இவருடைய பதங்கள் சில வெளியாகியிருக்கின்றன.

ரமணர்

வாழ்வும் வாக்கும்



ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் போதிந்தது.

விரிந்த முட்டை: ஸ்ரீ ரமண பகவான் நீராடி விட்டு வந்தார். கூடத்தில் ஒரு கொடியில் உலர்த்தியிருந்த துண்டை எடுக்க முயன்றார். மூங்கிலைக் கொடியாகக் கட்டியிருந்தார்கள். அந்த மூங்கிலின் ஓர் ஓரத்தில் ஒரு குருவி கூடு கட்டியிருந்தது. அந்தக் கூட்டில் நாலைந்து முட்டைகளையும் இட்டிருந்தது. கொடியிலிருந்து பகவான் துண்டை எடுக்கும்போது அவருடைய கை மோதியதால் கூடு அசைந்தது. அதிலிருந்து ஒரு முட்டை கீழே விழுந்தது. விழுந்த அது விரிந்துவிட்டது. அதைப் பார்த்தபோது பகவானுக்குத் தூக்கி வாரிப் போட்டது. பக்கத்தில் இருந்தவரிடம், "இங்கே பார்; என்ன பாவம் இன்று நேர்ந்துவிட்டது!" என்று கூவினார். உடனே விரிசல் உண்டான அந்த முட்டையைத் தம் கையில் எடுத்துக் கருணை மிக்க நோக்கோடு பார்த்தார். "ஐயோ, பாவம்! இதன் தாய் எத்தனை துக்கத்தை அடையும்! தன் முட்டையை உடைத்ததற்காக அதற்கு என்னிடம் அசாத்தியக் கோபம் உண்டாகும். இந்த விரிசல் மறுபடியும் கூடுமா? எங்கே பார்க்கலாம்" என்று சொல்லி ஒரு துணியை எடுத்துத் தண்ணீரில் நனைத்து அந்த விரிசல் முட்டையை அதனால் சுற்றி மறுபடியும் கூட்டுக்குள் வைத்து விட்டார்.

மூன்று மணிக்கு ஒருதரம் முட்டையைக் கூட்டிலிருந்து எடுத்துத் துணியை எடுத்துவிட்டுத் தம் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு பார்ப்பார். சிறிது நேரம் தம்முடைய கருணைப் பார்வையை அதன்மீது ஓட்டிக்கொண்டே இருப்பார். அவருடைய அருட் பார்வையின் ஒளி அந்த முட்டைக்கு மீண்டும் உயிரூட்டியது போலும்! "இந்த விரிசல் போய் விடுமா? விரிசல் முட்டையாயிற்றே! இதிலிருந்து குஞ்சு வெளிவருமா?" என்று சொல்லிக் கொண்டே இருப்பார். ஏதோ பெரிய பிழையைச் செய்தவர்கள் தம் பிழைக்காக வருந்துவதைப் போல உள்ளமுருகினார். அந்த உருக்கம் அவருடைய வார்த்தையிலே வெளியாயிற்று.

இப்படியே ஈரத்துணியால் முட்டையைச் சுற்றிக் கூட்டில் வைப்பதும், அடிக்கடி தம் கையில் எடுத்து வைத்துக்கொண்டு தம் அன்புப் பார்வையினால் பார்ப்பது

மாக ஒவ்வொரு நாளும் செய்து வந்தார். ஒரு வாரம் இது நடந்தது.

குருவி அதை அடை காத்ததோ இல்லையோ, தெரியாது. ஆனால் பகவான் அதைவிட அன்புடன் அந்த முட்டையைப் பாது காத்தார். தம் திருக்கரத்தில் வைத்துப் போற்றினார். தம் திருக் கண்பார்வையினால் கவசமிட்டுக் காப்பாற்றினார்.

ஏழாவது நாள் வழக்கம்போல் பகவான் தம் திருக்கையில் அந்த முட்டையை எடுத்து வைத்துக் கொண்டார். அவர் கண்கள் வியப்பால் விரிந்தன. "என்ன ஆச்சரியம்! இங்கே பாருங்கள். விரிசல் மூடிவிட்டதே; இதன் அம்மாவுக்கு இனிமேல் சந்தோஷ மாக இருக்கும். இதை அடை காத்துக் குஞ்சு பொரிக்கும். கட வுள் இந்தப் பாவத்திலிருந்து என்னைக் காப்பாற்றினார். ஒரு ஜீவனை அநியாயமாக அழித்துவிட இருந்தேனே! பொறுத்திருந்து பார்ப்போம். இதிலிருந்து குஞ்சு வெளி வருகிறதா, பார்க்கவேண் டும்" என்று மகிழ்ச்சியோடு பக வான் சொன்னார். அவருக்கு எத்தனை திருப்தி!

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் அந்த முட்டை பொரிந்தது. ஆம்; அதிலிருந்து சின்னஞ் சிறு குஞ்சு வெளி வந்தது. பகவா னுக்குத்தான் என்ன சந்தோஷம்! அவருடைய திருமுகத்தில் அரு ளொளி பரவிப் பொங்கியது. விரிசலான முட்டையிலிருந்து யாதொரு குறையுமின்றிப் பிறந்த அந்தச் சின்னஞ் சிறு குஞ்சைச் சர்வபூத தயாபரராகிய இவர் தம் கையில் எடுத்துக் கொஞ்சினார்; தடவிக் கொடுத் தார்; முத்தமிட்டார். "இதோ பாருங்கள்! எத்தனை அழகாக இருக்கிறது!" என்று அருகில் நின்றவர்களிடம் கொடுத்தார். அவரே முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தவரைப்போல ஆனந்தம் அடைந்தார். அதை மறுபடியும் வாங்கித் தம் பூந்தாமரைத் திருக் கரமாகிய ஞானத் தொட்டிலில் வைத்துக்கொண்டார். அந்தக் குருவிக் குஞ்சு செய்த புண்ணியந் தான் எத்தகையது! உடற் கூட்டை விரியச்செய்து மெய்ஞ் ஞானத் தீயால் தகிப்பித்து முக்தி யாகிய சாம்ராஜ்யத்தை அடைய வைக்கும் அந்த ஞான முனிவர் பறவைக் குலத்துக்கும் கருணை காட்டினார். விரிந்த முட்டை யும் இணைந்து குஞ்சைத் தந்தது. ரமண பகவானுடைய பார்வையும் ஸ்பரிசமும் அந்த அரிய செயலைச் செய்யக் காரணமாக இருந்தன என்று ஏன் சொல்லக் கூடாது?

—ஆதாரம்: டி. கே. எஸ்., 'தி கால் டிவைன்.' (ஜூலை, 1953)

தற்கொலை செய்துகொள்ளுதல்: ஒரு சமயம் பகவானிடம் ஒருவர் வந்தார். "தற்கொலை செய்து கொள்வது தவறா?" என்று கேட் டார். பகவான் கூறிய பதில் வருமாறு:

ஒரு பாவமும் அறியாத உடம்பைக் கொல்வது தவறு தான். உடம்பு இயல்பாகவே உணர்ச்சி யற்றது. உண்மையில் இன்ப துன்பங்கள் மனத்தைச் சார்ந்தன. அது செய்கிற காரியந் தான் நம்மைப் பல அவஸ்தை களுக்கு உள்ளாக்குகிறது. ஆகவே அதுதான் உண்மையான குற்ற வாளி. உடம்பு எந்தப் பாவமும் அறியாதது. தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்ற நினைப்

பையே மனந்தான் உண்டாக்குகிறது. ஆனால் பழியோரிடம், பாவமோரிடம் என்பது போல அதன் விளைவு உடம்பில் வந்து விடிகிறது. உடம்பைக் கொல்வதற்குப் பதிலாக உட்கார்ந்திருக்கும் நாற்காலியை உடைக்கலாம்; மேஜையை உடைக்கலாம். அப்படிச் செய்வதனால் நம்முடைய துன்பங்கள் போய்விடுமா? உடம்பை அழிப்பதும் அத்தகையதுதான். ஆகவே, துன்பம் உண்டாகும்போது அந்தத் துன்பத்துக்கு மூல காரணமான மனத்தைக் கொல்லவேண்டும். அதுதான் நியாயமானது; அதனால் நிச்சயமாக இன்பம் உண்டாகும். உடம்பைக் கொல்வதைப் போன்ற பைத்தியக்காரத்தனம் வேறு இல்லை.

எப்படி யுக்தி?

ஐக்கிய அமெரிக்காவில் உடா என்ற இடத்தில் 1919-இல் நடந்தது இது: ஒரு பாங்கிக் கட்டிடத்தை சால்ட் லேக் ஸிட்டி என்ற இடத்திலிருந்து வெர்னல் என்ற ஊருக்கு மாற்ற வேண்டியிருந்தது. அந்தச் செங்கற்களையே உபயோகித்துக் கட்டிடத்தை எழுப்ப முடிவு செய்தார்கள் பாங்கிக்காரர்கள். கப்பலில் சாமானாக அனுப்பினால் கட்டணம் 2½ மடங்கு அதிகம் ஆகும் என்று தெரிந்து தபால்மூலம் பார்சலாக அந்தச் செங்கற்களைக் கொஞ்சங் கொஞ்சமாக அனுப்பலாம் என்று ஏற்பாடாயிற்று. ஐந்நூறு பவுண்டுக்கு மேல் ஒரே ஆளுக்கு அனுப்புவது தபால் விதிகளுக்கு முரணாகும். ஆகவே, வெர்னலில் உள்ள பல விலாசதாரர்களுக்குச் சில்லறையாய்ச் செங்கல்லைத் தபால் பார்சலாக அனுப்பிவைத்தார்கள்.

தபால் இலாகாக்காரருக்கு இந்த ரகசியம் தெரிந்து அவர்கள் விதிகளை மாற்றி அமைப்பதற்குள் பாங்கிக் கட்டிடம் கட்டிப் பூர்த்தியும் ஆகிவிட்டது!

'பலே கெட்டிக்காரன்'

இரண்டாவது மகா யுத்தத்தின்போது அட்லாண்டிக் சமுத்திரத்தின் வழியாக ஒரு பிரயாணிக் கப்பல் சென்று கொண்டிருந்தது. அதில் ஓர் இடத்தில் மந்திரவாதி ஒருவன் வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தான். பிரயாணிகளோடு சேர்ந்து இதை மிகவும் அக்கறையாகக் கவனித்துக்கொண்டிருந்தது கப்பல் தலைவனின் பச்சைக் கிளி! அப்போது மந்திரவாதி, "இதோ என் கையில் இருக்கும் பூந்தொட்டி மாயமாய் மறையப் போகிறது! பார்த்துக்கொண்டே இருங்கள், கண் கொட்டாமல்" என்று சொல்லிக் கையை ஆட்டினான். அதே சமயம் அந்தக் கப்பலை நீர்மூழ்கிப் படகு ஒன்று தாக்கி உடனே மூழ்க அடித்துவிட்டது. மாலுமிகளில் சிலர் பச்சைக் கிளி மூழ்காமல் காப்பாற்றிப் படகில் ஏற்றிக்கொண்டார்கள். அப்போது கிளி, "பலே கெட்டிக்காரன்! பலே கெட்டிக்காரன்" என்று கத்தியது!

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்ற மட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறர். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

ஸ்ரீமதி 'ரூபா', சென்னை:

கேள்வி: பிரசவத்துக்குப் பிறகு தலைமயிர் கொட்டக் காரணம் என்ன? பரிகாரம் என்ன?

விடை: எவ்வளவோ நாகரிகங்கள் நம் நாட்டில் புகுந்தும் கூந்தல் விஷயத்தில் அதிக மாறுதல் மேற்கு நாடுகளிலிருந்து புகுந்துகொள்ளவில்லை. நீண்ட கூந்தல் பின்னலிட்டுக் குஞ்சலம் முடிந்து முதுகை அலங்கரிக்கிறது. பெண்களுக்குத் தலைமயிர் குறைந்தால் கவலைதான். 'பாபிங்கு' (கத்தரித்துக்கொள்வது) பழக்கத்தில் வரவில்லை.

பிரசவம் என்பது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் பெரிய நிகழ்ச்சியாகும். தாயின் உடலிலிருந்து எவ்வளவோ முக்கியமான சத்துக்களும் விடமின்களும் இன்னும் ஆராய்ச்சியால் அறிய இயலாத பொருள்களும் குழந்தை வளர்வதற்கென்று செல்லுகின்றன. குழந்தை வளர்வதற்கென்று தாயின் உடல் அவசியமில்லாத உறுப்புக்களுக்குப் போஷாக்கைக் குறைத்துக்கொள்ளும். தலைமயிர் கழிவதற்கு இது ஒரு முக்கியமான காரணம். பரிகாரமாக ஏ - விடமின் அடங்கிய மருந்துகளைப் பயன்படுத்தலாம்.



விவர் எக்ஸ்டிராக்ட்டில் ஏ - விடமினேடு பலவகைப் போஷாக்குச் சத்துக்களும் அடங்கியிருப்பதால் தலைமயிர் வளர வெகு உபயோகமாகும்.

கே: சிலருக்குச் சருமம் பளபளப்பாயும் அழகாயும் இருக்கக்



காரணமென்ன? ஏ - விடமின் தோலுக்கு நல்லதென்பது நிஜந் தானா?

வி: சருமம் அழகாக இருக்க உடலாரோக்கியமே முக்கியமான காரணம். சருமம் சுருங்காமல் இருக்கவும், மிருதுவாயும் பளபளப்பாயும் இருக்கவும் அதனடியில் கிணப்பொருள் ஏராளமாய் இருக்க வேண்டும். இந்த நிணப்பொருளில் ஏ - விடமின் கலவையாயிருக்கும். சருமத்தின் போஷாக்குக்கு ஏ - விடமின் அவசியம். நல்ல போஷாக்கு உடையவர்களுக்குச் சருமம் பளபளப்பாயிருக்கும். பாலும் பழமும் அதிக அளவு சேர்ப்பதால் சரும அழகு அதிகரிக்கும். இதற்கும் மேல் உள்ளத்தில் சந்தோஷமும் வேண்டும்.

கே: மார்பு, கைகால் ஆகிய இடங்களில் மயிர் வளராமல் தடுக்க மிகச் சுலபமான வழி என்ன?

வி: ஆண்பிள்ளைக்கு இப்படி வளர்வது இயற்கை. அழகுமாகும். ஆண்பிள்ளைகளைக் கண்டு யார் கவர்ச்சியுற வேண்டுமோ அவர்கள் இந்த லட்சணத்தை நாடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

க. ஸ்ரீ., சென்னை.

கே: பெண்கள் எத்தனை வயது வரை உயர்வார்கள்? ஆண்கள் எத்தனை வயதுவரை உயர்வார்கள்? உயர்வதற்கு என்ன என்ன ஆகாரங்கள் சாப்பிடலாம்?

வி: பருவகாலம் வரும்போது பெண்கள் சட்டென்று வளர்ந்து விடுவார்கள். சுமார் பதினைந்து வயதாகும்போது நல்ல உயரமும் உடல் பூச்சும் ஏற்படும். 'மூவைந்து பதினைந்தானால் மூளியும் பெண்ணாவள்' என்பது முதுமொழி.

ஆண்கள் வளர்ந்து உயரச் சுமார் இருபது அல்லது இருபத்திரண்டு வயதாக வேண்டும்.

போஷாக்கு நிபுணர்களின் அபிப்பிராயப்படி சிறுவயதில் பால் அதிகமாய்ச் சேர்ப்பதால் நல்ல உயரமும் ஆகிருதியும் பெறலாம். இதோடு பாரம்பரிய ஆற்றலும் வேண்டும்; அதாவது, பெற்றோரின் வம்சத்தில் உயரமானவர்கள் இருக்கவேண்டும். நல்ல வளர்ச்சிக்குச் சந்தோஷம் முக்கியமான காரணமாகும்.

மலைவாசல் கோவிந்தராஜலு:

கே: முகத்தில் கடுகளவு பரிமாணமுள்ள கட்டிகள்போல் தோன்றியிருக்கின்றன. கத்திபட்டால் அவற்றிலிருந்து ரத்தம் சுரக்கிறது. இதற்கு என்ன செய்வது?

வி: இந்தக் கட்டிகளை வைத்தியர் நேரில் பார்த்துத்தான் இன்ன வியாதி யென்று உறுதியாய்ச் சொல்ல இயலும். நீர் சொல்லுவதைப் பார்த்தால் 'பாலுண்ணி' என்று சாதாரணமாய்ச் சொல்லும் ஒருவகைக் கட்டி என்று எண்ணுகிறேன். இதில் ரத்தநமனிகள் அதிகமாயிருக்கும். அதனாலேயே க்ஷவரம் செய்து கொள்ளும்போது ரத்தம் சுரக்கிறது.

நாளடைவில் இது மறைந்து போகலாம்; சிலவேளை கான்ஸராகவும் வளர்ந்துவிடலாம்.

வெகு அதிகமாயிருந்தால் எலெக்டிரிக் சிகிச்சை பெற்று நீக்கிக் கொள்வதே நலம்.

மூர்த்தி, ஜோலார்ப்பேட்டை.

சாப்பிடும்போது நடு நடுவே தண்ணீர் குடிக்கலாம் என்று மே மாத 'மஞ்சரி'யில் சொல்லியதை இவர் ஆட்சேபித்து எழுதியிருக்கிறார். பல உதாரணங்களும் சொல்லுகிறார். இவர் சொல்வதில் ஓர் உண்மை இருக்கிறது. ஆனால் சாதம் பக்குவமாக வேண்டுமானால் தண்ணீர் வேண்டும்; அதிகமாக இருக்கக் கூடாது. ஜீரணமாவதற்கும் ஆகாரம் நீரோடு கலந்து தகள்களாகப் பிரியவேண்டும்; அப்போதுதான் ஜீரண சாரங்கள் புகுந்து அன்னத்தை ஜீரணிக்கும். ஜீரண சாரங்கள் ஆரோக்கியமான உடலில் செழிப்பாய் உண்டாகும். ஆகையால் அவ்வப்போது சாப்பாட்டுக்கு மத்தியில் மிதமாய் நீர் அருந்துவதால் ஜீரண சாரத்தின் ஆற்றல் குறையாது.

டானியல், மதுரை:

கே: உடலைப் பளபளப்பாயும் சிவப்பாயும் கவர்ச்சியாயும் அழகாயும் வைத்துக்கொள்ள என்ன உபாயம்? மிகச் சுலபமான வழி ஏதாவது உண்டா?

வி: இவருடைய வயதும் இயற்கையான நிறமும் தெரிந்தால் நல்ல விடை கொடுக்கலாம். வயதான பிறகு யௌவனத்தைத் தேடுகிறாரோ என்று சந்தேகமாக இருக்கிறது. யௌவனம் இருந்தாலமட்டும் போதாது; ஆரோக்கியமும் வேண்டும், உடம்பு பளபளப்பாயிருக்க. மேலே மருந்து பூசிக்கொண்டு சருமத்தைப் பளபளப்பாக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. நல்ல ஆரோக்கியம் பெறுவதுதான்

சுலபமான வழி என்று சொல்வேன். உடம்பு சிவப்பாக இருக்கச் சிவப்பு வம்சத்தில் பிறந்திருக்க வேண்டும். நிறம் சற்றுக் குறைவாக இருந்தாலும் நல்ல ரத்த ஓட்டமிருந்தால் உடம்புக்குச் சிவப்பு அதிகமாகும். பால் வகைகள் அதிகம் உண்டு, மிதமாய்த் தேகாப்பியாசமும் செய்தால் தேகம் சிவப்பாகவும் பளபளப்பாகவும் ஆகலாம்.

எம். சுப்பிரமணியம், திருவனந்தபுரம்.

கே: கடும் வெயிலில் பாதரட்சை இல்லாமல் நடந்துவிட்டுக் குளிர்ந்த நீரில் முகம் கை கால்களைக் கழுவுவது நல்லதா?

வி: நான் அறிந்த மட்டிலும் தோஷமில்லையென்றே சொல்வேன். இதனால் அயர்வு உடனே தீரும்.

கே: ஒன்றிரண்டு மணி நேரம் பத்திரிகைகள் புத்தகங்கள் படித்தால் கண்ணிலிருந்து ஜலம் வருகிறதே; இதற்கென்ன செய்ய வேண்டும்?

வி: கண் கொட்டாமல் வாசிப்பது கண்ணுக்குச் சிரமம் கொடுக்குமென்கிறார் டாக்டர் அகர்வால் என்ற கண் வைத்திய நிபுணர். சரியான நிலையில் இருந்து வாசிக்க வேண்டும். கண்ணை அகல விழித்து

வாசிக்கக் கூடாது. விருப்பமில்லாத விஷயங்களை வாசித்தாலும் கண்ணிலிருந்து நீர் வழியலாம். கண் வைத்தியரைக் கண்டு கண்ணைச் சோதித்துக் கொள்வது நலம்.

எஸ். மணி, நாகபட்டினம்.

ஒருவனுக்கு நோயில்லாமல் இருக்கலாம். ஆனால் அவனுக்கு நோயைக் கற்பித்த மனக்கலக்கம் எழுப்பும் நண்பர்கள் அநேகர் இருக்கிறார்கள். 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற எச்சரிக்கையைச் சில வீடுகளில் பார்க்கிறோம். அதே போல 'நண்பர்கள் ஜாக்கிரதை!' என்று மேற்கண்ட நண்பர்களின் நெற்றியில், அல்லது சட்டையில் எழுதி ஒட்டி விடுவது அவசியம் என்று ஸ்ரீ எஸ். மணி விஷயத்தில் தோன்றுகிறது.

கே: சோகை நோய்க்கு என்ன அறிகுறிகள்?

வி: ரத்தப் பரீட்சையால் விளங்கும். ரத்தத்தின் நிறம் சுமார் எண்பது சதவிகிதத்துக்கு மேல் சிவந்திருக்க வேண்டும். சிவப்பு ரத்த அணுக்கள் எண்ணிக்கையில் குறைந்திருக்கக் கூடாது. (சுமார் நாற்பது முதல் ஐம்பது லட்சம் இயற்கை யெண்ணிக்கை.) வேறு அறிகுறிகளும் உண்டு. நிபுணரிடம் ரத்த சோதனை செய்து அறிந்துகொள்ளலாம்.

கே: சோகை நோய்க்குக் காரணம் என்ன?

வி: காரணங்கள் பல உண்டு. நம் நாட்டில் முக்கியமானது கொக்கிப் புழு உபத்திரவம். இது குடலில் குடி கொண்டு ரத்தத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சுரக்கச் செய்கிறது.

வேறு காரணங்கள்: மூல நோய், ஆபரேஷன்களுக்குப் பிறகு, பிரசவத்துக்குப் பிறகு, சில முக்கிய விடமின் அம்சங்கள் உணவில் அமையாதிருப்பது, கான்ஸர் போன்ற கொடிய நோய்கள், இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

கே: எவ்விதம் சோகை நோய் ஒருவனைப் பாதிக்கிறது?

வி: அதனால் பசி குறையும்; பிராணவாயுக் குறை உடலில் ஏற்பட்டு மூச்சுத் திணறலாம்.

கே: சோகைக்குப் பரிகாரம் என்ன?

வி: முதலில் காரணத்தை நீக்க வேண்டும். அயம் நல்ல மருந்தாகும். நல்ல போஷாக்கு அமைந்துள்ள உணவையும் உண்ண வேண்டும்.

ஷாவும் பூவும்

பிரபல ஆசிரியர் ஒருவர், அறிஞர் பெர்னார்ட் ஷாவைப் பார்க்க வந்தார். அவர் அறையில் பூக் கிண்ணமே ஒன்றுகூட இராததைப் பார்த்து, "உங்களுக்குப் பூ என்றால் ரொம்பப் பிடிக்கும் என்று கேள்விப்பட்டேனே! இங்கே ஒன்றையும் காணோமே" என்றார் ஆச்சரியத்துடன். அதற்கு ஷா பட்டென்று, "பூ மட்டும் என், குழந்தைகளைக் கண்டால்கூடத் தான் எனக்குப் பிடிக்கும். அதற்காக அவர்கள் தலையை வெட்டிச் செருகி வைப்பது என் வழக்கமில்லை!" என்றார்.

வெளிநாட்டில் ரவீந்திரர்



ரதீந்திரநாத் டாகூர்

உலக மகாகவியான தந்தையுடன் வெளி நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது நிகழ்ந்த சில சம்பவங்களை அவர் மகன் இதில் ரஸமாக எழுதியிருக்கிறார்.

பாரிஸ் நகரத்தில் நாங்கள் ஆல்பர்ட் கன் என்பவரின் விருந்தாளிகளாக வெகு நாள் தங்கியிருந்தோம். தினமும் சாப்பாட்டு வேளையில் பல எழுத்தாளர்களையும் ஓவியர்களையும் நாங்கள் சந்திப்பது வழக்கம். ஹென்ரி பர்க்ஸனுடன் பேசுவது என்றால் என் தந்தைக்கு மிகவும் ஆசை. அவர் தம் தாய் மொழியைப் போலவே வேகமாக ஆங்கிலம் பேசியது, என் தந்தையை மகிழ்வித்தது.

பிரிமாண்ட் என்பவள் பிரான்ஸிலே புகழ் பெற்ற கவி. என் தந்தை மொழிபெயர்த்த வங்கக் கவிதைகளைக் கேட்க அடிக்கடி அவள் வருவாள். சில சமயங்களில் அவள் அவரை மூலத்தை ஒப்பிக்கச் சொல்வாள். அவருடைய சில நூல்களை மொழிபெயர்க்க அவள் ஆசைப்பட்டாள். நோயலிஸ் என்பவளுக்கும் அந்த நாட்டில் மிகுந்த பிரக்கியாதி இருந்தது. ஒரு நாள் பிற்பகலில் அவளே எங்களைத் தேடிக்கொண்டு வந்தாள். ஒளி வீசும் அவளுடைய முகத்தைக் கண்டு நாங்கள் அதிசயித்தோம். இளமையில் அவள் வெகு அழகியாக இருந்திருக்க வேண்டும். அவள் என் தந்தையிடம் பேசிவிட்டுத் திரும்பிய பொழுது, "நான் உங்களை வெல்ல வேண்டும் என்று வந்தேன்; இப்போது உங்கள் பக்தையாகத் திரும்புகிறேன்!" என்று பணிவாகச் சொன்னாள்.

பிரான்ஸில் நாங்கள் தங்கிய வரையில் கார்பெலிஸ் சகோதரிகள் எங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். ஐரோப்பாவின் கலைப் பொக்கிஷம் என்றே பாரிஸ் நகரைச் சொல்லலாம். அந்த நாட்டில் செல்வம், கலை, பண்பாடு, உயர்ந்த வாழ்க்கை அனைத்தையும் அறியும் பாக்கியம் எங்களுக்குக் கிட்டியது.

புரொபசர் லெவியின் வீட்டில் எங்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. கவர்ச்சியே இல்லாத ஒரு சூழ்நிலையில் அவர் வாழ்ந்து வந்தார். ஆனால் வீட்டுக்குள் சென்றதும் அங்கே நாங்கள் கண்ட தூய்மை எங்களை வியப்பில் ஆழ்த்தியது. புரொபஸர் லெவி பெரிய மேதை; வட மொழியில் நல்ல புலவர்; வேடிக்கையாய்ப் பேசுவார்; எல்லாருடனும் சகஜமாகப் பழகுவார். தம் மாணவர்களோடு அவர் பழகும் முறை, பழைய காலத்துக் குரு சிஷ்ய பரம்பரையைப்போல இருந்தது. என் தந்தை அவரைச் சாந்திநிகேதனத்துக்கு அழைத்தார்.

காப்பிரைட்: விசுவபாரதி க்வார்ட்டர்லி (ஆங்கிலம்: நவம்பர் '52—ஜனவரி '53), சாந்திநிகேதனம், மேற்கு வங்காளம்.

அவரும் வர ஒப்புக்கொண்டார். வெளி நாட்டிலிருந்து சாந்தி நிகேதனத்துக்கு யாத்திரை வந்த முதல் புரோபசர் அவர்தான்.

பிரான்ஸில் மிகவும் சிறந்த எழுத்தாளர்களான இருவரைச் சந்திக்க வேண்டுமென்று தந்தைக்கு ஆசை. 'கீதாஞ்சலி'யை மொழிபெயர்த்திருந்த அந்த்ரே கிதேயை இன்னும் அவர் சந்திக்கவில்லை. ரோலந்தின் புத்தகங்களும் அவர் நெஞ்சைக் கவர்ந்திருந்தன.

ரோலந்தைப்பற்றி நான் விசாரித்தபோது யாருமே எனக்குத் தகவல் சொல்வதாக இல்லை. ஜெர்மானியரிடம் அவருக்கு இருந்த அநுதாபத்தைப் பிரெஞ்சுக்காரர்கள் விரும்பாததே இதற்குக் காரணம். இத்தனைக்கும் அவர் அப்போது பாரிஸிலேயே இருந்தார். மிகுந்த சிரமத்தோடு நான் அவருடைய விலாசத்தைக் கண்டு பிடித்தேன். அதற்கு முன்னுல் நான் அவரைப் பார்த்ததில்லை; அவருடைய படத்தைக்கூடக் கண்டதில்லை. நான் அவர் வீட்டுக்குப்போய்க் கதவைத் தட்டினேன். பள்ளிக்கூட வாத்தியாரைப்போல இருந்த ஒல்லியான ஒருவர் வந்து கதவைத் திறந்தார்; வயதான அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். எனக்கு அவருடைய தோற்றம் கவர்ச்சிகரமாகப் படவில்லை. அவருடைய நூல்களைப் படித்து அவரை நான் ஒரு சுந்தர புருஷராகக் கற்பனை செய்திருந்தேன். இப்போது அவரை நேரில் பார்த்ததும் அவரோடு என்ன பேசுவதென்றே எனக்குத் தெரியவில்லை. ரோலந்துக்கு ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை கூடப் பேசத் தெரியாது என்பதை அடுத்த கணமே தெரிந்துகொண்டேன். என் அரைகுறைப் பிரெஞ்சு அறிவோ அங்கே துளியும் பயன்படவில்லை. ஆதலால், என் ஆசை நிறைவேருமலே நான் அவசரமாகத் திரும்பினேன். பிறகு நீண்ட நாள் கழித்து, நாங்கள் ரோலந்தோடு நெருங்கிப் பழகினேம். அப்போது அவர் ஸ்விட்ஜர்லாந்தில் நிலைத்திருந்த காலம்.

அந்த்ரே கிதேயை நான் சந்தித்த சம்பவம் இதைவிட மோசமானது. ஒரு நாள் காலையில் என் மனைவியுடன் வழக்கம்போல உலாவப் போனேன். அந்த்ரீ கார்பெலிஸும் எங்கள்கூட இருந்தாள். அவள் விந்தையான ஒரு புதிய கட்டடத்தைக் காண்பித்து, "இதுதான் கிதே இருக்கிற வீடு. அவர் ஒரு மாதிரியான மனுஷர். வருகிறவர்களை ஏனென்றுகூடக் கேட்கமாட்டார்" என்ருள். எப்படியும் பார்த்துவிடுவது என்ற உறுதியோடு நாங்கள் அந்த வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினேம். சில நிமிஷம் பொறுத்து மறுபடியும் தட்டினேம். அந்த வீட்டின் அமைதி இதனுல் சிறிதும் குலைந்ததாகத் தெரியவில்லை. 'சரி, நாம் திரும்பிவிடலாம்' என்று நாங்கள் நினைத்தபோது, திடீரென்று ஒருவர் வந்து கதவைத் திறந்தார். நீண்ட அங்கியை அணிந்திருந்த அவர் எங்களை ஒரு கணம் முறைத்துப் பார்த்தார்; கதவை நன்ருகத் திறந்து வைத்தார்; அடுத்த நொடியில் விர்ரென்று மறைந்துவிட்டார். இரண்டு இரண்டு படிகளாகத் தாண்டி அந்த ரகசிய வீட்டுக்குள்ளே பறந்தோடிய அவரைச் சிறிது நேரம் பார்த்தபடி நின்றேம். கிதே இப்

படி நடந்துகொண்டதற்குக் காரணம் அவருடைய கூச்சந்தான் என்று அந்த்ரீ சொன்னாள்.

பாரிஸில் நாங்கள் சந்தித்தவர்களுக்குள், விக்டோரியா ஒகம்போவும் குறிப்பிடத் தகுந்தவள். அவளுடைய சொந்த நாடாகிய அர்ஜெண்டைனாவில் அவளுக்குப் பெரும் புகழ் இருந்தது. ஆசிரியை, ஓவிய நிபுணை, கவி என்ற முறையில் பாரிஸிலும் அவளுக்கு நல்ல பெயர் உண்டு. அவள் அடிக்கடி அங்கே வருவாள். அவளுடைய காம்பீரியமும், நடந்துகொள்ளும் முறையும் எல்லாரையும் வசீகரித்தன. என் தந்தையிடம் அவள் நேராக வேகமாய் வருவாள்; எதிரே யார் இருந்தாலும் அதைப் பற்றி அவளுக்கு அக்கறை இல்லை. பெருவில் ஒரு கூட்டத்துக்குத் தந்தை கிளம்பியபோது, அதனால் அவருடைய உடல்நலம் கெட்டுவிடும் என்று அவள் தடுத்தாள். அவள் சொன்னது பிறகு உண்மையாயிற்று. தந்தை அவள் வீட்டில் வழக்கமாக ஒரு நாற்காலியில் உட்காருவது வழக்கம். கப்பல் புறப்படுவதற்கு இருந்த சமயத்தில், அவள் கப்பல் அதிகாரிகளோடு வாதாடி, அந்த நாற்காலியையும் ஏற்றிவிட்டாள். இப்பொழுதும் அந்த நாற்காலி 'ரவீந்திர ஸதன்' மியூசியத்தில் இருக்கிறது.

1930-இல் என் தகப்பனார் மீண்டும் பாரிஸுக்குப் போனபோது, தம்முடைய சில ஓவியங்களை அங்கே கண்காட்சியாக வைக்க விரும்பினார். பாரிஸில் ஓவியக் கண்காட்சி அமைப்பது மிகவும் சிரமம். பல மாதங்களுக்கு முன்பே ஏற்பாடு செய்தால்தான் அது நடக்கும். தந்தைக்கு அந்தச் சமயத்தில் என்ன செய்வதென்று தெரியவில்லை; ஒகம்போவின் உதவியை நாடினார். அவள் தன் செல்வாக்கினால், ஒரு பெரிய தியேட்டரைப் பிடித்து வேண்டிய விளம்பரங்களைச் செய்து, கண்காட்சிக்கு ஜோரான ஏற்பாடு செய்துவிட்டாள்.

யுத்தத்துக்குப் பின் ஜெர்மனிக்கு நேரே செல்ல முடியாமல், நாங்கள் ஹாலந்துக்குப் போனோம். அங்கே தந்தையின் புத்தகங்களை டச்சு பாஷையில் மொழிபெயர்த்த டாக்டர் ஈடனைச் சந்தித்தோம்.

ஜெர்மனிக்குச் சென்றதும் எங்களுக்குக் குதூகலமான வரவேற்புக் கிடைத்தது. அங்கே நாங்கள் ஹெஸ் கோமகன் மாளிகையில் தங்கினோம். அவருக்கு இப்பொழுதும் நாட்டில் நல்ல மதிப்பு இருந்தது. அதற்குக் காரணம், அவர் கெய்ஸருக்கும் விக்டோரியா ராணிக்கும் உறவினர் என்பது அல்ல; பொது மக்களிடம் அவர் மிகவும் அன்பாக நடந்துகொண்டதுதான். புரட்சிக்குப் பிறகும் மக்கள் அவரை மதித்தார்கள். புரட்சியின்போது நடந்த பல சம்பவங்களை அவர் எங்களுக்குச் சொன்னார். ஒரு நாள் ஒரு பெரிய கூட்டம் அவர் மாளிகை வாசலில் வந்து, "இந்த மாளிகை எங்களுக்குச் சொந்தம்!" என்று கூச்சல் போட்டதாம். அவர் நேராகப் போய்க் கதவுகளைத் திறந்து, எல்லாரையும் வரவேற்று, "இங்கே ஆனந்தமாக இருங்கள்!" என்று சொன்னபோது, அவர்கள் திகைத்துவிட்டார்கள். அந்தக் கூட்டத்தை நடத்தி வந்தவன் அவருடைய நாவிதன். அவர்கள் நேராக உள்ளே போய் நிறையச் சாராயம் குடித்தார்கள். அவரது அநுமதி

யுடன் அவருடைய கார்கள் எல்லாவற்றையும் அவர்கள் வெளியே கொண்டு வந்தார்கள். இவ்விதப்படி ஊர் சுற்றினார்கள். மாலையில் எல்லாம் அமைதியாகிவிட்டதாம்.

ஞாயிறன்று கோமகன் எங்களைப் பவனி அழைத்துச் சென்றார். ஒரு பார்க்கில் நாங்கள் இறங்கியதும், மக்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். என் தந்தையை ஓர் உயர்ந்த மேடையில் உட்கார வைத்துவிட்டு, அவர்கள் சுற்றி நின்றார்கள். ஆனந்தமாய்ப் பல பாட்டுக்கள் பாடினார்கள். அந்தக் கூட்டத்துக்குத் தலைவன் எவனும் இல்லை; ஆயினும், இரண்டாயிரம் பேர் கொண்ட அந்தக் கூட்டம் அமைதியாய்ப் பாடியது. பொது மக்களின் இந்த அன்பான வரவேற்பு, தந்தையின் நெஞ்சை உருக்கியது. அந்த இடத்தை விட்டுப் பிரியவே எங்களுக்கு வருத்தமாக இருந்தது.

தந்தை அங்கிருந்து ஸ்வீடனுக்குப் போனார். ஐரோப்பாவிலே மிகவும் அழகான நகரம் ஸ்டாக்ஹோம். விருந்தின்போது தந்தை பல எழுத்தாளர்களைச் சந்தித்தார். ஸ்வீடன் அரசர் தலைமை வகித்தார். நோபெல் கமிட்டியார் நடத்திய அந்த விருந்தில், அந்த வருஷம் பரிசு பெறுவதற்கு நுட் ஹாம்ஸனையும் அழைத்திருந்தார்கள். அவர் வந்திருந்தார். மேஜையில் ஒயினும் பிற சாராய வகையும் ஏராளமாக இருந்தன. நுட் ஹாம்ஸன் ஆசை தீரக் குடித்தார். முதலில் சில பிரசங்கங்கள் ஆனதும், நுட் ஹாம்ஸனைப் பேசச் சொல்ல வேண்டுமென்று பார்த்தபோது, அவர் நாற்காலி காலியாக இருந்தது. மேஜையடியிலே பதுங்கிக்கொண்டு, வேறு ஒருவரைப் பேசச் சொல்லும்படி அவர் சமிக்ஞை செய்தார். ஆனால் பிறகு அவர் வெளியே வந்து நன்றாகப் பேசினார்.

ஒரு நாள் ஓர் ஆஸ்திரியப் பெண்மணி, வியன்னாவிலிருந்து என் தந்தையைப் பார்க்க வந்திருந்தாள். அவர் தன் நாட்டுக்கு வந்து பிரசங்கம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி அழைத்தாள். தந்தையின் பிரசங்கங்களுக்குப் பணம் சேகரித்துக் கொடுப்பதாகவும் அவள் சொன்னாள். "உங்கள் பிரசங்கத்துக்காக எங்கள் வியன்னா மக்கள் ஒரு வாரம் கூடப் பட்டினி இருந்து பணம் சேர்த்துக் கொடுப்பார்கள்" என்றாள். பிராஹாவுக்குப் போய்ப் புரொபஸர் விண்டர்னிட்ஸ் முதலியவர்களோடு பழகிய பிறகு அவள் விருப்பப்படி ஆஸ்திரியா சென்றோம்.

வியன்னாவில் பசியால் தவிக்கும் மக்களின் நிலையைக் கண்டோம். போருக்கு முன்பு அழகிய நகராக இருந்த வியன்னா, இப்போது வாடிய மலராக இருந்தது. ஆயினும் மக்கள் அந்த நிலையிலும், ஓவியங்களையும் கலைப் பொக்கிஷங்களையும் பாதுகாத்தார்கள். ஜனங்கள் பட்டினி இருந்து பணம் சேமித்து, அதைக் கொண்டு நாடகங்கள் பார்த்தார்கள். என் தகப்பனார் தம்முடைய பிரசங்கங்களுக்குக் கிடைத்த பணத்தை அப்படியே திருப்பிக் கொடுத்து வியன்னாவில் பசியால் வாடிய குழந்தைகளின் போஷணைக்காக அதைப் பயன்படுத்தச் சொன்னார். இதனால் ஆஸ்திரியர் அவரிடம் பேரன்பு கொண்டார்கள்.

தாம் புலிவேட்டை ஆடிய பெருமையை
ஒரு கவர்னரே சொல்லுகிறார், கேளுங்கள்!

கவர்னரின் புலிவேட்டை

கே. எம். முன்ஷி

புலி வேட்டை! கேட்பதற்கே பெருமையாக இல்லையா? ஆனால் என்னைப் பொறுத்தமட்டிலும் வேட்டை என்பதற்கே அர்த்தம் இல்லை.

ஹிம்ஸையே நிறைந்த நவ நாகரிக உலகில் அஹிம்ஸை வாழ்வே நடத்தி வந்தவன் நான்; என் கனவுலகுமட்டும் இந்த விதிக்கு விலக்கு. ஒரு தடவை, ஒரே ஒரு தடவை மட்டும், நானும் உலகத்தோடு ஒத்து வாழ முயன்றேன்; பலன் தோல்விதான்.

1924-இல் சில நூறு ரூபாய்களைச் செலவழித்து நான் ஒரு துப்பாக்கியும், ஒரு கைத் துப்பாக்கியும் வாங்கினேன்; ஸாந்தா க்ரூஸ் என்னும் இடத்தில் துப்பாக்கி சுடப் பழகும் மைதானத்தில் நானும் சுடப் பழகிக் கொண்டேன். என்ன நேர்ந்தது தெரியுமோ? துப்பாக்கியின் உதையால் என் தோளில் வலி கண்டதுதான் பலன். இதனால் நான் ஒன்று தெரிந்துகொண்டேன்: ஹிம்ஸைக்குத் தக்க தண்டனை உண்டு.

பிரகு இந்த ஆயுதங்களையெல்லாம் மூட்டை கட்டிப் பத்திரமாக வைத்துவிட்டேன். 1930-இல் உப்புச் சத்தியாக்கிரகம் செய்து சிறை செல்ல முனைந்த எனக்கு இந்த ஆயுதங்கள் காரணமாகப் பெருங்கவலை எற்பட்டது. போலீஸ் சோதனையின்போது இவை என் வீட்டில் அகப்படுவது எனக்கு இஷ்டமில்லை. எனவே, என் நண்பர் லூனுவாடா மகாராஜாவிடம் இவைகளைக் கொடுத்துவிட்டேன்.

இப்போது நான் கவர்னரல்லவா? எனக்குச் சில கடமைகள் இருக்கின்றன. என் ராஜ்யத்திலுள்ள புலி ஒன்றை முறைப்படி கொன்று புலிகளின் சமூகத்தைப் பெருமைப் படுத்த வேண்டியது அந்தக் கடமைகளுள் ஒன்று. எனக்கு முன்னிருந்த கவர்னரின் மனைவியும், சாதுவான லேடி மோடிகூட இந்தச் சடங்கில் ஈடுபட்டாளாம். புலி ஒன்றைக் கொன்று உத்தரப் பிரதேசப் புலிச் சமூகத்தின் கௌரவத்தை அவள் காப்பாற்றினாளாம்.

ஹல்துவானுக்குப் பக்கத்திலுள்ள காட்டிலிருந்த மூன்று புலிகள் கால்நடைகளைச் சாமர்த்தியமாகத் திருடிக் கொல்வதில் பிரசித்தி பெற்றுவிட்டன. ஏதாவது செய்தாக வேண்டும். கடமையைச் செய்யும்படி என் ராஜ்ய அதிகாரிகள் என்னை வேண்டினார்கள். ஒரு புலிக்குச் சாவு விருது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அது என் கடமை என்று சொன்னபடியால் நானும் தயாரானேன்.

ஜூன் மாதம் 15-ஆம் தேதி காலை 9 மணிக்கு எங்கள் கோஷ்டி ஆடம்பரமாக லால்குவா, 'இன்ஸ்

காப்பிரைட்: ஃப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 12-7-'53)
ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

பெக்ஷன் ஹௌஸ்' என்ற இடத்துக்குக் கிளம்பியது. அங்கிருந்து பல உத்தியோகஸ்தர்களோடு, ஒரு பழைய 'ஃபோர்டு' காரில் ஏறி அதன் முக்கல் முனகல்களையெல்லாம் அநுபவித்துக்கொண்டே நாங்கள் காட்டை நோக்கிச் சென்றோம்.

கடைசியாக நாங்கள் அடைய வேண்டிய இடத்தை அடைந்தோம். யானைகள் தயாராக இருந்தன. அநுபவம் இல்லாததால் ஆத்திரத்தோடு நானும் என் மனைவியும் ஒரு யானையின்மேல் தொத்தி ஏறிக்கொண்டோம். தலை கீழாகத் திருப்பிய ஒரு கட்டிலை, யானையின் மேல் அவசர அம்பாரியாகக் கட்டியிருந்தார்கள். அதன்மேல் நாங்கள் உட்கார வேண்டியிருந்தது. மேல் நோக்கி நீட்டிக்கொண்டிருந்த கட்டிலின் கால்கள் ஒவ்வொன்றை நாங்கள் ஒவ்வொருவரும் இறுகக் கட்டிக் கொண்டோம். கையில் ஒரு கைத்தடியோடு மோட்ச லோகத்தை நோக்கிக் குதித்துக் குதித்துச் செல்லும் ஒரு யாத்திரிகன் நான் என்ற நினைப்பு என்ன காரணத்தாலோ அப்போது எனக்கு வந்தது.

'ஊபர்' (மேலே) என்று மாவுத்தன் கத்தியவுடன், யானை தன் துதிக்கையைத் தூக்கி எங்கள் தலையில் படும்போல் இருந்த ஒரு மரக்கிளையை முறித்தது. எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. நம் பண்டிதர்கள் நினைக்காத முறையில் நம் தேசிய பாஷையான ஹிந்தி முன்னேறுவதை நான் கண்டேன். 'நீச்சே' (கீழே) என்று மாவுத்தன் மீண்டும் சொன்னவுடன் யானை எங்கள் முன்னே இருந்த புல்லைப் பிடுங்கி எறிந்தபோது என் சந்தோஷத்துக்கு எல்லையே இல்லை. யானைகளே இவ்வளவு சுலபமாக ஹிந்தி கற்றுக்கொள்ள முடியுமானால், நம் நாட்டு மக்களுள் சிலர் யானையை விடவா மந்தமானவர்கள்? என்றால் இதை நம்ப முடியவில்லை. ஒரு வேளை யானை முகத்தை விரும்பி ஏற்ற ஞானக் கடவுளாகிய கணேசரின் ஆசீர்வாதம் இந்த யானைகளுக்கு இருக்குமோ என்னவோ?

பரண்கள் கட்டியிருந்த இடத்தை நாங்கள் விரைவில் அடைந்தோம். எங்கள் யானை ஒரு மரத்துக்குப் பக்கத்தில் போய் நின்றது. இந்த மரத்தில் நான் ஏற வேண்டுமாம். 1897 முதல் நான் இந்த வித்தையைச் செய்ததில்லை. எனக்குப் பூணூல் போட்ட போது, "நீ மரத்திலேயே ஏறக் கூடாது" என்று என் குரு எனக்குச் சொன்னார். நல்ல பையனாக நான் அந்தக் கட்டளைப்படியே நடந்து வந்திருக்கிறேன். இப்போது கீழே இருந்து ஒருவர் என்னைத் தாங்கவும் மேலேயிருந்து, 'ஃபாரஸ்ட் ஆபீஸர்' என்னைப் பிடித்து இழுக்கவும் எப்படியோ முண்டியடித்து நான் அந்த மரத்தில் ஏறினேன்.

யானை பிறகு இன்னொரு மரத்தருகே சென்றது. எனக்கு எதிரே இருந்த ஒரு பரணுக்குள் என் மனைவியையும் 'டெபுடி கமிஷன'ரையும் சரசரவென்று அது இழுத்துப் போட்டது.

நான் எப்படியோ சமாளித்துப் பரணில் உட்கார்ந்தேன். பரணும் ஒரு கட்டில்தான். சிரமப்பட்டு உட்கார்ந்திருந்த நான் தவறி விழுந்தால், பூமியை அடைய எவ்வளவு தூரம் பிரயாணம் செய்ய வேண்டி இருக்குமென்று கணக்குப் போடத் தொடங்கினேன்.

ஒருவன் உபயோகமில்லாத காரியம் ஒன்றைச் செய்துவிட்டுப் பிரமாதமாக ஜம்பம் பேசினுல், "என்னவோ புலியைக் கொன்றவன் போல்பேசுகிருனே!" என்று எங்கள் வகுப்பினர் சொல்வார்கள். புலியைக் கொல்வது லேசான காரியம் அல்ல. அதன் இருப்பிடத்தை முதலில் நிர்ணயிக்க வேண்டும். பிறகு ஓர் எருமையையோ ஆட்டையோ இரையாகக் கட்டி, புலியை அதனிடம் இழுக்கவேண்டும். வேட்டை ஆரம்பத்தில் மனிதர்களும் மிருகங்களும் ஒரு வட்டமாக நின்று கொள்வார்கள். வேட்டைக்காரர்கள் எழெட்டுப் பரண்களில் உட்கார்ந்துகொள்வார்கள். மரங்களில் உட்கார்ந்திருக்கும் மனிதர்கள் இரண்டு பக்கத்தை மறைத்துக்கொள்வார்கள். பரண்கள் இல்லாத பக்கமாகப் புலி ஓடிவிடாதபடி இவர்கள் கைகளைத் தட்டிச் சத்தம் செய்து ஓட்டுவார்கள். அடிப் பக்கத்தில் யானைகளும் பறையடிப்போர்களும் இருப்பார்கள். எங்கள் கோஷ்டியில் பறையடித்து மிரட்டுகிறவரின் தொகை 100-க்கு மேல் இருந்தது.

பகல் 12 மணிக்கு முன்னுலேயே நான் பரணில் ஏறிவிட்டேன். மரத்தின் மேல் இருப்பது எனக்கு இன்பமாக இருந்தது. அங்கே நிழலாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது. காற்றில் புல் சலசலப்பது இன்பமாக இருந்தது. பறவைகள் பாடின; பல நிறப் பட்டுப் பூச்சிகள் பலநிற நெருப்புப் பொறிகள் போல் மரத்துக்கு மரமும் புதருக்குப் புதரும் பறந்துகொண்டிருந்தன.

என்னுேடு கூட இருந்தவர் சிறந்தவேட்டைக்காரர். அவருக்கு இருப்புக் கொள்ளவில்லையானுலும் அவர் சந்தோஷமாகவே இருந்தார். அவர் சுற்றிலும் பார்த்தார். தம் கையிலிருந்த துப்பாக்கியை அன்போடு தொட்டுப் பார்த்துக் கொண்டார். பிறகு ரகசியமாக என்னிடம், "புலி நம் பரண் அல்லது அம்மாள் இருக்கும் பரண் இரண்டில் ஒன்றுக்கு அடியிலேயே வரும்படி ஏற்பாடு செய்திருக்கிறது" என்று சொன்னுர். அப்போதுதானே நான் கொல்லாவிட்டாலும் என் முன்னிலையிலாவது கொல்லப்படும் கௌரவம் புலிக்குக் கிடைக்கும்!

புலியை நோக்கி முதல் குண்டு போட எனக்கு விருப்பமா என்று, கூட இருந்த உத்தியோகஸ்தர் அன்போடு என்னைக் கேட்டார்; "அது உங்கள் தனி உரிமை" என்றும் அவர் கூறினுர். அந்தக் கௌரவத்தை நன்றியோடு புறக்கணித்து விட்டேன்; எனக்குத் தான் நான் துப்பாக்கி சுடும் லட்சணம் தெரியுமே! பல வருஷங்களுக்கு முன்னுல் பன்னு ராஜா சொன்ன சில சம்பவங்கள் இப்போது என் நினைவுக்கு வந்தன.

சில ராஜப்பிரதிநிதிகளுக்குத் துப்பாக்கியைச் சரியாகப் பிடிக்கவே தெரியாது. என்றுலும், புலியைச் சுட அவர்கள் விரும்புவார்கள். அந்தப் பதவியில் இருக்கும் அவர்கள் இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. ஒரு முறை மிருகக்காட்சிச்சாலை ஒன்றிலிருந்து இரண்டு மூன்று நாள் பட்டினி போட்ட சோனிப் புலி ஒன்றை ராஜப்பிரதிநிதி சுடக் கொண்டு வந்தார்கள். இரையைக் கண்ட அந்தப் புலி வெகு ஆவலோடு அதை நெருங்கிப் பலகாரம் செய்யத் தொடங்கிவிட்டது. ராஜப்

பிரதிநிதி சுட நல்ல இலக்காக அது இருந்தது. ராஜப்பிரதிநிதி சுட்டார். குண்டு புலியின் கழுத்தில் பாய்ந்து அதைக் கொன்றுவிட்டது என்று, கூட இருந்த வேட்டை நிபுணர்கள் உறுதி கூறினார்கள். பிறகு இந்த நிபுணர்கள் செத்த புலியைப் பார்க்க நெருங்கியபோது புலியின் மேல் குண்டு பட்ட சுவடே காணவில்லை; பயந்து போன அவர்கள் உடனே குறிப்பிட்ட இடத்தில் ஒரு குண்டைப் போட்டு வைத்தார்கள். மிகப் பழங்காலத்தில் இவ்வளவு கணக்காகச் சுடுவது சாதாரணம்! ஏற்கனவே சுட்டுக் கொல்லப்பட்டிருந்த புலி ஒன்றை வேல்ஸ் இளவரசர் ஒரு முறை சுடவில்லையா?

இப்படிப் பழங்கணக்குப் பார்த்துக்கொண்டு பரணில் உட்கார்ந்தபடியே நான் கவலையோடு புலியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். என் தோழர் எழுந்திருப்பதும் உட்காருவதும் துப்பாக்கியைத் தடவிக் கொடுப்பதும் சுற்றிலும் பார்ப்பதுமாக இருந்தார். என் மனைவியின் பரணிலிருந்த டெபுடி கமிஷனரும் இப்படியே செய்யத் தொடங்கினார்.

பறையடிப்போரின் தலைவன் நெருங்கிக்கொண்டே இருந்தான். "அது வெளியே வருகிறது" என்று என் தோழர் காதோடு சொன்னார். மரத்தின் மேல் இருந்தவர்கள் கையைத் தட்டினார்கள். "அது வெளியே வருகிறது" என்று மறுபடியும் அவர் என் காதோடு சொன்னார். மூச்சை அடக்கிக்கொண்டு நாங்கள் காத்திருந்தோம்; வெகு நேரம் காத்திருந்தோம். ஒரு புள்ளிமானும் ஒரு கலைமானும் புதர் ஒன்றிலிருந்து வெளிப்பட்டுப் பாய்ந்து ஓடின. "சுடட்டுமா?" என்று என் தோழர் கேட்டார். "வேண்டாம்; வேண்டாம். நாம் புலியைச் சுட வந்திருக்கிறோமே ஒழிய இந்தச் சாது மிருகங்களை அல்ல" என்றேன் நான்.

எனக்கு எதிரேயிருந்த பச்சைப் புல் அசைவதைக் கண்டு கூர்ந்து கவனித்தேன். என் தோழரும் அப்படியே கவனித்தார். அவருடைய துப்பாக்கி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் அசைந்தது. திடீரென்று அந்தப் புதருக்குள்ளிருந்து ஒரு பெரிய மிருகம் வெளி வருவதைக் கண்டேன். என் தோழரின் உடம்பு விறைத்தது. அவர் வேகமாகக் குறி பார்த்துச் சுட்டார். கம்பீரமான அந்தப் பிராணியின் போக்குச் சட்டென்று தடைப்பட்டது. ஒரு பெரிய கர்ஜனையோடு அது மேல் நோக்கிப் பாய்ந்தது. இரண்டாவது வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. துடிதுடித்துக் கொண்டிருந்த தசைப் பிண்டம் ஒன்று தரையில் விழுந்து புரண்டு உருண்டது. உயிரை விட்டுக்கொண்டிருந்த அந்தப் புலியை நான் பார்த்தேன். அதன் கண்களில் துக்கமோ ஆச்சரியமோ தென்படவில்லை. உத்தரப் பிரதேசக் கவர்னரின் சந்நிதானத்தில் தான் இறந்ததுபற்றிய பெருமைதான் அதன் கண்களில் பிரகாசித்தது. வேஷ்டியும் கதர்க் குல்லாயும் அணிந்திருந்தாலும் நான் கவர்னர் கவர்னர்தானே! அது ஓர் அற்புதமான காட்சி......

நிஜமாக நான் மேலே சொன்ன காட்சி ஒன்றையும் காணவில்லை; கனவும் காணவில்லை; என் மனத்தில் தோன்றிய ஒரு தோற்றம் அது. தோழர் இன்னமும் துப்பாக்கியை வருடியவண்ணமே

இருந்தார். நாங்கள் புலியை எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். அதைக் காணவில்லை.

பிறகு தூரத்துப் பரண் ஒன்றி லிருந்து துப்பாக்கிச் சத்தம் கேட் டது. ஆனல் புலியைக் காண வில்லை. மணி இரண்டடித்து ஐந்து நிமிஷமானபோது யானைக ளுடன் பறைக்காரர்கள் எங்க ளுக்கு எதிரே இருந்த புதர்களைக் கடந்து எங்களை நோக்கி வந்தார் கள். யாரோ ஒருவர் எங்கள் பரணை நெருங்கி, "ஒரு புலியையும் இரண்டு கரடிகளையும் சுட்டாகி விட்டது" என்ருர். போலீஸ் சூப்பரிண்டெண்டெண்டும் மெய் காப்பாளரில் ஒருவரும் ஓர் உத்தி யோகஸ்தரும் அவற்றைச் சுட் டார்களாம்.

ஒரு விஷயம் என்னவோ உண்மை. இந்த மிருகங்கள் துப் பாக்கியால் சுடப்பட்டவைதான். சுட்டவர்கள் எங்கள் கோஷ்டி யார்தான். புலிகள் செத்துவிட் டனவா இல்லையா என்று நிச்சய மாகச் சொல்ல முடியவில்லை. உத்தியோகஸ்தர்கள் மரத்தின் மேல் இருந்து யானையின் முதுகில் இறங்கி அதைச் சோதிக்கச் சென் ருர்கள். என்னையும் என் மனைவியை யும் மட்டும் எங்கள் பரணிலேயே விட்டுப் போய்விட்டார் கள்.

சற்று நேரத்துக்குப் பின் நாங் கள் ஒரு புலியைக் கொன்றது உண்மைதான் என்பது தெரிய வந்தது. எனவே, ஒரு யானையின் மேல் ஏறிக்கொண்டு நாங்கள் புலி யைப் பார்க்கப் போனேம். செத்த கரடி ஒன்றையும் பார்த்தோம். அதன் ஜோடி புண்பட்ட போதி லும் தப்பி ஓடிவிட்டது என்று சொன்னர்கள்.

இதற்குள் நாங்கள் எல்லாரும் நிமிந்து நின்றேம். எப்படியோ நிமிர்ந்து காலகளை ஊன்றி நிற்கக் கடைசியில் என்னல் முடிந்தது. இந்த மிருகங்களைச் சுட்டவர்களை நான் பாராட்டினேன். வேட்டை வெற்றியாக முடிந்ததற்காக அவர் கள் என்னைப் பாராட்டினுர்கள். பறைக்காரர்கள் வேட்டைக்காரர் களைப் பாராட்டினுர்கள். வேட் டைக்காரர்கள் பறைக்காரர்களைப் பாராட்டினுர்கள். இப்படியாக எல்லாரும் ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொண்டோம். எல் லாமே மனத்தை உருக்கும் காட்சி யாக இருந்தன.

பிறகு திரும்பவும் அந்தப் பழைய ஃபோர்டில் ஏறி, 'இன்ஸ்பெக்ஷன் ஹௌஸை' அடைந்தோம். எங் கள் வெற்றியைக் கொண்டாட வேண்டாமா? அந்தச் செத்த மிரு கங்களை எங்கள் முன் கொண்டு வந்து போட்டார்கள். போட்டோ எடுத்தார்கள். நானும் என் மனைவி யும் நடுநாயகமாக விளங்கினேம். எங்களைச் சுற்றிலும் கூட வந்த உத்தியோகஸ்தர்களும் பிறரும் இருந்தார்கள்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு நாங்கள் நைனிடாலுக்குப் புறப் பட்டோம். இனி எப்போதாவது திரும்பி வரும் என்று எதிர்பார்க்க முடியாத இந்தச் சந்தர்ப்பத்தின் ஞாபகார்த்தமாக, புலி கரடி களின் தோல்களை நான் என்றும் என்னிடம் வைத்திருப்பேன்.

கவர்னரின் வேட்டை இப்படி முடிந்தது. இரண்டு மணி நேரம் கவலையோடு ஒரு மரத்தின்மேல் தொத்திக்கொண்டிருந்ததும், பிறகு இரண்டு செத்த மிருகங்களைப் பார்த்ததுந்தான் அப்போது கவர் னர் செய்த வேலை!

பல சரக்கு

★

ஒரு வீட்டு ஜன்னலில் கண்ணாடிக் கதவு போட்டிருந்தது. வீட்டுக்குள்ளே நீலப்பூ ஒன்று கிடந்தது. ஜன்னலுக்கு வெளியே ஒரு தேனீ வந்து சேர்ந்தது. அது திரும்பத் திரும்ப இந்தக் கண்ணாடிக் கதவை மோதி உள்ளே நுழைய முயன்றது. காரணம் என்ன? அந்த நீலப்பூவின் மீது தேனீக்குக் கவர்ச்சி ஏற்பட்டிருக்குமோ ஒரு வேளை? இப்படி ஒருவர் கேட்ட கேள்விக்கு, பிரிட்டிஷ் தேனீ ஆராய்ச்சிச்சாலை ஒன்றின் அதிபர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். நீலப்பூவின் மீது அப்படி ஒன்றும் தேனீக்கு அலாதி மோகம் இல்லையாம். விஷயம் புரியாமல் கண்ணாடி வழியாகப் பறந்து செல்ல அநேக சமயம் தேனீ முயல்வதுண்டாம். பூவின் வாசனைதான் தேனீக்கு முக்கியமாம். ஆனால் கொத்துப் பூக்களின்



நிறத்தைக் கொண்டும் சில சமயம் அது வழிகண்டுகொள்வதுண்டாம்.

* * *

ஒரு பர்மிய மணமகளின் படம் இது. பர்மாவில் யுத்தகாலத்தில் சேவை செய்த பிரிட்டிஷ் ஸோல்ஜர் ஒருவர் எடுத்தது. "இவள் பரிபூர்ண அழகி. இவளைப் போன்ற அழகியை நான் வேறு எங்கும் கண்டதில்லை" என்கிறார் அவர்.

* * *

நம் நாட்டில் நிறை பார்க்க, ஓர் அணாக் காசைப் போட்டால், நிறை அச்சிட்ட டிக்கட் ஒன்றைத் தானாகவே வெளியே போடும் 'ஸ்லாட் மெஷின்' இருப்பதைப் பலரும் பார்த்திருக்கிறோம். லண்டன் நகரில் உள்ள ஒரு யந்திரம் நிறையைக் கணீர் என்று சத்தம் போட்டுச் சொல்லுகிறதாம். ஒரு நாள் இந்த யந்திரத்திடம் ஓர் அம்மாள் தன் சிறு மகனுடன் சென்றாள். மகனை இதில் வைத்துக் காசைப் போட்டாள். "இரண்டு ஸ்டோன், எட்டுப் பவுண்டு" என்று கத்தியது யந்திரம். மகனை எடுத்துக்கொண்டு அம்மாள் நடந்தாள். சிறிது தூரம்

போனதும், அவளுக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. திரும்பவும் அந்த யந்திரத்திடம் சென்று மறுபடியும் மகனை நிறுத்தான். இந்தத் தடவை யந்திரம் தன் மதிப்பை மாற்றிக்கொண்டு விட்டது. "இரண்டு ஸ்டோன்; பதினொரு பவுண்டு" என்று ஓலமிட்டது!

* * *

இன்று உலகத்தில் அநேகமாக எந்த நகரத்திலும் சரி; பஸ்ஸில் ஏறுவதென்றால், பெரும் பாடாக இருக்கிறது. 'க்யூ' வரிசைகள் ஒழுங்காக நிற்பதில்லை. எல்லாரும் ஒரேயடியாய் முண்டியடித்து ஏற முயல்வதில், பலர் நசுங்கி மூச்சுத் திணற நேர்கிறது. இந்தத் தொல்லையைத் தடுக்க, பிரான்ஸில் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பஸ் ஸ்டாப்புகளில் டிக்கட் விற்கும் மெஷின்களை வைத்திருக்கிறார்கள். அவை வரிசைக் கிரமமாக எண் போட்ட டிக்கட்டுகளை விற்கின்றன. பஸ் வந்ததும், அந்த வரிசை எண் பிரகாரமே பிரயாணிகளைக் கண்டக்டர் பஸ்ஸில் ஏற்றிக்கொள்கிறார்.

எந்த விளையாட்டிலும் சிறந்த நிபுணர்கள், அது தோன்றிய நாட்டில் இராதது ஒரு விந்தை. சதுரங்க நிபுணர்கள் ருஷியர்; குத்துச் சண்டை நிபுணர்கள் அமெரிக்கர்; கிரிக்கட் நிபுணர்கள் ஆஸ்திரேலியர்; டேபிள் டென்னிஸ் நிபுணர்கள் ஜெக்கோஸ்லாவாக்கியர்!

* * *

கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கிறது. அங்கே தயாராகும் ஸினிமாப் படங்களில் இதுவரைக்கும் காதல் காட்சிகளைச் சேர்ப்பதில்லை. "முதலாளித்துவ நாடுகளில்தான் அற்பத்தனமான காதல் காட்சிகளைப் படத்தில் புகுத்துவார்கள்" என்பது அவர்களுடைய அபிப்பிராயமாக இருந்து வந்தது. ஆனால் காதல் இல்லாத படங்கள் வெற்றி பெறவில்லை என்று தோன்றுகிறது. இப்போது காதலைச் சேர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதில் ஓர் உதாரணம் இது: "மறுபடியும் அதே சங்கதி — இருதயத்திலே ஒரு பட படப்பு. அவளுடைய டிராக்டர் கலப்பை தீப்பற்றி எரிந்தால் எப்படியிருக்குமோ அப்படிப் பட்ட ஒரு ஜ்வாலை அவள் உள்ளத்திலே மூண்டது அவளுடைய ட்ராக்டர் கலப்பை! அடாடா! அது பத்திரமாயிருக்கிறதா, இல்லையா என்று பார்ப்பதற்காக அவள் ஓட்டமாய் ஓடினாள்."



ஹிரணியாட்ச வதம்

தட்சன் மகளாகிய திதி குழந்தைகள் இல்லையே என்ற குறை இருந்து பிறகு மரீச முனிவரின் சம்பந்தத்தால் கருவுற்றாள். ஆனால் பின்னால் தன் செய்கைக்காக அவள் மிகவும் வெட்கினாள். அப்போது அவள் கணவரான காசியபர், "நீ முதலில் உன் மனசை அடக்காமல் கெட்ட வழியில் இறங்கினதால் உனக்குப் பிறக்கும் பிள்ளைகள் இரண்டு பேரும் உலகத்தையே கதறச் செய்யப் போகிறார்கள். பகவான் அவதாரம் செய்து அவர்களை அழிக்கப் போகிறார். இப்போது நீ உன் தவறான செய்கைக்காக வருந்துவதால் பகவானிடம் பக்தி கொண்ட ஒரு குழந்தை உன் பிள்ளைக்குப் பிறப்பான். அவன் புகழை உலகம் முழுவதும் பாடும்" என்றார்.

இதைக் கேட்டு திதி ஒரு விதமாக ஆறுதல் அடைந்தாள். அவள் கரு வளர வளர உலகத்தில் இருள் சூழ ஆரம்பித்தது. தேவர்கள் கலக்கமுற்றுப் பிரம்மாவிடம் சென்று, "இதற்கு என்ன செய்வது?" என்று கேட்டார்கள்.

பிரம்மா புன்னகை செய்து சொல்வார்: "என் மானச புத்திரர்களாகிய ஸனகர் முதலிய நாலு பேரும் உலகப் பற்றை அறவே ஒழித்து ஆகாயத்தில் சஞ்சரித்து வந்தார்கள். ஒரு சமயம் அவர்கள் வைகுண்டத்துக்குப் போனார்கள். அங்கேதானே பகவான் பள்ளிகொண்டிருக்கிறார்? அங்கே ஆறு ருதுக்களும் சேர்ந்தாற்போல் அமைந்திருக்கின்றன. புறா, குயில் முதலிய பறவைகள் இனிமையாகக் காலங் கழிக்கின்றன. பகவானைப்பற்றிப் பிறர் பாடுவதைக் கேட்டு மகிழ்கின்றன. மந்தாரம், மல்லிகை, மருதோன்றி, நீலோத்பலம், சம்பகம் முதலிய மலர்கள், பகவானுக்குப் பிரியமான துளசியின் மணம் கமழ்ந்ததும் தம் மணத்தை அடக்கிக்கொள்கின்றன. இந்த மாதிரி விளங்கும் வைகுண்டத்தில் பகவானுடைய மாளிகை வாசலை அடைந்தார்கள் ஸனகாதியர்.

கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

“வாசலில் இரண்டு பேர் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் ஒரே வயதுதான் இருக்கும். கிரீட குண்டலங்களுடன் வண்டுகள் மொய்க்கும் வனமாலை அணிந்திருந்தார்கள். தோளில் கதையைத் தாங்கியபடி வளைந்த புருவத்தின் கீழ்ச் சிவந்த கண்களுடன் அவர்கள் நின்றிருந்தார்கள். ஸனகாதியர் பகவானைக் காணவேண்டுமென்ற ஆவலுடன் உள்ளே நுழைந்தார்கள்.

“அப்போது அந்த வாசல் காப்போர் இருவரும் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். பகவானைக் கண்டு களிப்பதற்கு இடையூறாக இருந்த அவர்களைக் கோபத்துடன் நோக்கி ஸனகாதியர், ‘பகவானுடைய பக்தர்கள் வசிக்கும் இடத்தில் அவர்களுக்கு நேர்மாறான தன்மையோடு வாழும் நீங்கள் யார்? இப்படி மற்றவர்களைப் பயமுறுத்தும் குணம் இங்கே தகாது. ஆகவே, நீங்கள் பகவானுக்குப் பகையான காமம், குரோதம், லோபம் இவை வாழும் உலகத்துக்குப் போகக் கடவது’ என்று சபித்தார்கள்.

“வாயில் காப்போர் உடனே பணிந்துபோய் ஸனகாதியரின் கால்களைப் பிடித்துக்கொண்டார்கள். ‘நாங்கள் செய்த பிழையை மன்னிக்கவேண்டும். ஆனாலும் எந்தப் பிறவி எடுத்தாலும் பகவானுடைய நினைவு மட்டும் மாறாமல் இருக்க வேண்டும்’ என்று கேட்டுக்கொண்டார்கள்.

“அப்போது பகவானே அங்கே வந்தார். ஸனகாதியர் மகிழ்ச்சியுற்று அவரை வணங்கிப் போற்றினார்கள். பகவான் அவர்களுக்கு நல்வரவு கூறியருளி, ‘நான் முனிவர்களைத் தெய்வம்போல் மதித்து வருகிறேன். உங்களைப் போன்றவர்களாலேயே என் மகிமை நிலைத்திருக்கிறது. உங்களை அவமதித்த இந்த வாயில்காப்போருக்கு ஏற்ற தண்டனைதான் விதித்தீர்கள். இவர்கள் அசுரப் பிறவி எடுத்துக் கோபாவேசத்தால் ஒரே நிலையாக இருந்து விரைவில் என்னை அடைவார்கள்’ என்றார்.

"பிறகு வாயில் காப்போரைப் பார்த்து, 'பயப்படாதீர்கள். போய் வாருங்கள்' என்று கூறி அவர்களை அனுப்பினார். ஸனகாதியர் பகவானை வணங்கி விடை பெற்றுச் சென்றார்கள். அந்த வாயில் காப்போர்தான் இப்போது திதியின் கர்ப்பத்தில் இருக்கிறார்கள். பகவான் விருப்பத்தாலேயே இப்படி நடந்திருக்கிறது."

நூறு ஆண்டுகள் பூர்த்தியானதும் திதி இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். அப்போது பல கொடிய சகுனங்கள் ஏற்பட்டன. பூமியிலும் சொர்க்கத்திலும் இருந்தவர்கள் நடுக்கமுற்றார்கள். மலையுடன் பூமி அதிர்ந்தது. திசைகள் எரிந்தன. இடிகள் விழுந்தன. நரி, கோட்டான் முதலியவை பயங்கரமாகக் கூவின. ஆகாயத்தில் கிரகங்கள் வக்கிரமாகச் சென்றன. ஆதி அசுரர்களாகிய அந்தக் குழந்தைகள் கல் போன்ற உடலோடு நன்றாக வளர்ந்தார்கள். முதல் குழந்தைக்கு ஹிரணியகசிபு என்றும் இரண்டாவது குழந்தைக்கு ஹிரணியாட்சன் என்றும் பெயரிட்டார்கள்.

நாளடைவில் ஹிரணியகசிபு மூன்று உலகத்தையும் வசப்படுத்திக்கொண்டான். அவன் தம்பி ஹிரணியாட்சன் தன்னை எதிர்த்துப் போரிடுபவன் யாராவது இருக்கிறானா என்று தேடிக்கொண்டு தேவலோகம் சென்றான். தேவர்கள் அவனைக் கண்டு அஞ்சி ஒளிந்தார்கள். 'இவ்வளவு அற்பமா இவர்கள்!' என்று எண்ணினான் ஹிரணியாட்சன். பிறகு மதங்கொண்ட யானைபோல் கடலில் குதித்தான். அவனைக் கண்டதும் வருணனுடைய சேனைகளும் திமிங்கிலம் முதலிய பிராணிகளும் பயந்தோடின. அவன் கடலில் கிளம்பிவரும் அலைகளைக் கதையால் அடித்துக்கொண்டு அநேக வருஷங்கள் விளையாடினான். கடைசியாக வருணனுடைய நகரத்தை அடைந்தான். அங்கே வருணனைக் கண்டுபிடித்துப் பரிகாசமாகப் புன்னகை செய்தான். பிறகு மிகவும் பணிவுள்ளவன்போல் வருணனுக்கு வணக்கம் செலுத்தினான்; பின்பு, "எனக்கு யுத்த பிட்சை கொடுங்கள். தாங்கள் திக்பாலகர்களில் சிறந்தவர். வெகு நாளைக்கு முன்பே தாங்கள் பகைவர்களை வென்று ராஜசூய யாகம் செய்யவில்லையா?" என்றான் கிண்டலாக. வருணன் தனக்கு வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு, "அப்பா, நான் யுத்தம் முதலியவற்றைக் கைவிட்டு வெகு நாள் ஆகிறது. உனக்குச் சரியாகப் போர் புரிய ஆதி புருஷனைத் தவிர வேறு யாருமே இல்லை. நீ அவரை எதிர்த்து யுத்தம் செய்" என்றான்.

பிறகு ஹிரணியாட்சன் பகவானைத் தேடிச் சென்றான். கடைசியில் நாரதர் சொன்னதன்மேல் பகவானைப் பாதாளத்தில் கண்டான். அங்கே வராக உருவம் எடுத்துப் பகவான் பூமியைத் தம் பல்லில் தாங்கி நிற்பதைக் கண்டான். அவரைப் பார்த்ததும் ஹிரணியாட்சன், "அறிவற்றவனே, பூமியைக் கீழே வை. பாதாளவாசிகளுக்காக இதைப் பிரம்மா கொடுத்தான். நீ இந்த இடத்தை விட்டுத் தப்ப முடியாது. வெகு நாளாக நீ மாயையினால் மறைந்து திரிகிறாய். அசுரர்களை அழித்து வருகிறாய். இன்று என்னிடம் சிக்கியிருக்கிறாய். உன்னைத் தீர்த்துவிட்டால் இந்த

முனிவர்களும் தேவர்களும் வேரற்ற மரம்போல் ஆகிவிடுவார்கள்'' என்ருன்.

பகவான் ரோஷத்துடன் நீரிலிருந்து கிளம்பி, ''என்னைப்போன்ற காட்டுமிருகம் உன்னைப் போல் நாட்டு நாயைத் தேடித்தான் திரிகிறது. நீ என்னைக் கொல்லப்பா, கொல். உன் உறவினருக்குக் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்'' என்ருர்.

ஹிரணியாட்சன் கோபம் தலைக்கேறப் பகவானைக் கதையால் அடித்தான். பகவானும் கதையால் அவனை அடித்தார். வெகு நேரமாக யுத்தம் நடந்தும் அவன் சளைக்கவில்லை.

இதைக் கண்டு பிரம்மா அஞ்சினர். அசுரர்களுக்குப் பலம் தரும் அந்தி வேளை நெருங்குகிறதே என்று திகைத்தார். பகவானை நோக்கி, ''இவனோடு விளையாடாதீர்கள். தங்கள் மாயையின் பலத்தினல் இவனைக் கொல்லுங்கள்'' என்ருர்.

உடனே பகவான் பிரம்மாவைக் கடைக்கண்ணுல் நோக்கிவிட்டு ஹிரணியாட்சனோடு மும்முரமாகப் போர் தொடுத்தார். கடைசியில் சுதரிசன அஸ்திரத்தைத் தொடுத்தார். அதுவும் சரியானபடி பலன் அளிக்காததால் அவன் காதின் அடிப்பாகத்தில் அடித்தார். அது தாங்காமல் அவன் தரையில் சாய்ந்தான். பிரம்மாதி தேவர்கள், பகவான் கையால் உயிரிழக்கும் அந்த அசுரனின் பாக்கியத்தை எண்ணி அவனைக் கொண்டாடினர்கள். பகவானைப் போற்றினர்கள்.

சரியான நிறை

உயரம் (பாதரட்சையுடன்)		நிறை (சாதாரண உடையுடன்)	
அடி	அங்குலம்	ஆண்	பெண்
5	—	—	116
5	1	—	118
5	2	129	121
5	3	132	124
5	4	135	128
5	5	139	131
5	6	142	135
5	7	146	139
5	8	150	142
5	9	155	146
5	10	158	150
5	11	162	153
6	—	167	157

கார்ட்டூன் கதம்பம்



பொது மக்களை முட்டவரும் விலைவாசி மாடு. —'சங்கர்ஸ் வீக்லி'

கொரிய சமரசத்துக்குப் பின் என்ன? —'பம்பாய்க் குரானிக்கிள்'



ஒலிபரப்பு மந்திரியும் வாத்தியக்காரர்களும். — 'பிளிட்ஸ்'



ருஷியாவின் சமாதான சமிக்ஞை. —'தி ஸேக்ரமெண்ட்ஸ் பீ'

பழைய காலத்திலும் குடிகள் ஒரு தேர்தல் முறையைக் கடைப்பிடித்ததற்குச் சான்று

மன்னனைத் தேர்ந்தெடுத்தல்

★

இந்தக்காலத்தில் வோட் மூலம் அரசியல் தலைவர்களைப் பொறுக்குவது வழக்கமாயிருக்கிறது. முன் காலத்தில் இந்த வழக்கம் தெரியாது. அப்போது அரசனே சர்வாதிகாரி. அரசன் இருந்தால் எல்லாம் நிறைந்த மாதிரி. அதனால் அரசனையே கண் கண்ட தெய்வமாக மக்கள் கருதி வந்தார்கள்.

அரசன் இல்லாவிட்டால் ராஜ்யத்தில் கலகம் தலை தூக்கும். ஆகவே, ஓர் அரசன் சந்ததி இல்லாமல் இறந்துவிட்டால் அந்த இடத்துக்கு இன்னொருவனைப் பொறுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும். அது போன்ற சந்தர்ப்பங்களில் அரசனைத் தேர்ந்தெடுக்கப் பல வழிகளைக் கையாண்டார்கள். அந்த வழிகள் விசித்திரமானவை. இந்த முறையில் ஆட்டிடையன் கூட அரசனாகியிருக்கிறான் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்! இது உண்மை.

யானை பூ மாலை போடுவது: பட்டத்து யானையின் துதிக்கையில் பூ மாலையைக் கொடுப்பார்கள். அது ஊர் முழுவதும் சுற்றி வந்து யார் கழுத்தில் மாலை போட வேண்டுமென்று அதற்குத் தோன்றுகிறதோ அவர்களுக்குப் போடும். அவனை அரசனாக ஏற்றுக்கொள்வார்கள். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

ஒரு சமயம் விசித்திர சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ஒரு தேசத்து அரசன் இறந்துவிட்டான். பட்டத்து யானையிடம் பூமாலையைக் கொடுத்தார்கள். அரசன் தான் இறப்பதற்கு முன் பட்டத்து யானைப் பாகனை அவசர வேலையாகப் பக்கத்து ஊருக்கு அனுப்பியிருந்தான். அவன் தலைநகருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். அவன் ஊர் எல்லைக்குள் நுழைவ

தற்கும் யானை மாலையுடன் அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது. பாகனுக்கு யானை மாலையைப் போட்டுவிட்டது. அவனே அரசனானான்.

மற்றொரு சமயம் இப்படியே பட்டத்துயானை அரசனை ஆராய முன் வந்தது. பலர், 'நான் முந்தி',

காப்பிரைட்: பிரஜாமத (கன்னடம்), பங்களூர்.

'ஸ்ரீ மூர்த்தி' என்று அதன் எதிரில் போய் நின்றார்கள்; பாவம், வலுவில் அரச பதவி கிடைத்தால் யாருக்குத்தான் ஆசை இராது? ஆனால் யானை யாரையும் ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. ஒரு சிறிய தெருவில் நுழைந்தது. ஒரு செட்டிப் பையனுக்கு மாலையிட்டது. குருட்டு அதிருஷ்டம் இது தான்!

சில சமயங்களில் கோவில் அபிஷேக தீர்த்தத்தை யானைக்குக் குடிக்கக் கொடுப்பார்கள். அது துதிக்கையில் நீரைத் தங்க வைத்துக்கொண்டு தனக்குத் தோன்றிய ஆசாமியின்மேல் அந்தத் தீர்த்தத்தைத் தெளிக்கும். அவனே அரசனாவான்.

மேவாட் அரசனது கதை: சரித்திர காலத்தில்கூட இவை போன்ற தேர்தல் முறை நடந்ததற்குச் சான்றுகள் உண்டு; மேவாட் அரசன் ஒருவன் சந்ததி இல்லாமல் இறந்துவிட்டான். யானையின் துதிக்கையில் வழக்கம் போல் பூ மாலையைக் கொடுத்தார்கள். அது நேராக ஊரைத் தாண்டி வெளியேறியது. அடர்ந்த காடு ஒன்றை அடைந்தது. அங்கே மரத்தடியில் ஓர் இடையன் படுத்திருந்தான். யானை அவனைத் தட்டி எழுப்பி அவனுக்கு மாலை போட்டது. யானையின் கூட வந்தவர்களுக்குக் கோபம் வந்தது. அவன் கழுத்திலிருந்த மாலையை மூன்று முறை எடுத்து எடுத்து யானையிடம் கொடுத்தார்கள். மூன்று தடவையும் யானை அந்த இளைஞனுக்கே மாலை சூட்டியது. அதன் பின் ஊரார் அவன் தெய்வாம்சம் பெற்றவன் என்று நினைத்து அவனை அரசனாக ஏற்றார்கள்.

மற்றொரு கதை இன்னும் வேடிக்கையானது. பட்டத்து யானை, பட்டத்துக் குதிரை, குடை, கவரி, பன்னீர்ச் செம்பு இவைகளோடு அரசனைத் தேர்ந்தெடுக்க ஊரார் புறப்பட்டார்களாம். வழியில் இவர்கள் ஒரு வண்ணானைச் சந்தித்தார்களாம். யானை, குதிரைகள் அவனைக் கண்டதும் நின்றுவிட்டனவாம். யானை மாலை போட்டது; குதிரை கனைத்துச் சம்மதம் தெரிவித்தது; கவரி வீசியது; பன்னீர்ச் செம்பு பன்னீர் தெளித்தது. உடனே அவனை அரசனாக ஏற்றுக்கொண்டார்களாம்.

புஷ்பத் தேரும் குதிரையும்: யானை, குதிரைகள் தவிர தேரை அனுப்பிக்கூட அரசனைத் தேர்ந்தெடுப்பது உண்டாம். தேர்தலுக்கு முதல் நாள் விஷயத்தைப் பறை சாற்றி விடுவார்கள். மறு நாள் விடியற்காலையில் பூக்களால் அலங்கரித்த தேரில் பட்டத்துக் குதிரையைக் கட்டி, ரதத்தில் அரசனுக்கு உரிய கத்தி, கிரீடம், அரச உடை ஆகிய எல்லாவற்றையும் வைத்துவிடுவார்கள். பின்பு மேள தாளத்துடன் ஊர்வலமாகத் தேர்தலைத் தொடங்குவார்கள்.

ஒரு முறை ஓர் ஊரார் இப்படித் தேர்தலுக்குப் புறப்பட்டார்கள். குதிரை, ரதத்தை எங்கே கொண்டு போகிறது, யாருக்கு மாலையிடுகிறது என்று பார்க்க ஆவலோடு பலர் காத்திருந்தார்கள். குதிரை ஊரை விட்டு வெகுதூரம் போய் ஒரு நதிக்கரையிலே மர நிழலில் தங்கியது. வெகுநேரம் காத்திருந்த ஜனங்கள் சோர்ந்து போய்த் தேருக்குச் சிலரைக் காவல் வைத்துவிட்டு வந்த வழியே திரும்பினார்கள். மறு நாள் குடியானவப் பையன் ஒருவன் அந்தத் தேரைக் கண்டான். அதன் அழகு அவனைக் கவர்ந்தது. ஓடிப்போய் ரதத்தில் ஏறி உட்கார்ந்தான். அதில் இருந்த உடைகளை அணிந்துகொண்டான். காத்திருந்த ஜனங்கள் அவனையே அரசனாக ஏற்றார்கள்.

காச்மீரத்துக் கதை: காச்மீரத்து வழக்கம் வேறு விதமாக இருக்கிறது. ஒரு சமயம் அரசனாக இருந்த அஜீப்-ஏ-மிஸார் இறந்துவிட்டான். அவனுக்குச் சந்ததி இல்லாததால் அரசாங்கத்தினர்

மறுநாள் தேர்தலென்று ஊர் ஜனங்களுக்குத் தெரிவித்து எல்லாரும் ஈத் மைதானத்துக்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இந்தச் செய்தியைக் கேட்ட ஜனங்கள் மறுநாள் காலையில் ஈத் மைதானத்தில் எள் விழ இடம் இல்லாமல் கூடிவிட்டார்கள். பட்டத்து யானை வந்தது. அதன் மேல் கிளி ஒன்று உட்கார்ந்திருந்தது. அந்தக் கிளி கூட்டத்தின் நடுவில் எங்கோ இருந்த யூசுப்பின் தோள்மேல் பறந்து சென்று உட்கார்ந்தது. எல்லாரும் அவனை அரசனாகக் கௌரவித்தார்கள். காச்மீரத்தின் சரித்திரத்தில் இது போல் பல சந்தர்ப்பங்களில் நடந்ததற்கு அத்தாட்சிகளைக் காணலாம்.

அபிஸீனிய முறை: இதுவரை நடந்தவை நம் நாட்டுத் தேர்தல் முறைகள். வெளி நாட்டில்கூட இந்த மாதிரி வேடிக்கையான முறை இருந்திருக்கிறது. அவற்றில் அபிஸீனிய முறை வேடிக்கையானது. அரசன் ஆண் சந்ததி இல்லாமல் இறந்துவிட்டால் ஊர் ஜனங்கள் எல்லாரும் மைதானத்தில் கூடுவார்கள். ஒரு பெரிய கழுகு பறந்து வந்து யார் தலையில் கொத்துகிறதோ அவனையே அரசனாகத் தேர்ந்தெடுப்பார்களாம்.

நாகப்பாம்பு யார் தலைக்குமேல் குடைபோல் படம் எடுக்கிறதோ அவனை அரசனாகக் கொள்ளும் வழக்கமும் உண்டு.

எத்தனையோ நூற்றாண்டுகளாக வளர்ந்து
வந்திருக்கும் ஒரு தொழில்!

குழந்தைகள் பொம்மை

ஆஸ்டின் க்ளார்க்

விக்டோரியா ராணியின் காலத்து ஜனங்களைப்பற்றி நாம் எத்தனையோ குறை சொல்லுகிறோம். ஆனால், அவர்கள் செல்வச் செழிப்போடு வாழ்ந்ததை நினைத்தால், நமக்குப் பொறாமை தான் உண்டாகும். அந்தக் காலத்துப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அடிப்பார்களாம்; குழந்தைகளுக்குத் தர்மோபதேச மெல்லாம் செய்வார்களாம். ஆனாலும், தங்கள் குழந்தைகளுக்கு அவர்கள் ஏராளமான பொம்மைகளை வாங்கிக் கொடுத்ததை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

பொம்மைகள் செய்வதில் ஜெர்மனி, பிரான்ஸ் இரண்டும் அப்போது ஒன்றுக்கொன்று போட்டி போட்டன. பிரிட்டனும் சும்மா இருக்கவில்லை; அதுவும் இந்தப் போட்டியில் கலந்துகொண்டது. பொம்மை செய்யும் தொழிற்சாலையினர், ஒருவரோடொருவர் போட்டியிட்டுப் புதுப் புதுப் பொம்மைகளைச் சிருஷ்டிக்க முயன்றார்கள். அதனால் குழந்தைகளின் பாடு கொண்டாட்டமாயிற்று. சாவி கொடுத்தால் ஓடும் ரெயில் எஞ்சின்கள் வந்தன; வீட்டுக்குள்ளேயே அற்புதமான தண்டவாளங்கள் தோன்றின. முதல் உலக யுத்தம் தொடங்குகிறவரையில் இவையெல்லாம் வெகு குஷியாக நடந்தன. 'பல்லாண்டுகளாகக் குழந்தைகளின் பொம்மைகள்' (சில்ட்ரன்ஸ் டாய்ஸ் த்ரூ அவுட் தி ஏஜெஸ்) என்ற ஒரு புஸ்தகத்தில், மிஸ்டர் லெஸ்லி டெய்க்கன் என்பவர், இந்த விவரங்களை எழுதியிருக்கிறார். இருபத்தைந்து ஷில்லிங் விலை வைத்து, இந்தப் புஸ்தகத்தை, பாட்ஃபோர்டு கம்பெனியார் வெளியிட்டிருக்கிறார்கள்.

'போதிக்கும் பொம்மைகள்' என்று ஆசிரியர் ஒரு பகுதிக்குத் தலைப்புக் கொடுத்திருக்கிறார். துண்டு துண்டான பாகங்களை இணைத்துத் தாமாகப் பலவித உருவங்களைக் குழந்தைகள் அமைத்துக் கொள்ளக்கூடிய விளையாட்டு அடுக்குகளை அதில் அவர் வர்ணிக்கிறார். 1819-இல், 'உருமாற்றக்கூடிய சீமாட்டிகள் படங்கள்' என்ற ஒரு பொம்மைப் பெட்டி செய்திருந்தார்



மூலம்: ஜான் அவ் லண்டன் வீக்லி (8-5-'53), லண்டன்.

களாம். அதில், ஒவ்வொரு தலையையும் மூன்று பகுதிகளாகப் பிரித்திருந்தார்களாம். இந்தப் பகுதிகளில் ஏதாவது ஒன்றை மாற்றினால் புதிய உருவம் உண்டாகுமாம். இப்படி அந்தப் பெட்டியில் உள்ள பகுதிகளைக் கொண்டு 21,952 உருவங்களை அமைக்க முடியுமாம்!

பதின்மூன்றாவது நூற்றாண்டில், ரோகர் பேக்கன் என்பவர் தான் 'மாஜிக் லாண்டர்ன்' என்ற நிழல் உருவப் படக்கருவியை அமைத்தார். 1840-இல் இந்த லாண்டர்ன் ஸ்லைடு, லென்ஸ் ஆகியவைகளை இங்கிலாந்து, பிரான்ஸ் இரண்டு நாடுகளிலும் கல்வி புகட்டும் சாதனங்களாகத் தயாரித்தார்கள். ஆனால், ஜெர்மனியிலோ, லென்ஸ் தயாரிப்பது ஒன்றிலேயே முழுக் கவனமும்செலுத்தினார்கள். இதனால்தான் லென்ஸ் வியாபாரத்தில் உலக மார்க்கெட்டையே ஜெர்மானியர் கைப்பற்றிவிட்டார்கள். அந்தக் காலத்தில் மாஜிக் லாண்டர்ன் கருவியில் குழந்தைகளுக்கான வேடிக்கை விசித்திரக் கதைகளையெல்லாம் காட்டி வந்தார்கள். பொம்மை ஸினிமா என்ற 'ஸ்டீரியா - ஸ்கோப்' வந்ததும், இந்த மாஜிக் லாண்டர்ன் போய்விட்டது. புதியபுதிய பொருள்களைக் கண்டுபிடிக்க மனிதனுக்கு இருக்கும் யுக்தியையும் சாதுரியத்தையும் காட்டக்கூடிய சான்றுகளில் ஒன்று இந்தக் குழந்தைகள் பொம்மையின் வரலாறு.

'இயங்கும் பொம்மைகள்' என்பது இன்னொரு பகுதிக்கு ஆசிரியர் கொடுத்திருக்கும் தலைப்பு. ஆர்க்கிமிடீஸ் கொள்கைகளை அநுசரித்து, மிகப் பழங்காலத்திலேயே யந்திரப் பொம்மைகள் தோன்றியிருக்கின்றன. ஏழாவது டாலமி காலத்தில் அலெக்ஸாண்டிரியா நாட்டில் வாழ்ந்த ஹீரோ என்பவர் விசைப் பொம்மைகள் செய்வதில் சிறந்தவர். 'எபீரிட்டாலியா' என்று அவர் எழுதியிருக்கும் நூலில் பல அதிசய விசைப் பொம்மைகளை வர்ணித்திருக்கிறார். பாடும் பறவைப் பொம்மை ஒன்றைப்பற்றி அவர் சொல்லியிருக்கிறார். அது தண்ணீர் விசையால் இயங்குவது. ஹீரோவின் வேறு சில பெரிய பொம்மைகளில் நீர் விசையும் காற்று விசையும் சேர்ந்து வேலை செய்கின்றன. ஆனால், பிற்காலத்தில் இந்தமாதிரி விசைப் பொம்மைகளின் இயக்கம் ஏதோ பிசாசின் வேலை என்று ஜனங்கள் சந்தேகம் கொண்டார்கள். பேசும் பித்தளை அல்லது மரத் தலைகளை ஸெயிண்ட் தாமஸ் அக்வினாஸ் என்ற பெரியார் கண்டித்தார். ஸ்டுவர்ட் அரசர்களின் பொழுதுபோக்குக்காக அமைந்திருந்த விசைப் பொம்மைகளை ஆலிவர் க்ராம்வெல் என்ற வீரர் கண்டித்தார்.

பதினெட்டாவது நூற்றாண்டில், யந்திர விசைப் பொம்மைகளை மிகவும் கலைத் திறமையோடு அமைக்கத் தொடங்கினார்கள். ஆனால், இந்த உயர்ந்த வகையான பொம்மைகளை அரண்மனைகளில்

வைத்து ராஜ குடும்பத்தினரும் பிரபுக்களும் மட்டுமே கண்டு களித்து வந்தார்கள். சாதாரணக் குழந்தைகள் நூறு வருஷ காலம் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஜப்பானுடனும் அதைப் போன்ற பிற நாடுகளோடும் பிரான்ஸ் தேசம் போட்டியிட்டு மலிவான யந்திரப் பொம்மைகளைத் தயாரித்தது. பொருட்காட்சிகளுக்குத் தம் பெற்றோருடன் சென்று சில அதிசயப் பொம்மைகளைப் பிரெஞ்சுக் குழந்தைகள் பார்த்து மகிழ்ந்தன. ஜாக்கீஸ் வாக்கன்ஸன் என்பவர், குழலூதும் யந்திரப் பொம்மை ஒன்று செய்திருந்தார். அது பன்னிரண்டு விதமான சங்கீதம் பொழியும். அவரே ஒரு யந்திரக் குள்ள வாத்துப் பொம்மையும் செய்திருந்தார். அது உண்ணும்; குடிக்கும். இது மாத்திரம் அல்ல; ஜீர்ணஸ்தியின் சகல அவஸ்தைகளையும் காட்டும். விக்டோரியா ராணி காலத்தினர் அந்த வாத்தைக் கண்டால், வெறுப்பும் கலவரமும் அடைந்திருப்பார்கள்.

'டால்' (பொம்மை) என்ற பதமே இங்கிலீஷ் பாஷையில் பிற்காலத்தில்தான் தோன்றியிருக்கிறது. 1751-இல் 'ஜெண்டில் மான்ஸ் மகஸீன்' என்ற பத்திரிகையில் பொம்மைபற்றிய குறிப்பு முதல் முதலாக வந்திருக்கிறது. கிறிஸ்துவ நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே மெஸப்படோமியா, இந்தியா இவைகளில் பொம்மைகள் இருந்திருக்கின்றன. ஆனால், புராதனமான அந்தப் பொம்மைகள் சமய வணக்கத்துக்கு உரியவையாகவே இருந்திருக்கின்றன. அவைகளைப் பின்பற்றியே பிற்காலத்து விளையாட்டுப் பொம்மைகள் தோன்றின.

விளையாட்டுப் பொம்மைகளில், அடிப்படையான இரண்டு வகைகள் உண்டு. முற்றும் ஒரே துண்டாகச் செய்தது ஒரு வகை. தலை, கழுத்து, கை, கால் இவைகளைத் துண்டு துண்டாகச் செய்து இணைத்தது மற்றொரு வகை. யுத்தத்துக்கு முந்திய ஒரு பென்னிப் பொம்மைகள் முதல் வகையைச் சேர்ந்தவை. எகிப்துக் கல்லறை உருவங்களைப் பின்பற்றியவை இரண்டாவது வகைப் பொம்மைகள்.

பொம்மைகள் மதச் சடங்குகளை ஒட்டியவை என்பதற்கு ஜப்பானிய விழா ஒன்றைச் சான்றாகச் சொல்லலாம். ஜப்பானியப் பெண்கள் வருஷந்தோறும் ஹினு மட்ஸூரி என்ற பொம்மை உற்சவம் ஒன்று நடத்துகிறார்கள். யுத்தப்பொம்மை விழா ஒன்றை ஜப்பானியப் பையன்களும் கொண்டாடுகிறார்கள்.

சென்ற காலத்தில் எங்கேயோ சில தெருக்களில் மூலை முடுக்குகளில் மட்டுமே பொம்மைக் கடைகள் இருப்பது வழக்கம். இப்போதோ, பல வகைப் பொருள்களையும் விற்கும் பெரிய பெரிய கம்பெனிகளில் எல்லாம் பொம்மைகளை வைத்து விற்கத் தொடங்கி விட்டார்கள்!

மாண்ட அணு உளவாளிகள்

டாக்டர் பி. ஜி. கிருஷ்ணையா

அணுக்குண்டு ரகஸ்யத்தை அமெரிக்காவிலிருந்து ருஷியாவுக்குத் தெரிவித்ததாகக் குற்றம் சாட்டி, சமீபத்தில் மரண தண்டனை விதித்து, இரண்டு பேரைத் தூக்கிலிட்டார்களே; அந்தக் கணவன், மனைவி இருவரையும் பற்றிய வரலாறு. இதை எழுதியிருப்பவர் அமெரிக்காவில் வசிக்கும் ஓர் இந்தியர்.

சமீபத்தில் அமெரிக்காவில் தேசத் துரோகிகள் என்று தூக்கிலிட்டார்களே, அந்த ரோஸன்பெர்க் தம்பதிகள் ஆரம்பத்தில் மற்ற அமெரிக்கர்களைப் போல் சகஜமாகத்தான் வாழ்ந்து வந்தவர்கள். நியூயார்க்கின் கிழக்குப் பகுதியில் இவர்கள் வசித்து வந்தார்கள். இவர்களைப் பிரமாத அறிவாளிகள் என்றோ திடசாலிகள் என்றோ சொல்லுவதற்கு மில்லை. மனைவியான எதெல் பாடகியாக விரும்பினாள்; அப்படியே முடிந்தால் நாளடைவில் நாடகம், நைட்-கிளப் இங்கெல்லாம் பெயரெடுக்கலாம் என்று அவளுக்கு ஆவல். ஆனால் உடல் கட்டும் சாரீரமும் அதற்கேற்றபடி அமையவில்லை. கணவர் ஜூலியஸ் ரோஸன்பெர்க் யூத மத குருவாவதற்குரிய பயிற்சி பெற்றார். இருந்தாலும் மதப் பற்று அவருக்குக் கிடையாது.

வாழ்க்கையில் ஏமாற்றம், லட்சியவாதம், கொஞ்சம் சுயநலம், இப்படி எல்லாம் சேர்ந்து இருவரும் கம்யூனிஸ்டுகளானார்கள். அப்புறம் குடும்பம், மற்ற நண்பர்கள், மதம், நாடு எல்லாவற்றையும் துறந்தார்கள். முதலில் கம்யூனிஸ்டு கட்சியின் வெளி அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். விண்ணப்பங்களில் கையெழுத்திடுவதும், தீர்மானங்களைக் கொண்டு வருவதும், சுற்றறிக்கைகளை விநியோகிப்பதும், பிரசங்கமும் பிரசாரமும் செய்வதும், கட்சிக்கு ஆள் சேர்ப்பதுந்தான் இவர்களின் முதல் வேலை.

பிறகு கட்சியின் அந்தரங்க அங்கத்தினர்களாகச் சேர்ந்து ருஷியர்களின் உபதேசப்படி நடந்து வந்தார்கள். கடைசியில் தலைமறைவாக இருந்தபடி வேலை செய்யலானார்கள். ஸிங்ஸிங் சிறையில் மரணதண்டனை அடையும் வரையில் யந்திரம்போலவே இருவரும் நடந்துகொண்டார்கள். பல அரிய ராணுவத் தகவல்களைச் சோவியத் சர்க்காருக்குத் தெரிவித்து, ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சோவியத் ஒற்றர் கூட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட வெளியிடாமல் இருந்தாலும், சாமர்த்தியமான ஒற்றர்கள் என்று இவர்களைச் சொல்ல முடியாது.

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 4-7-'53), சென்னை.

நாகசாகி அணுக்குண்டு சம்பந்தமான ரகசியத் தகவல்களைத் தெரிவித்தபோது இவர்களுக்குச் சரியானபடி ஊதியங்கூடக் கிடைக்கவில்லை. கைக் கடிகாரம், அழகிய மேஜைகள், போட்டோ கருவிகள், பதக்கங்கள் இப்படிப் பல பரிசுகள் கிடைத்துக்கொண்டிருந்தன. உள்ளுக்குள்ளே நடுக்கமாக இருந்தாலும் கட்சியின் கடுமையான நியமங்களே இவர்களுக்கு ஆறுதலாக இருந்தன.

நியூ யார்க்கின் கிழக்குப் பகுதியில் யந்திர 'ஷாப்' ஒன்று வைத்து நடத்தி வந்தார் ஜூலியஸ். இரண்டாம் உலக யுத்தம் முடிந்த சமயம் அந்த வியாபாரத்தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு வியாபாரமே படுத்துவிட்டது. இருந்தாலும் ஜூலியஸ் தம் மைத்துனனிடம், "அதனால் என்ன வந்தது? இருக்கிற யந்திரங்களை வைத்துக்கொண்டே வருஷத்தில் 10,000 டாலர் சம்பாதிக்க முடியும்" என்றாராம். ரகசியமாகச் சில விஷயங்களை நடத்த அந்த வியாபாரம் ஒரு வியாஜமாக இருக்கும் என்பது இவர் கருத்து. இந்தத் தம்பதிகளில் எதெல்தான் பெரியவள்; கம்யூனிஸ்ட் கட்சியில் இவரைவிட அநுபவம் உள்ளவள்; கொள்கையைப் பிடிவாதமாகப் பின்பற்றுவாள்.

நியூ யார்க்கின் கிழக்குப் பகுதியில் எதெல் 1915 செப்டம்பர் 28-ஆம் தேதி பிறந்தாள்.

ஜூலியஸ் 1918 மே 12-ஆம் தேதி பிறந்தார். இவருடைய தந்தை ஹாரி ரோஸன்பெர்க் பெண்களின் ஆடைகளைத் தயாரிக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் வேலை பார்த்துவந்தார். அவருக்கு நல்ல சம்பளமும் கிடைத்தது. நியூ யார்க் யூத சமூகத்தில் அவருக்குச் செல்வாக்கு வேறு இருந்தது. ருஷியாவிலிருந்துவந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள் ஜூலியஸின் பெற்றோர்கள். தந்தை ஹாரி, சாப்பிட்டானதும் ஒவ்வொரு நாளும் வீட்டில் அமெரிக்கச் சரித்திரம், அரசியல் முறை இவைகளைப் பற்றிக் குடும்பத்தாரோடு பேசுவார். பெரிய பிள்ளை ஜூலியஸை மத குருவாக்க வேண்டுமென்று தீர்மானித்து டோரா என்ற இடத்தில் நடக்கும் ஹீப்ரூ பள்ளிக்கூடத்துக்கு அவர் அனுப்பி வைத்தார்.

வீட்டில் யூத பாஷையான யிட்டிஷ்தான் பேசி வந்தார். எதையும் பரந்து யோசிக்க வேண்டுமென்று சொல்வார். ஆனால் அவர் மகன் ஜூலியஸ் புதிய கருத்துக்களை வெளியிடும்போது அவருக்குக் கஷ்டமாகவே இருக்கும்.

கடைசியில் ஜூலியஸ் மதக் கல்வி பயில்வதை விட்டு விடி காலேஜில் சேர்ந்து தொழிற் கல்வி கற்க ஆரம்பித்தார். தந்தையின் மனம் முறிந்துவிட்டது. வீட்டில் அடிக்கடி இருவருக்கும் சச்சரவு ஏற்பட்டது.

எதெலின் தந்தை ருஷியாவிலிருந்து வந்தவர். ஆனால் இவள் தாய் ஆஸ்திரியாவிலிருந்து குடியேறியவள். எதெல் குள்ளமாக இருப்பாள். சற்று மஞ்சள் மேனி; தலைமயிர் கறுப்பாக இருக்கும். 15 வயதில் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும் எங்கோ ஆபீஸில் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தாள். பாடகியாக வேண்டுமென்று பார்த்தாள். கவிதைகள் எழுதிப் பெயர் எடுக்க வேண்டுமென்று அவளுக்கு ஆவல்.

ஆனால் அது கைகூடவில்லை. 1934-இல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரும்போது இவள் டைபிஸ்டாக இருந்தாள். அப்போதுதான் இவளுக்கு ஜூலியஸ் ரோஸன் பெர்க்கோடு பழக்கம் ஏற்பட்டது. ஜூலியஸ் இன்னும் ஸிடி காலேஜ் மாணவர் சங்கம், இளங் கம்யூனிஸ்டு லீக் முதலிய ஸ்தாபனங்களிலெல்லாம் ஈடுபட்டு வரவே படிப்புக்குத் தடங்கல் ஏற்பட்டது.

எதெலின் தந்தை பார்னட் கிரீன்கிளாஸ் என்பவர் ஸிங்கர் தையல் யந்திரங்களை 'ரிப்பேர்' செய்வதில் கெட்டிக்காரர். குடும்ப விஷயங்களை எதெலின் தாயே கவனித்துக்கொண்டாள். மகா திடசாலி அவள்.

எதெலை ஜூலியஸ் காதலித்து வந்தார். அப்போது எதெல் அவருக்கு வேண்டிய பாடக் குறிப்புக்களை 'டைப்' செய்து தருவாள். ஜூலியஸ் அவள் தம்பி டேவிடுக்கு ருஷிய அரசாங்க அமைப்பைப்பற்றி விளக்கி அதனால் என்ன என்ன நன்மைகள் உண்டு என்று சொல்லிக்கொண்டிருப்பார். ஒரு நாள் ஆப்பிள் பழம், ஒரு நாள் ரஸாயனக் கருவிகள் இப்படி ஒவ்வொரு நாளும் ஏதாவது கொண்டு தருவார் ஜூலியஸ். கம்யூனிஸம் சம்பந்தமான குறிப்புக்களையும் சில சமயம் கொண்டு வந்து கொடுப்பார். ஒரு நாள் குளிர் அதிகமாக இருக்கவே டேவிட் அந்தக் குறிப்படங்கிய காகிதங்களை 'ஸ்டவ்'வில் வைத்துக் கொளுத்தப் போனான். எதெல், "அதைக் கொளுத்தாதே!" என்றாள். தாய்க்கு அவ்வளவாக இங்கிலீஷ் படிக்க வராது. எழுதின எந்தத் தாளையும் போட்டுக் கொளுத்தக் கூடாது என்று அவளும் சொல்லிவிட்டாள். ஆகவே, அப்படியே அறையில் அந்தக் குறிப்புக்கள் கிடந்தன.

1937-இல் ஜூலியஸ் பரீட்சையில் தேறினார். எதெலை மணந்து கொண்டார்; மணப் பரிசாக டேவிட் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். ஜூலியஸ் கம்யூனிஸ்ட் சம்பந்தமுள்ள தொழிலாளர் ஸ்தாபனம் ஒன்றின் அலுவல்களில் ஈடுபட்டு அங்கங்கே சில இடங்களில் மின்சார எஞ்சினீரிங் வேலை பார்த்து வந்தார்.

1940-இறுதியில் புரூக்ளினில் ராணுவ சம்பந்தமான ஸிக்னல் இலாகாவைச் சேர்ந்த ஆபீஸ் ஒன்றில் சாதாரண எஞ்சினீராகச் சேர்ந்தார். இருந்தாலும், தொழிலாளர் ஸ்தாபன சம்பந்தமான அலுவல்களிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் ஸிவில் ஸெர்விஸைச் சேர்ந்த அநேகம் பேர் அதில் அங்கத்தினர்களாக இருந்தார்கள். அவர்களுக்குத் தலைமை வகித்தார்.

ஜூலியஸுக்குக் கண் பலவீனம். அடிக்கடி காய்ச்சலும் தொண்டையில் கோளாறும் ஏற்பட்டுவிடும். எதெல் சிறு வயதிலிருந்து இடுப்புச் சரியாக இராமல் அவதிப்பட்டு வந்தாள். இருந்தாலும் 1943-இல் இருவருக்கும் மைக்கேல் என்ற குழந்தை பிறந்த பிற்பாடுகூடக் கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்கள். பிறகு இரண்டு வருஷம் கழித்து இன்னொரு குழந்தை பிறந்தது. ஆனால் அது நோஞ்சலாக இருந்தது.

1943-இல் சோவியத் சர்க்கார் உலகக் கம்யூனிஸ்டுகளின் ஜாபி

தாவைக் கவனித்து, சோவியத் சார்பான விஞ்ஞானிகளைக் கலந்து கொண்டு அணு சம்பந்தமான ரகசியங்களைத் தெரிந்துகொள்ள முயன்றார்கள்.

ஜூலியஸ் ரோஸன்பெர்க் 1944-இல் ஒரு பக்கம் கம்யூனிஸ்டு தொழில் ஸ்தாபனத்தில் பகிரங்கமாக ஈடுபட்டுக்கொண்டே மறைவில் ருஷியாவுக்காக உளவு அறியத் தொடங்கினர். 1945-இல் இவரை ராணுவத்திலிருந்து நீக்கிவிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை ஸ்தாபனத்துக்குத் தம்மை மாற்ற வேண்டுமென்று இவர் எழுதியிருந்த ஒரு விண்ணப்பம் அதிகாரிகளிடம் அகப்பட்டதே இதற்குக் காரணம். இருந்தாலும் ஒற்றர் என்று இவரை அப்போது சந்தேகிக்கவில்லை.

இவர் இருந்த தொழிலாளர் ஸ்தாபனத்தில் பல விஞ்ஞானிகளோடு கலந்து பழகச் சந்தர்ப்பம் கிடைத்தது. யுத்தத்துக்குத் தேவையான பொருள்களைத் தயாரிக்கும் தனிப்பட்ட நபர்களோடும் பழகினர். ருஷியா அப்போது நேச நாடாக இருந்ததால் இவர் மேல் யாருக்கும் சந்தேகம் தட்ட வழியில்லை.

ஜூலியஸின் மைத்துனன் டேவிட், லாஸ் ஆலமாஸ் என்ற ஊரில் அணுக்குண்டு தயாரிக்கும் ரகசிய யந்திரம் அமைந்த இடத்தில் உத்தியோகஸ்தனகச் சேர்ந்தான். டேவிடுக்கு அப்போது விவாகமாகிவிட்டது. முன்னேற்பாட்டின்படி டேவிட் வாரத்துக்கு ஒரு தரம் மனைவியை வந்து பார்ப்பதற்குச் சௌகரியமாக ஆல்புகர்க் என்ற இடத்தில் அவளைக் குடிவைத்தார்கள். அப்போது ஜூலியஸும் எதெலும் அங்கே வந்து போவார்கள். டேவிடுக்குத் தெரிந்தவரையில் முக்கியமான தகவல்களை அறிந்து வரும்படி அவனை ஜூலியஸ் தம்பதிகள் தூண்டி வந்தார்கள்.

யுத்தம் முடிந்த பிறகு டேவிடுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. ஏனே இதையெல்லாம் சொன்னேம் என்று இருந்தது அவனுக்கு. ஆனல் ஜூலியஸும் எதெலும் மட்டும் பழையபடியே உளவு பார்த்து வந்தார்கள்.

1950-பிப்ரவரி மாதம் கிளாஸ் ஃபூக்ஷ் என்ற விஞ்ஞானி பிரிட்டிஷ் துப்பறியும் நிபுணர்களிடம், தாம் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த சிலரிடம் அணுக்குண்டு ரகசியங்களைத் தெரிவித்திருப்பதாக வெளியிட்டார்.

ஃபூக்ஷ், டேவிட் இந்த இரண்டு பேருக்கும் கையாளாக இருந்து வந்த ஹாரி கோல்டு என்பவனை ஜூன் மாதம் கைது செய்தார்கள்; அவன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். உடனே டேவிடையும் அவன் மனைவி ரூத்தையும் கைது செய்தார்கள். அவர்களும் ஒன்று விடாமல் நடந்ததை அப்படியே சொல்லிவிட்டார்கள்.

1951-இல் ரோஸன்பெர்க் தம்பதிகளைச் சிறை செய்ததும் உளவறிந்து ருஷியாவுக்குத் தெரிவித்து வந்ததாக அவர்கள்மீதும் வழக்குத் தொடங்கியது. மார்ட்டன் ஸோபெல் என்பவரும் உளவறிந்து சொன்னவர்களில் முக்கியமானவர். இந்த வழக்கில் அவரும் மாட்டிக்கொண்டார்.

ரோஸன்பெர்க் தம்பதிகள் சோவியத் ஒற்றர் கூட்டத்தில் இருந்துகொண்டு பலவித அலுவல்களில் ஈடுபட்டார்கள் என்பது ருஜுவாயிற்று. விஷயம் வெளி

யாகும் போல் இருந்ததால் டேவிடுக்கும் இன்னும் சிலருக்கும் 50,000 டாலர் கொடுத்து எங்கேயாவது தப்பி ஓடிவிடும்படி சொல்லியும் அவர்கள் அப்படிச் செய்யாமல் இருந்து விடவே முடிவில் எல்லாரும் அகப்பட்டுக்கொண்டார்கள்.

ரோஸன்பெர்க் தம்பதிகள் இப்படிச் செய்ததற்கெல்லாம் ஏராளமான சாட்சியம் இருந்தது. இவர்கள் தாங்கள் இப்படிச் செய்ததாக ஒப்புக்கொண்டாலும் அதைக் குற்றம் என்று ஒப்புக் கொள்ள மறுத்தார்கள். இவர்கள் சார்பாகச் சிலர் சாட்சி சொல்ல வந்தார்கள்; ஆனால் அந்தச் சாட்சியத்தால் இவர்களின் நிலைமை பின்னும் மோசமாகிவிட்டது. ஸோபெல் தம் சார்பாகச் சாட்சிகளையே தருவிக்கவில்லை.

மூன்று பேரும் குற்றவாளிகளே என்று ஜூரர்கள் தெரிவித்து விட்டார்கள். 1951 எப்ரல் 5-ஆம் தேதி ஸோபெலுக்கு 30 வருஷச் சிறைத் தண்டனை என்று தீர்ப்பாயிற்று. ரோஸன்பெர்க் தம்பதிகளுக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

உலகம் எங்கும் கம்யூனிஸ்டுகள் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்கு இது பயன் பட்டது. கடைசி வரையில் பிடிவாதமாக ரோஸன்பெர்க் தம்பதிகள், இன்னும் யார் யார் ஒற்றர் கூட்டத்தைச் சேர்ந்திருந்தார்கள் என்று சொல்லவேயில்லை.

கறிகாய் விலை சரியா?

போன கோடையில் என் நண்பர்களில் ஒருவர், காய்கறிகளின் விலை அகாதமாய் ஏறி விற்பதைப் பார்த்து ஆத்திரம் அடைந்தார். காய்கறி வியாபாரியிடம் சென்றார். "இதோ பார்: கூடிய சீக்கிரம் நானே ஒரு தோட்டம் போட்டுவிடப் போகிறேன். அப்புறம் உன்னிடம் வந்து பேரம் பேசி நான் தொல்லைப்பட வேண்டியிராது" என்றார்.

"உண்மை. நீங்கள் இப்படித் தொல்லைப்பட வேண்டியிராது. ஆனால், இவ்வளவு மலிவாய் நான் எப்படி விற்கிறேன் என்ற ஆச்சரியந்தான் உங்களுக்கு உண்டாகும்" என்றான் வியாபாரி.

—மிஸஸ் ஃப்ராங்க் கிங்

எதுவும் மிதமிஞ்சினால்—

மிக அதிகச் சந்தடி காதைச் செவிடு படுத்துகிறது; மிக அதிக ஒளி கண்ணைக் குருடாக்குகிறது; மிக அதிக தூரமோ மிக அதிக ஸமீபமோ பார்வையை மறைக்கிறது; மிக அதிக நீளமான அல்லது மிகச் சுருக்கமான பிரசங்கம் அறிவு வளராது தடுக்கிறது; மிக அதிக உண்மை நம்மைத் திகைக்க வைக்கிறது.

—பாஸ்கல்

இன்றுதான் நகர அமைப்புத் திட்டமெல்லாம் தோன்றியுள்ளதா? புராதன இந்திய நூல் ஒன்றைப் பாருங்கள்.

நகர நிர்மாணம்

டாக்டர் ஏய். டி. சர்மா

1905-இல் கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திர' ஏட்டுப்பிரதியைக் கண்டுபிடித்தார்கள். அதில் உலகம் எங்குமே ஒரு சிரத்தை உண்டாயிற்று. 'தத்துவ விசாரணையிலோ மனத்தத்துவ ஆராய்ச்சியிலோ மட்டும் இந்தியாவின் புராதன அறிவாளிகள் ஈடுபடவில்லை; வேறு பல அரிய சாதனைகளும் புரிந்திருக்கிறார்கள்' என்பதற்கு அது சான்றாக விளங்குகிறது. இந்தியாவின் மக்கியவில்லி என்று அர்த்த சாஸ்திரத்தின் ஆசிரியரைப் புகழ்வார்கள். அவர் பெரிய அரசியல் நிபுணராக இருந்திருக்கவேண்டும் என்பதில் சந்தேகமே யில்லை. அநேக சிந்தனையாளர்களைப் போலவே அவரும் ஓரளவுக்கு லட்சியவாதிதான். இருந்தபோதிலும், அநுபவத்தில் உள்ள சிக்கல்களை ஊடுருவிப் பார்த்துச் செயலாற்றுவதிலும் சிறந்தவர்; லௌகிக வாழ்க்கையில் தோன்றும் பிரச்னைகளை எல்லாம் நன்றாக அறிந்துகொண்டவர்.

எல்லாவற்றையும் விட அவருடைய மேதையும் சட்ட அறிவும் அவருடைய ஸிவில் சட்ட நூலில் நன்றாகப் புலனாகின்றன. முக்கியமாக வீடு கட்டும் முறையைப்பற்றி அவர் விளக்கியிருக்கும் பகுதி, அவருக்கு ஸிவில் சட்டத்தில் உள்ள அநுபவ அறிவைத் தெளிவாகக் காட்டுகிறது. கோயில், அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள், அரசாங்கக் கட்டிடங்கள் முதலியவற்றைப்பற்றியும் அவர் விவரித்திருக்கிறார்; சாதாரண மனிதனின் குடியிருப்பு, வீடு கட்டும் முறையையும் அருமையாக விளக்கி எழுதியிருக்கிறார்.

இந்த நூலாசிரியரின் காலத்துக்கு முன்பே சட்டம்பற்றியும் பழக்க வழக்கங்கள்பற்றியும் பல தர்ம சூத்திரங்கள் தோன்றியிருந்திருக்கின்றன. ஆனால் வீடு கட்டும் முறையைப்பற்றி ஒரு வார்த்தைகூட அவைகள் சொல்லவில்லை. இவருக்குப் பின்னால் தோன்றிய ஸ்மிருதிகளோ புரியாதபடி சிதறலாக அதுபற்றிச் சில விஷயங்களைச் சொல்லியிருக்கின்றன.

இப்படி ஏறக்குறைய இவருக்குச் சமகாலத்தினரெல்லாம் இந்த விஷயத்தில் அசிரத்தை காட்டியிருப்பதே இவருடைய நூலின் சிறப்புக்குச் சான்றாகும்.

அண்டை அயல் வீட்டார்கள் சௌஜன்யமாக இருக்க வேண்டும் என்பதே கௌடில்யரின் மிக முக்கியமான கொள்கை. ஒரு வீட்டின் உட்புறத்திலிருந்து

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜூன் '53), கல்கத்தா.

வெளிவரும் கழிவு நீர்ச் சாக்கடை யைப் பக்கத்து வீட்டுச் சுவரி லிருந்து குறைந்தது மூன்று அடி யாவது இடைவெளி விடாமல் கட்ட 'அர்த்த சாஸ்திரம்' அனு மதிக்கவில்லை. புகைப்போக்கி, நீர்த்தேக்கம், யந்திரம், கல்லுரல் முதலியவைகளை மட்டும் அவசியம் நேர்ந்தால் அருகில் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அவை களைச் சுத்தமாகவும் அண்டை வீட்டிலிருந்து குறைந்தது ஓர் அடி தள்ளியும் அமைக்கவேண்டும். குப்பைத்தொட்டி, மாடிப்படி, கக்கூசு, சாக்கடை முதலியவை களைப் போதப் பாதையைப் பாதிக்கும் இடங்களில் கட்ட அது அநுமதிக்கவில்லை. அவசர சமயங்களில் தாற்காலிகமாக வேண்டுமானால் கட்டிக்கொள்ள லாம். உதாரணமாக, பிரசவகாலத் தில் ஸ்திரீகளுக்க கக் கக்கூசும் விசேஷ காலங்களில் அதிகப்படி யான தண்ணீர் வெளியேறச் சாக் கடையும் அமைத்துக்கொள்ளலாம்.

இரண்டு கட்டிடங்களுக்கு இடையில் குறைந்தது நான்கு அடி யாவது நடைப்பாதைக்காக விட வேண்டும். ஆனால், இரண்டு வீட் டுத் தாழ்வாரக் கூரைகள் மட்டும் முன்புறம் நீண்டு ஒன் றுடன் ஒன்று ஒட்டியிருக்கலாம். தட்சசிலாவில் உள்ள ஸிர்க்காப் நகரிலும் ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் உள்ள சிசுபால்கட் என்ற கோட்டையிலும் இருக்கும் வரிசையான வீடுகளுக்கு இடையே குறுகிய சந்துகள் இருப் பதைக் கவனியுங்கள். ஒரு வரிசை யில் உள்ள வீட்டுக் கதவோ ஜன்னல்களோ எதிர் வீட்டுக் கதவுக்கும் ஜன்னல்களுக்கும் எதிரே இருக்கக் கூடாது. இது அந்த அந்த வீட்டின் அந்தரங்கத் தைப் பாதுகாக்க அவசியமாகும். ராஜபாட்டையோ, அகன்ற ரஸ்தாவோ உள்ள இடங்களில் மட்டும் இந்த விதி தேவையில்லை.

ஒரு வீட்டுக்கு உள்ளே செல் லும் பிரதம வாசல், தெருவில் தான் இருக்கவேண்டும். ஆனால் வீட்டைப் பழுது பார்க்கும் சம யங்களில் பக்கத்துச் சந்தில் சிறிய வாசல் ஒன்றை அமைத்துக் கொள்ளலாம்.

ஒரு வீட்டிலிருந்து மழைத் தண்ணீர், எதிர் வீட்டுக்கு ஓடி அந்தக் கட்டிடத்துக்குச் சேதம் உண்டுபண்ண அநுமதியில்லை. வீட்டின் கூரைகளுக்குக் கோரை வேய்ந்தால், மழை ஜலம் மெது வாகக் கீழே சிறிது சிறிதாகச் சொட்டிவிடும். இப்படி இல்லா மல் மழை நீரை எல்லாம் சேகரித்து இடைஞ்சல் இல்லாத இடத்தில் விழும்படி செய்யக் கூரையின் ஓரத்தில் கூடுவாயும் அமைக்கலாம். மழை பெய்யும் போது சாக்கடையை அடைக் காமல் திறந்தே வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் மழை பெய்யும்போது சாக் கடையை அடைத்துவிட்டுப் பிறகு திறந்தால் பொது ஜன சுகாதாரத் தைப் பாதிக்கும். தண்ணீர், மல ஜலம் முதலியவைகளினால் ஒரு வன் அண்டைவீட்டுக்குப் பாதகம் விளைவித்தால், அவன் கடுமையான தண்டனைக்கு உள்ளாகவேண்டும்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன் மூன்றும் நூற்றாண்டிலேயே கௌடில்யரின் நூல் தோன்றி விட்டதா என்பது சந்தேகத்துக் குரியதாக இருக்கலாம். ஆனால் அதில் கூறியிருக்கும் விஷயங்கள் மட்டும் மிக முன்னேற்ற

மானவை; அறிவில் சிறந்தவை. இது மட்டும் உண்மை.

கௌடில்யரின் முக்கிய நோக்கம், நகர மக்களுக்கு அதிகமான வசதியோ அநுகூலமோ ஏற்படுத்த வேண்டும் என்பதல்ல; அண்டை அயல் வீட்டார் சண்டை சச்சர வில்லாமல் வாழ வகை செய்ய வேண்டும் என்பது தான் அவருடைய நோக்கம். அண்டை அயல் வீட்டார் மனமொத்து ஸௌஜன்யமாக இருந்தால், அவர்கள் இஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் வீடு கட்டிக்கொள்ளலாம் என்றே அவர் சொல்லுகிறார்.

கௌடில்யரின் நோக்கம் எப்படி இருந்தாலும், நிச்சயமாக அவருடைய விதிகள் பல நவீன முனிஸிபாலிட்டிகளின் சட்டதிட்டங்களைவிட மேலானவையே. நம் காலத்து முனிஸிபல் கவுன்ஸிலர்கள் இந்தப் பழங்கால ஏட்டில் உள்ள விஷயங்களைப் படித்தறிவது அவசியம். கௌடில்யரின் கொள்கைப்படி தண்ணீர், மலஜலம் முதலியவற்றால் கட்டிடங்களுக்குச் சேதம் ஏற்படாமல் இருந்தால், நம் நகரங்கள் எவ்வளவோ அழகாகவும் சுத்தமாகவும் காட்சியளிக்குமே.

கெட்டிக்கார எலி

ஓர் எலி, வளையிலிருந்து வெளியே வரப்போகும் சமயம், பூனை ஒன்று தன்மேல் பாயத் தயாராய்க் காத்துக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டது. பிறகு கீழே போய் வேறு பெரிய எலியிடம், "அருகே நெல் குதிர் ஒன்று இருக்கிறது; போகலாம், வருகிறீர்களா? தனியாகப் போயிருப்பேன். இருந்தாலும் உங்களைப்போல் ஒரு பெரியவரோடு போனால் நல்லதென்று பட்டது" என்றது.

"சரி. இதோ வருகிறேன். நீ முன்னால் போ" என்றது இரண்டாம் எலி.

"என்ன, உங்களுக்கு முன்னால் நான் போகிறதாவது! நீங்கள் பெரியவர்; நீங்கள் தான் முன்னால் போகவேண்டும். நான் சின்னவன்; உங்கள் பின்னால் வருகிறேன்" என்றது முதல் எலி.

இரண்டாம் எலிக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. அது முதலில் புறப்பட்டு வெளியே வந்தது. அங்கே காத்திருந்த பூனை உடனே கப்பென்று அதைக் கவ்விக்கொண்டு ஓட்டமாய் ஓடிப் போய்விட்டது. அந்தச் சமயம் பார்த்து மற்ற எலி எவ்விதத் தொல்லையுமின்றிச் சௌக்கியமாய் வெளியே கிளம்பியது.

—ஆம்ப்ரோஸ் பியர்ஸ்

சரித்திரப் பிரசித்தமான கோயிலும் கோட்டையும் பற்றிய ஒரு வரலாறு.

நர்மதைக் கரையில்

க்ஷணப்ரபா

மத்தியப் பிரதேசத்தில் நாகபுர், ஜப்பல்புர் இந்த இரண்டும் முக்கியமான நகரங்கள். ஜப்பல்புருக்கு அருகில் நர்மதைக் கரையில் நாங்கள் தங்கியிருந்த இடம் மரங்களடர்ந்து அழகாக இருந்தது. 'மதனமகல்' என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற கோட்டை அங்கிருந்து சில மைல் தொலைவில் இருப்பதாக என் புருஷரின் நண்பர் ஜோஷி சொன்னார். ஹாத்பார்க் ஸ்டேஷனிலிருந்து அவருடன் புறப்பட்டோம். "சத்தத்தக்கு ஏதாவது வண்டி வைத்துக் கொள்ளலாமே!" என்றேன். ஜோஷி, "என்ன, இந்த ஐந்தாறு மைல் ஒரு பிரமாதமா? எங்கள் வீட்டுப் பெண்கள் சர்வ சகஜமாக நடப்பார்களே. உங்களால் மட்டுமா முடியாது போகிறது?" என்று சொல்லிவிட்டார். உடனே என் பெண்ணும் பையனும் உற்சாகமாகப் புறப்பட்டுவிட்டார்கள். அதனால் வேறு வழியின்றி நாங்களும் அவர்களோடு நடந்தே சென்றோம்.

பழைய ஜப்பல்புர் என்று இந்தப் பகுதிக்குப் பெயர். இரண்டு மைல் தொலைவு வந்ததும் மலைப்பக்கமாக வழி திரும்பியது. அங்கே ஒரு பட்சணக்கடை இருந்தது. கொஞ்சம் பட்சணம் வாங்கித் தின்று, தண்ணீர் குடித்துவிட்டுச் சற்று இளைப்பாறினோம். இந்த ஸாத்புரா மலைத் தொடரில் ஒரு



ராணி துர்க்காவதியின் மதனமகல் கோட்டை

விசேஷம், துண்டு துண்டான கறுப்புக்கல் குண்டும் குழவியுமாக எங்கேயும் காட்சியளிப்பதுதான்; சில மலைகளைப்போல் இது மொத்தமாகப் பெரிய சுவர் மாதிரி அமைந்திருக்கவில்லை. மலைமேல் எங்கும் பசுங்காடு செழித்திருந்தது. வழியெல்லாம் மாந்தோப்புக்கள். பக்கத்திலேயே மலைச் சரிவில் பசும் பயிர் நிறைந்த வயல்கள். நிதானமாக நடந்துகொண்டே வரும்போது எதிரே ஒரு குகை தெரிந்தது. இதில்தான் குப்தேசுவரர் சந்நிதி இருக்கிறது. இந்தப் பக்கத்தில் பிரபலமான சிவஸ்தலம் இது. நாலுபக்கமும் மலை சூழ்ந்த இடத்தில் சிறிய சமவெளியில் இது அமைந்திருக்கிறது. குகை வாயிலை

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி: ஜூன்'53), கல்கத்தா.

அழகாய்க் குடைந்து அமைத்த கோயில். கறுப்புக்கல் சிவலிங்கம் குகையினுள் மண்ணில் அரை குறையாய் மறைந்து கிடப்பதால் குட்டேசுவரர் என்று ஸ்வாமிக்குப் பெயர் வந்தது. அதற்கு அருகில் கணேசர் சிலை ஒன்று இருக்கிறது. குகைக்கு எதிரே கல்லில் நந்தி ஒன்றும் செதுக்கி வைத்திருக்கிறது. முன்பக்கம் மண்டபத்தில் சில சாது, சந்நியாசிகள் பூஜையும் அர்ச்சனையும் செய்துகொண் டிருந்தார்கள். அமைதியான இடம். மனசுக்கு நிம்மதியாக இருந்தது. ஒரு கிணறு இருக்கிறது. அதன் நீர் இனிப்பாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது. நீர் ஆழத்தில் நர்மதையோடு கலப்பதாகச் சொன்னார் ஜோஷி. அதனாலோ என்னவோ நர்மதையின் நீரைப் போல் இதுவும் கருநீலமாகக் காட்சியளிக்கிறது.

ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு அந்த நீரை அள்ளிக் குடித்தோம். மறுபடியும் மலைமேல் ஏற ஆரம்பித்தோம். மலையுச்சியை நெருங்கும்போது பல வர்ணக் கொடிகள் உயரப் பறப்பது தெரிந்தது. ஜோஷி, "அதுதான் ஸாரதா தேவி கோயில்" என்றார். அங்கே வந்து சேர்ந்தோமோ இல்லையோ, எங்கிருந்தோ மழை கொட்டுக் கொட்டென்று கொட்டத் தொடங்கியது. வழியில் ஒரு பூக்காரியிடம் மாலை ஒன்று வாங்கினேன். இவ்வளவு அழகாகச் செதுக்கிய ஸரஸ்வதி உருவத்தை நான் இதுவரை பார்த்ததே இல்லை. நான்கு கையுடன், 'வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு' விளங்கும் அம்மன் கழுத்தில் அந்த மாலையைப் போட்டேன். கோயிலை விட்டு



ஜப்பல்புர் யோகினி கோயில்

வெளியே வந்து பார்த்தால் வானம் இருட்டிக்கொண்டு வந்தது. பயங்கரமாக மின்னல் வீசியது. குழந்தைகளை அழைத்துக்கொண்டு திரும்பி வீடு வந்து சேருவோமா, அதற்குள் பொழுது போய்விடுமோ என்று எனக்குத் திகில். ஆனால் கைக் கடிகாரத்தைப் பார்த்ததில் பொழுது போக இன்னும் அதிக நேரம் இருக்கிறது என்று தெரிந்தது.

நல்ல வேளையாகக் கொஞ்சங் கொஞ்சமாய் வானம் வெளுக்கத் தொடங்கியது. ஜோஷி அப்போது, "இனிமேல் புறப்பட்டுக் கீழே போகலாம். இந்தக் கோயில் ராணி துர்க்காவதியின் காலத்தில் கட்டியது" என்றார். ராணி மொகலாயர்களை எதிர்த்த அந்த வரலாற்றைச் சொல்லிக்கொண்டே வந்தார். வழியில் ஓர் இடத்தில் பிரம்மாண்டமான மனித உருவம் நிற்பது தெரிந்தது. மாலை மங்கலில் அதைப் பார்த்தால் பயந்து விடுவோம். கற்சிலை தான். சுற்றிலுமுள்ள பசுமையான காட்சிகளை நிதானமாகப் பார்த்துக்கொண்டே வழி நடந்தோம். வழியில் ஒரு பெரிய குளம் தெரிந்தது. அதைச் சுற்றிச் சிற்ப வேலை அமைந்த தூண்கள் இருந்தன. தூண்களின் அடிப்பாகம் நீரில்

அமிழ்ந்து கிடந்தது. மேல்பாகம் கருமையாக விளங்கினாலும் அடிப்பாகம் வெள்ளை வெளேர் என்று நீரில் தெரிந்தது. குளத்தைச் சுற்றிச் சோலைகள் அடர்ந்திருந்தன. "ராணி துர்க்காவதியின் காலத்தில் இந்த மாதிரி அநேகம் குளங்கள் இங்கே இருந்தனவாம். அதோ எல்லாம் காடு மூடிக் கிடப்பதைப் பாருங்கள்" என்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினார் ஜோஷி. சற்றுத் தொலைவில் ஒரு குளம் இருந்தது. ஆனால் அதன் படிகளெல்லாம் இடிந்து போய் நீர் சுண்டிக் கிடந்தது.

பிறகு அங்கங்கே தங்கி இளைப்பாறிக்கொண்டே இரண்டு மலைகளுக்கு நடுவே சென்றோம். வரவர அக்கம் பக்கத்தில் காடுகள் நெருக்கமாக இருந்தன. அங்கே இடிந்து கிடந்த தூண்களையும் மதில்களையும் பார்த்தோம். ஒரு திருப்பத்தண்டை வரும்போது பொழுது சாய்ந்து மங்கிய நிலாவொளி தோன்றியது. அப்போது ஜோஷி என் குழந்தைகள் இரண்டின் கைகளையும் பிடித்துக்கொண்டே, "பேசாமல் கொஞ்ச தூரம் வாருங்கள். பயம் ஒன்றுமில்லை" என்று சொல்லிக்கொண்டே வேகமாக நடக்க ஆரம்பித்தார். இருந்தாலும் திகில்பட வேண்டிய விஷயம் ஏதோ இருந்ததனால்தான் அவர் அப்படிச் சொன்னார் என்று புரிந்துகொண்டு நாங்கள் சும்மென்று அவர் பின்னால் நடந்து சென்றோம். வெகு தூரம் கடந்த பிற்பாடுதான் ஜோஷி ஒரு கல்மேல் உட்கார்ந்து பெருமூச்சு விட்டார். நாங்களும் அங்கே வந்ததும், "இனிமேல் கவலை இல்லை" என்றார். "அங்கே ஏதாவது புலி, கரடி இருக்கிறதா என்ன?" என்று என் புருஷர் விசாரித்தார். "இல்லை, இல்லை. சில வருஷங்களுக்கு முன் வழிப்பறியும் கோரக்கொலையும் நடந்த இடம்" என்றார். சற்றுத் தூரத்தில் சமவெளியில் மூன்றடுக்குள்ள இடிந்த கோட்டை ஒன்று தெரிந்தது. இதற்குத்தான் 'மதனமகல்' என்று பெயர். ராஜா தளபத் ஷாவை மணந்த பிறகு கொஞ்சநாள் ராணி துர்க்காவதி இங்கே இன்பமாகக் காலங் கழித்துவந்தாள், பிறகு மொகலாயர்கள் படையெடுத்துச் சூறையாடிவிட்டார்கள். அந்தக் கோட்டையை நெருங்கிப் பார்த்தபோது உள்ளே அழகாகச் சலவைக்கல்லில் கட்டிய மாளிகை ஒன்று இருந்தது. படிக்கட்டுகள் எல்லாம் இன்னும் உருக்குலையாமல் இருந்தன. ஆனாலும் மனித நடமாட்டம் இராததால் பாம்புகள் விசேஷம் என்றார் ஜோஷி. மூன்றாம் அடுக்கிலிருந்து பார்த்த போது கீழே ஜப்பல்புர், சிறிதும் பெரிதுமான பல மலை வரிசைகள், அடிவாரத்தில் வயல் பரப்ப எல்லாம் சேர்ந்து அட்டையில் எழுதிய படம்போல் காட்சியளித்தன.

ஜப்பல்புரில் சௌஷட்டி யோகினி கோயில், 'க்வீன்ஸ் பார்க்' இந்த இரண்டும் பார்க்க வேண்டியவை. ஜப்பல்புரிலிருந்து கண்டோன்மெண்டுக்குப் போகும் வழியெல்லாம் கட்டிடம், பாட்டை முதலியவை ஒழுங்காக அமைந்திருக்கின்றன.

நிந்தனை செய்யாதே; துன்புறுத்தாதே; மித உணவு கொள்; தனிமையில் தியானம் செய். நற்கதி அடைவாய்.

—புத்தர்.

பாகிஸ்தானில் கலியாணம்

பேகம் முகம்மதலி

புரோகிதன் தேவையில்லாத ஒப்பந்தமே இந்தப் பழமையான இஸ்லாமியத் திருமண முறை. இன்று பாகிஸ்தான் பிரதம மந்திரியாக இருக்கும் முகம்மதலியின் மனைவியே இதை எழுதியிருக்கிறார்.

பாகிஸ்தானின் பழக்க வழக்கங்கள் என்றதும் ஏதோ பழைய காலத்திலிருந்து அந்தப் பிராந்தியத்தில் வழங்குவது சம்பந்தமாகச் சொல்லப் போகிறேன் என்று எண்ணவேண்டாம். இஸ்லாமிய விவாக முறையைப்பற்றித் தான் சொல்லுகிறேன். விவாகம் என்பத இஸ்லாம் மதத்தில் ஆணும் பெண்ணும் செய்துகொள்ளும் ஓர் ஒப்பந்தமாகும். விவாகம் நடைபெற வேண்டுமானால் நாங்கள் மசூதிக்குப் போய் வர வேண்டியதில்லை. புரோகிதர் வந்துதான் விவாகச் சடங்குகளைச் செய்ய வேண்டும் என்பதம் இல்லை. இஸ்லாம் மதத்தில் புரோகிதனுக்கே இடமில்லை.

இஸ்லாமியச் சட்டத்துக்குட்பட்டு ஆண் வீட்டார், பெண் வீட்டார் இருவரும் சேர்ந்து ஸிவில் ரீதியில் ஒப்பந்தம் செய்தகொள்வார்கள். தம்பதிகள் அந்த ஒப்பந்தச் சீட்டில் இரண்டு சாட்சிகளுக்கு எதிரில் கையெழுத்திட்டால் போதும்; பிரகு சாட்சிகளும் அதில் கையெழுத்திடுவார்கள்.

இஸ்லாம் மதத்தில் கணவன், மனைவி இருவருக்குமே விவாக ரத்து செய்துகொள்ள உரிமை உண்டு. விவாகத்தின்போது, 'இன்ன இன்னடடி நடக்க வேண்டும். இல்லாவிட்டால் விவாக ரத்து செய்துகொள்ள இடமுண்டு' என்று பரஸ்பரம் நிபந்தனைகள் விதிக்கலாம்.

ஓர் உதாரணம் சொல்லுகிறேன்: தான் உயிரோடு இருக்குப்போது இன்னொருத்தியைத் தன் புருஷன் மணம் செயது கொள்ளக் கூடாது என்று ஒப்பந்தத்தில் மனைவி சொல்லியிருந்து புருஷன் அப்போது அப்படி ஒப்புக்கொண்டு பின்னால் அதை மீறுகிறான் என்று வைத்தக்கொள்ளலாம். அப்போது விவாக ரத்து செய்துகொள்ள மனைவிக்குப் பூரண உரிமை உண்டு.

இஸ்லாமியச் சட்டப்படி புருஷன் தன் மனைவிக்து 'மஹர்' (பரிசம்) அளிக்கவேண்டும். இது அவளுக்கு உறுதி அளிப்பதாகும். இந்தத் தொகை இவ்வளவு தான் என்று நிர்ணயமாகவில்லை. இருந்தாலும் புருஷனின் சக்திக்குத் தகுந்தபடி அளித்தால் போதும்.

மூலம்: பம்பாய்க் கிரானிக்கிள் (ஆங்கிலம்: 28-6-'53), பம்பாய்.

உடனே 'மஹர்' கொடுப்பது, பின்னால் கொடுப்பது என்று இரண்டு விதமும் உண்டு. மனைவி எப்போது கேட்டாலும் கொடுப்பது முதல் வகை. விவாகம் ரத்தாகும் பட்சத்தில் மனைவிக்குக் கொடுப்பது இரண்டாம் வகை.

மனைவியைத் தள்ளிவிட்டு 'மஹர்'த் தொகையையும் புருஷன் கொடுக்க மறுத்தால் மற்ற விவில் ஒப்பந்தங்களை மீறினால் செய்கிற மாதிரியே கோர்ட்டில் தாராளமாக வழக்குத் தொடரலாம். இந்த 'மஹர்'த் தொகையே மனைவிக்கு ஒரு பாதுகாப்பாக அமைந்திருக்கிறது. விவாக ரத்து செய்தால் பின்னால் 'மஹர்'த் தொகை அவளுக்குப் பயன்படும். 'மஹர்'த் தொகை போய்விடுமே என்ற காரணத்தால் புருஷன் இல்லற வாழ்வில் எடுத்ததற்கெல்லாம் அவசரப்பட்டு எதையும் செய்ய முடியாது.

இஸ்லாமிய விவாகத்தில் முக்கியமான சடங்கு, ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதுதான். எவ்வளவு எளிமையான முறை பாருங்கள்! இஸ்லாம் மதத்தின்படி விவாகம் என்பது இந்த உலகத்தில் பரஸ்பரம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள ஒரு சம்பந்தமே தவிர அதற்கும் மறுவுலகத்துக்கும் எந்த விதமான சம்பந்தமுமில்லை.

இந்த எளிய சடங்கோடு சில வேடிக்கை, தமாஷ் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன; என்றாலும் விவாகச் சடங்குக்கும் இவைகளுக்கும் சம்பந்தமில்லை.

தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் இந்தப் பழக்க வழக்கங்களைப்பற்றி ரசமான தகவல்கள் அநேகம் உண்டு. அவைகளை இங்கே விவரமாகச் சொல்கிறேன்.

மணமகன் மணமகள் இருவரின் பெற்றோரும் கூடி விவாகதினம் நிச்சயமானதும், அதற்கு இரண்டொரு வாரத்துக்கு முன்னதாகவே ஏற்பாடுகளெல்லாம் நடக்க ஆரம்பித்துவிடும். வீடே மகிழ்ச்சி நிரம்பிக் கலகலவென்று இருக்கும். பழைய வழக்கத்தையொட்டிப் பெண் வீட்டில் ஒரு வாரம் அல்லது பத்து நாளைக்கு முன்பே சில சடங்குகள் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் மற்றும் சிறு பெண்களும் அங்கே கூடி விடுவார்கள். சிறு பெண்கள் விவாக சம்பந்தமான நாடோடிப் பாடல்கள் பாடி ஆடுவார்கள்.

'மாஞ்சா' என்பது பாகிஸ்தானின் பல பகுதிகளில் விவாகத்துக்குமுன் பொதுவாக நடைபெறும் சடங்கு. அப்போது தொடர்ந்து சில நாள் வரையில் கொதிக்க வைத்த பாலில் மஞ்சளும் சில வாசனை மூலிகைகளும் கலந்து அதைப் பெண்ணின் உடம்பில் பூசி அழகுபடுத்துவார்கள்; விவாகமாகி இன்பமாகக் குடும்பம் நடத்தும் பெண்கள் தான் இப்படிப் பூச வருவார்கள். மணப்பெண் அப்போது மெல்லிய மஞ்சள் ஆடை உடுத்திருப்பாள். விவாக தினத்தன்று பொன் ஆபரணங்களும் வேறு நகைகளும் சிவப்பு ஆடைகளும் அணிந்துகொண்டு அழகாகக் கூந்தலைப் பின்னிக் கொண்டை போட்டு அவள் வரும்போது உடம்புக்கு அவை எடுத்துக் காட்டும். இந்த மாதிரி சடங்குகளிலெல்லாம் பெண்கள் தான் கலந்துகொள்வது வழக்கம்.

'நிக்காஹ்' என்ற விவாக ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முந்திய

நாள் 'மேஹ்ந்தி' என்று ஒரு சடங்கு நடக்கும். பெண் வீட்டைச் சேர்ந்தவர்கள் பிள்ளை வீட்டுக்கும் பிள்ளை வீட்டார் பெண் வீட்டுக்கும் வந்து ஒருவரை ஒருவர் அழைப்பார்கள். அப்போது வீட்டில் சிரிப்பும் கொம்மாளமுமாக இருக்கும். பெண்கள்தான் இதில் கலந்துகொள்வார்கள். மணப்பெண்ணின் காலிலும் கையிலும் அரைத்த பச்சை மருதோன்றியை அப்பிவிடுவார்கள். ஒரு மணி நேரமாவது அப்படியே இருக்கவேண்டும். மறுநாள் மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்யும்போது கைவிரல், பாதம் எல்லாம் செக்கச் சிவக்கப் பற்றியிருக்க வேண்டும்.

மறுநாள் பெண் வீட்டில் மணமகன் தன் பெற்றோர், உறவினர், நண்பர்களுடன் வருவான். விவாக ஒப்பந்தம் கையெழுத்தாகச் சில நிமிஷ நேரமே பிடிக்கும். பிறகு விருந்து நடக்கும். அவல் பொரி, பூரி, கோழிக் குர்மா இப்படிப் பல வகைப் பண்டங்களைப் பரிமாறுவார்கள். விருந்து என்றால் லேசா? அதற்கு ஏற்பாடு செய்து பரிமாறித் தட்டுக்களைக் கழுவி முடிக்கும் வரை வெகு அக்கறையாக இருக்க வேண்டும். பெண் வீட்டைச் சேர்ந்தவர்களும் அவர்களுடைய நண்பர்களும் விருந்தின்போது ஒத்தாசையாக இருப்பதால்தான் இவ்வளவு பெரிய பொறுப்பைச் சமாளிக்க முடிகிறது.

மணச் சடங்கன்று தமாஷ் பாட்டு, வாத்தியம் எல்லாம் உண்டு. விவாகம் இரவில் நடப்பதாக இருந்தால் வாணவேடிக்கை, தீப அலங்காரம் எல்லாம் பிரமாதமாக இருக்கும்.

'நிக்காஹ்' நடப்பதற்கு முன் எல்லாரும் மணப் பெண்ணின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள். பூ மாலையால் அலங்கரித்த ஒரே மேடைக்கு மணப் பெண் தோழிமாருடன் வருவாள்.

உலகத்தில் எந்த இடத்திலும் விவாக தினத்தன்று மணப் பெண்கள் எல்லாருமே அழகாகக் காட்சியளிப்பதுதான் சகஜம். பல தலைமுறைகளாக மண ஆடை ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. இவைகளில் பல தினுசு உண்டு. சில சமயம் 'ஸாரி'யோ, 'பர்ஷி கராரா' என்ற நீண்ட சேலையோ அணிவாள்; சில சமயம் மொகல் ரீதியில் 'பிஷ்வாஜ்' என்ற உடை அணிவாள்.

குடும்பத்தின் பழைய அந்தஸ்துக்குத் தக்கபடி பெண்ணுக்குப் பிள்ளை வீட்டார் உடைகளை அனுப்பி வைப்பார்கள். பொன், வைர நகைகளும் சரிகை தைத்த வர்ணச்சேலையும் அணிந்து கொண்டு மணப்பெண் வரும்போது கீழ்நாட்டு ரீதியில் அழகாகத்தான் விளங்குவாள். மண ஆடை சிவப்பு நிறத்தில் ஏதாவது ஒரு வகையில் அமைந்திருக்கும்.

'நிக்காஹ்' முடிந்ததும் மணமகனை மணமகள் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கே பெண்கள் மட்டுமே இருப்பார்கள். பூ அலங்கரித்த மேடையில் எதிர் எதிராக மணமகனும் மணமகளும் உட்காருவார்கள். மணப்பெண் முகத்தைப் பட்டுத் துணியாலும் மாலையாலும் மூடிக்கொண்டிருப்பாள். ஒரு பெரிய நிலைக் கண்ணாடியை அவர்களுக்கு நடுவே வைத்து இருவரையும் போர்வையால் மூடி விடுவார்கள். இரு

வரும் அப்போது ஒருவரை ஒருவர் கண்ணாடியில் பார்த்துக்கொள்வார்கள்.

அது முடிந்ததும் பெண் புக்ககத்துக்குப் புறப்படுவாள். பெற்றோர்களை விட்டுப் பிரியும் காட்சி உருக்கமாக இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்துக்கேற்றபடி சங்கீதமும் அமைந்திருக்கும். குழந்தைப் பருவம் முதல் இன்பமாய்க் கழித்த பிறந்த வீட்டை விட்டுப் போகிறோமே என்று மணமகள் கண் கலங்கும்போது பெற்றோர் உற்றார் உறவினருக்கும் கண்ணீர் வருவது சகஜந்தானே? இருந்தாலும் மனங்குழம்பாமல் கண்ணியமாக நடந்துகொள்வார்கள்.

இப்படி வருத்தத்தோடு பிரிய நேர்ந்தாலும் நாலைந்து நாளைக்கெல்லாம் மணப்பெண் புருஷனுடன் மறுபடி பிறந்த வீட்டுக்கு வருவாள். கொஞ்ச நாள் இருவரும் அங்கே கழிப்பார்கள். பிறகுதான் குடும்பம் நடத்தச் சொந்த வீட்டுக்கு மணமகனும் மணமகளும் புறப்பட்டுப் போவது வழக்கம்.

வானலோகத்தின் அழகு

ஒரு நாள் இங்கிதமாக நிலவு வீசிக்கொண்டிருந்தது. என் சிறு மகள் மிகவும் குதூகலமாக வானத்தையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

"உனக்கு என்ன தோன்றுகிறது, கண்ணே?" என்று நான் கேட்டேன்.

அவள் மிகுந்த சிந்தனையோடு, "இந்த வானம் மகா அழகாயிருக்க வேண்டும்; இல்லையா, அப்பா. இதன் அடிப்புறமே இப்படி இருக்கிறதே; மேல்புறம் எப்படித்தான் இருக்குமோ!" என்றாள்.

—'காரொனெட்'

மகிழ்ச்சியின் மர்மம்

சில நாளைக்கு முன் என் அத்தையைப் பார்க்கப் போயிருந்தேன். அவளுக்கு வயசு எண்பது ஆகிறது. அவளருகே உட்கார்ந்து, அவளுடைய நீண்ட ஆயுளையும் மகிழ்ச்சியான வாழ்க்கையையும் குறித்து, இவ்வாறு கேட்டேன்:

"அத்தை, நீ குடும்பப் பொறுப்பை வகித்தது, கோயிலுக்குத் தவறாமல் போய் வணங்கியது, பிறருக்கு உபகாரம் செய்தது இந்த உழைப்பையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இத்தனை வேலைகளுக்கிடையிலும் சந்தோஷம், திருப்தி, நிம்மதி இவற்றோடு நீ வாழ்ந்திருக்கிறாய். இத்தனைக்கும் உனக்குச் சக்தியும் மனச்சாந்தியும் எங்கிருந்து கிடைத்தன? உன் வாழ்க்கை முழுவதும் நீ மகிழ்ச்சி கொண்டிருந்ததன் ரகசியம் என்ன?"

அத்தை என் காதோடு காதாக ஒரே வார்த்தையில் பதில் அளித்தாள். "உணவு!"

—சார்லிஸ் பாகீடிஸ்லாவ்

பரீட்சித்துப் பார்த்தவை

காபி ஃபில்டரிலோ துணியிலோ டிகாக்ஷன் வடிகட்டிய பின் தங்கும் பவுடரை என்ன செய்கிறீர்கள்? குப்பைத் தொட்டியில் போட்டு விடாதீர்கள். வீட்டு முற்றத்தில் ஒரு தாம்பாளத்தில் கொட்டி வையுங்கள். அது மேலும் மேலும் சேர்ந்துகொண்டே இருக்கட்டும். அதோடு வெயிலில் காய்ந்து கொண்டிருக்கட்டும். வெள்ளி, எவர் ஸில்வர் தட்டுக்களையும் கிண்ணங்களையும், பிசுக்குப் பிடித்த தட்டுக்களையும் இந்தக் காய்ந்த காபித் தூளைக்கொண்டு தேய்த்துச் சுத்தம் செய்யுங்கள். அந்தப் பாத்திரங்களை இப்படித் துலக்கிக் கழுவியதும் அவை எவ்வளவு பளபளப்பாக இருக்கின்றன பாருங்கள்.

*　　*　　*　　*

பல்லில் எனமல் போய்விடுமானால், பல் மிகவும் கூசும். அதனால் சிரமம் ஏற்படும். இதற்கு ஒரு பரிகாரம் என்ன தெரியுமா? சுண்ணம்பு தடவி வெற்றிலை போடுங்கள். சீவல் பாக்கை உபயோகியுங்கள். பல் கூசுவது நிற்கும்வரை இப்படி வெற்றிலை போட்டு வாருங்கள்.

*　　*　　*　　*

மாம்பழத்தைக் கடித்துத் தின்னும்போது, நம் முழங்கை வரைக்கும் சாறு வழிந்து உபத்திரவம் தருகிறதே சிலசமயம்; இதற்கு மாற்று இல்லையா? முழுப் பழத்தை எடுங்கள். பழத்தின் நடு மத்தியில் குறுக்கே வட்டமாக ஒரு பேனாக்கத்தியால் கீறுங்கள். பிறகு மேல் பாதியையும் கீழ்ப் பாதியையும் மெல்லப் பிடித்துத் திருகினால், கொட்டையிலிருந்து இரண்டு சிறு கிண்ணங்கள்போல் தோலுடன் சதை வந்துவிடும். ஸ்பூன் ஒன்றைக் கையில் பிடித்துக்கொண்டு, அந்தக் கிண்ணங்களிலிருந்து பழத்தைச் சௌகரியமாய் எடுத்து உண்ணலாம்.

—'ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம்,' சென்னை.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, ‘ஃபில்மிண்டியா’ ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை ‘ஃபில்மிண்டியா’ ஜூன் ’53 இதழில் வெளியானவை.

கேள்வி: வி. டி. தேஷ்முக்குக்குச் சம்ஸ்கிருதத்தில் கவி பாடத் தெரியுமென்று கேள்விப்பட்டிருக்கிறீர்களோ?

பதில்: அவர் இப்போது தெலுங்கு பாகவதர் ஆனாலும் ஆவார்.

* * *

கே: சிவப்புச் சாயத்தைப் பூசிக்கொள்வதில் பாகிஸ்தான் முந்துமா? இந்தியாவா?

ப: பாகிஸ்தான்.

* * *

கே: ஐஸன்ஹோவர் ஆட்சியில் இந்தியாவுக்குச் செய்யும் உதவி நீடிக்குமா?



ப: அந்தத் தானங்களுக்குப் புது நாடாவைப் போடுவார்கள்.

* * *

கே: இப்போது நம் தேச பிதா யார்?

ப: செத்துப் போனவர் இப்போது தாத்தா ஆகிவிட்டார். வாழ்ந்திருக்கிற நேருதான் பிதா.

* * *

கே: பண்டித நேருவுக்கு ஜோஸ்யத்தைக் கண்டால் ஏன் பிடிக்கிறதில்லை?

ப: யாருக்கும் வாழ்க்கையின் கடைசிப் பகுதியில் ஜோஸ்யம் பிடிக்காது.

* * *

கே: அமெரிக்கர்களிடமிருந்து எந்த நல்ல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்?

ப: கடினமான உழைப்பையும் முயற்சியையும்.

* * *

கே: முட்டாள், அயோக்கியன் இருவரில் யார் தேவலை?

ப: அயோக்கியன்தான். அவனைப் பிடித்துத் தண்டிக்கலாம். முட்டாளைப் பிடிக்கலாமேயொழிய தண்டிக்க முடியாது. தண்டனை செய்வதானால் அதை உணர்ந்து கொள்வதற்கும் அறிவு வேண்டும்.

* * *

கே: ஆண்களைவிடப் பெண்களுக்கு மூளை அதிகம் என்று சென்னைக் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா சொல்கிறாரே; அது சரி என்று நினைக்கிறீர்களா?

ப: ஆம்; ஆனால் அந்த மூளையைப் பயன்படுத்த ஆண் மகன் வேண்டும்.

* * *

கே: தஞ்சாவூரில் பிள்ளைகளைப் பெற்றவர்கள் பெண்ணைப் பெற்றவரிடமிருந்து சீதனமாக நிலத்தைக் கேட்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ப: அந்தப் பிள்ளைகள் ஆசாரிய விநோபா பாவேயைத் தங்கள் மாமனாராக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கே: நாளை என்பது என்ன?

ப: சோம்பேறிகளின் தேதி.

* * *

கே: இந்தியப் படங்களைப் பிடிக்க அயல் நாட்டு நிபுணர்களை அமர்த்துவது உங்களுக்குச் சம்மதந்தானா?

ப: நாம் புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்வதாக இருந்தால் ஏன் அப்படிச் செய்யக் கூடாது? இங்கிருந்து மாணாக்கர்களை அனுப்புவதிலும் அங்கிருந்து வாத்தியார்களை வருவிப்பதில் செலவு குறைவு அல்லவா?

* * *

கே: புடைவையின் அழகை நீங்கள் அறிவீர்களா?

ப: உடுத்தும் உருவத்துக்கு வடிவு இல்லையானால் புடைவைக்கு அழகு ஏது?

* * *

கே: இந்த 1953-ஆம் வருஷத்தில் யோக்கியமான காங்கிரஸ்காரர் யார்?

ப: ராஜகட்டத்தில் இருக்கிறார்!

* * *

கே: நேருவின் சொந்தக்காரர்கள் யாவரும் அரசியற்காரர்களாக இருக்கிறார்களே?

ப: அவர்களுடைய குடும்பத் தொழில் அது.

* * *

கே: விமானப் பிரயாணத்தைத் தேசிய மயமாக்குகிறார்களாமே!

ப: ஆமாம். நெடுநாளாக அது நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. ஹிராகுட் அணைபோன போக்கிலே அதுவும் குட்டிச் சுவராகப் போகவேண்டாமா?

கே: கோமாளிகள் விகடம் பண்ண எப்போது வருகிறார்கள்?

ப: நட்சத்திர நடிகர்களுக்குக் கரகோஷம் கிடைக்காமற் போகும்போது.

* * *

கே: "நான் எப்போதும் கிளர்ந்தெழும் உணர்ச்சியிலே வாழுகிறேன். நீங்களும் அதைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்பது என் ஆசை" என்று நேரு சொல்கிறாரே?

ப: அவருடைய நோயைப் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்று பொது மக்களைக் கேட்டுக்கொள்ளலாமா?

* * *

கே: சாதாரண இந்தியன் எங்கே வாழ்கிறான்?

ப: பூமியைவிடச் சொர்க்கத்துக்கு அருகில்.

* * *

கே: எந்த நாட்டில் ஜனத் தொகையை நாட்டின் செல்வமென்று கருதுகிறார்கள்?

ப: கானடாவில். ஒவ்வொரு புதிய அவதார மூர்த்திக்கும் அங்கே 'போனஸ்' கிடைக்கிறது.



'கெட்டும் பட்டணம் சேர்' என்ற பழமொழியைச் சில தென்னுப்பிரிக்கப் பாம்புகள் பின்பற்றுகின்றன!

பட்டணத்தில் பாம்பு

இ. எல். வான் ஹ்யூஸன்

பாம்புகள் நிறைந்த இடம் தென்னுப்பிரிக்கா. உலகத்திலேயே மிக வேகமானது, மிக அபாயமானது, மிகப் பெரியது இப்படிப் பலவிதப் பாம்புகளும் அங்கே உண்டு. வேகத்துக்கும் கொடிய விஷத்துக்கும் உலகத்திலேயே பெயர் பெற்றது மம்பா என்ற ஸர்ப்பம். நீளத்திலே உலகத்தில் இரண்டாவது ஸ்தானம் தென்னுப்பிரிக்க மலைப்பாம்புக்கு உரியது. சுமார் 25 அடி வரை நீண்ட மலைப்பாம்புகள் அங்கே இருக்கின்றன. இவற்றையும் விட நீண்ட பாம்புகள் தூரக் கிழக்கு நாடுகளிலேதான் உண்டு.

தென்னுப்பிரிக்காவிலே இப்படிப் பாம்புகள் நிறைந்திருந்தாலும் பாம்பு கடித்து மரணமடைபவரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆனுல், பாம்புகளால் அடிக்கடி வீண் உபத்திரவம் மாத்திரம் உண்டாகிறது.

புல் வெளிகளில் கட்டாயம் பாம்பு இருக்கும் என்று தென்னுப்பிரிக்கவாசி ஒவ்வொருவனுக்கும் தெரியும். ஆனுல் அதைப்பற்றி அவன் பெரிதும் கவலைப்படுவதில்லை. தன் வழியில் பாம்பு குறுக்கிட்டால்தான் அதை அவன் கொல்லுவான். தனக்கு மூன்றடி தூரத்துக்கு அப்பால் பாம்பு போகுமானுல், அவன் அதைச் சட்டை செய்யாமல் நடந்து செல்வான்.

தென்னுப்பிரிக்காவில் இது சகஜமாயிருந்தும், பாம்பு பட்டணத்துக்கு வந்தால், எல்லாருக்குமே ரொம்ப எரிச்சலாயிருக்கிறது. தென்னுப்பிரிக்க நகரம் ஒவ்வொன்றிலுமே, பாம்புகளோடு போராட்டம் அடிக்கடி நடக்கிறது.

மாரிக்கால விளையாட்டு ஸ்தலம் டர்பன் நகரம். அங்கே இங்கிலீஷ்காரர்களே அதிகம். இந்த நகரத்தில் இந்தப் பாம்புகளின் திருவிளையாடல் எப்போதும் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. இங்கே சில மாதங்களுக்கு முன்புதான், பதினைந்தடி மலைப் பாம்பு ஒன்று, பக்கத்துக் குன்றிலிருந்து, பட்டணம் பார்க்க வந்தது. டர்பன் நகரத்தின் பெரிய வீதியிலே, கம்பீரமாக அது ஊர்ந்தது. சில்லறைக் கடைகளிலெல்லாம் தாங்காத கூட்டம் நிறைந்துவிட்டது. சாமான் வாங்க வந்தவர்களின் கூட்டம் அல்ல; தெருவிலே போகிறவர்கள் பாம்புக்குப் பயந்து ஒதுங்கியதால் திரண்ட கூட்டம். "பாம்பின் கிட்டக்கூடப் போக மாட்டேன்" என்று அங்கேயிருந்த போலீஸ்காரன் சொல்லிவிட்டான். பாம்பு மெல்ல மெல்ல நகர மண்டபத்தை

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 19-4-'53), கல்கத்தா.

நோக்கி ஊர்ந்தது. அரை மணி நேரம் வரைக்கும் வண்டிப் போக்கு வரத்தெல்லாம் தடைப்பட்டன. பெரிய வீதி எங்கும் ஒரே அலங் கோலமாக இருந்தது. கடைசியில் இரண்டு குடியானவர்கள் வந்து, பாம்பைப் பிடித்து, ஒரு காரில் ஏற்றினார்கள்.

பிறகு, ஸெப்டம்பரில் மம்பா என்ற ஸர்ப்பம் ஒன்று நகரத் துக்கு விஜயம் செய்தது. அதன் நீளம் பத்தடி. அதன் பற்களி லிருந்து மிகக் கொடிய விஷம் சொட்டிக்கொண் டிருந்தது. பத்தடி மின்சாரக் கம்பி போலத் தெருவிலே குறுக்கும் நெடுக்குமாக அது ஊர்ந்தது. வண்டிப் போக்கு வரத்தெல்லாம் தடைப்பட்டன. ஒரே நிமிஷத்தில் ஆள் நடமாட்ட மில்லாமல் தெருவே காலி யாயிற்று. மிஸஸ் இ. எட்வர்ட்ஸ் என்ற மாது அந்த நகரத்துக்குப் புதியவள். டர்பனுக்கு அவள் வந்து மூன்றே மாதந்தான் இருக் கும். அவள் இந்த ஸர்ப்பத்தைக் கண்டதும் அப்படியே மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டாள். நீக்ரோ வகுப்புச் சிறுவர் சிலர் ஒரு வீட்டுக் கண்ணாடி ஜன்னலை உடைத்து உள்ளே புகுந்துவிட்டார்கள்.

இருபது நிமிஷ நேரம் அந்த ஸர்ப்பம் பிரமாத தர்பார் நடத்தி

விட்டது. ஏனென்றால், அது கடித்தால் சில நிமிஷ நேரத்தில் உயிர் போய்விடும். வீதியிலே இருபது நிமிஷ நேரம் தர்பார் நடத்திய பின்பு, ஒரு ஜலதாரைக்குள் ஸர்ப்பம் புகுந்து மறைந்தது. பிறகு தான், பழையபடி நகரில் ஜன நடமாட்டம் ஆரம்பித்தது.

முந்திய கிறிஸ்துமஸ் பண்டிகையன்று, டர்பன் நகரில் வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. 98 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணம் காட்டியது தெர்மாமீட்டர். நகர வாசிகளெல்லாம் நீஞ்சுவதற்காகக் காலையிலே கடற்கரையை நோக்கிச் சென்றார்கள். அப்போது மம்பா வகையைச் சேர்ந்த பச்சைப் பாம்பு ஒன்று எங்கிருந்தோ திடீரென்று வந்து தோன்றியது. அது எட்டடி நீளம் இருந்தது. சில குழந்தைகளைத் துரத்திவிட்டு, பிறகு ஒரு மரத்தின் மேல் ஏறியது. தற்செயலாய் அந்தப் பக்கம் போய்க் கொண்டிருந்த ஒரு போலீஸ்காரன் தன் ரிவால்வரை எடுத்துப் பாம்பைக் குறி பார்த்துச்சுட்டான். குறி தவறிவிட்டது. அருகிலிருந்த வீட்டுக்காரர் ஒருவர் சட்டென்று தம்முடைய பெரிய துப்பாக்கியை எடுத்து வந்து பாம்பைச் சுட்டார். பாம்பின் தலை துண்டித்துப் போயிற்று. ஐந்து குழந்தைகளை ஐந்தே நிமிஷத்தில் கொன்றிருக்கக்கூடிய அந்தப் பாம்பு இந்த விதமாக மாண்டொழிந்தது.

சில சமயம் இந்தப் பாம்புகளால் மரணம் நேரிட்டு விடுகிறது. வீடுகளுக்குள்ளே இவை அடிக்கடி நுழைந்து விடுகின்றன. இவற்றால் தீங்கு ஏதாவது நேர்வதற்குள்ளேயே பெரும்பாலும் இவற்றைக் கொன்று விடுகிறார்கள். ஒன்றிரண்டு சமயங்களில் விஷயம் மிஞ்சி விடுகிறது. யுத்தத்தில் ஒரு காலை இழந்த வீரரான எச். டி. பேரிங் ரீஸ் என்பவரை அவருடைய வீட்டிலே ஒரு பாம்பு கடித்துக் கொன்றுவிட்டது.

டர்பன் நகர லைப்ரரி அதிகாரியான மிஸ் வயலட் ஹண்ட் என்ற பெண்மணி ஏதோ ஒரு புஸ்தகத்தை ஒரு தட்டிலிருந்து எடுக்கப் போனாள். அப்போது பல வாசகர்கள் அங்கே கூடி மௌனமாய்ப் புஸ்தகங்களைப் படித்துக்கொண்டிருந்தார்கள். துளியும் சந்தடியில்லாத அந்தச் சமயத்தில் திடீரென்று ஓர் ஓலம் எழுந்தது. போட்டது போட்டபடி போட்டுவிட்டு, 60 பேர் சத்தம் வந்த பக்கம் ஓடினார்கள். மிஸ் ஹண்ட் அங்கே நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கு முன்னே 12 அடி நீளமுள்ள ஒரு மலைப்பாம்பு நெளிந்துகொண்டிருந்தது. வாசகர்கள் எப்படியோ அந்த ராட்சசப் பாம்பைப் பிடித்து, மிருகக் கண்காட்சிச் சாலைக்கு அனுப்பினார்கள். ஆனால், போகிற வழியிலே அது தப்பித்தோடி, ஒரு பங்களாத் தோட்டத்துக்குள்ளே புகுந்துவிட்டது!

டர்பன் நகரம் ஒன்றிலே மட்டும் இந்தப் பாம்பு உபத்திரவத்தால், ஜனங்களின் நேரமெல்லாம் எவ்வளவோ வியர்த்தமாகிறது. போன வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஒருநாள் ராத்திரி டர்பன் நகர விமான நிலைய அதிகாரிகள் நல்ல வேளையாக விமானம் எதுவும் வருமென எதிர்பார்த்துக்கொண்டிருக்கவில்லை. நிலயத்தில் சந்தடியற்று நிம்மதியாயிருந்தது. ஜுலு வகுப்பைச் சேர்ந்த காவல்காரன், விமான ஓட்டப் பாதையில் தன் கும்மட்டியருகே உட்

கார்ந்து குளிர் காய்ந்துகொண்டிருந்தான். அப்போது அவனுக்குப் பக்கத்தில் திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. மூன்று பெரிய மலைப் பாம்புகள் கிட்ட வருவதைக் கும்மட்டியின் வெளிச்சத்தில் அவன் கண்டான். தன் ஈட்டியை எடுத்து, அவைகளில் இரண்டைக் கொன்றான். ஒன்று, எட்டடி நீளம்; மற்றது, பத்தடி நீளம். மூன்றாவது பாம்புதான் மிகவும் நீளம். அது மாத்திரம் தப்பித்தோடி இருளிலே மறைந்துவிட்டது.

ஆப்பிரிக்க வெடி மருந்துச் சாலை ஒன்றில் ஒரு சுதேசியைப் பதினைந்தடி நீள மலைப்பாம்பொன்று வந்து சுற்றிக்கொண்டது. அதைத் துண்டு துண்டாக அறுத்துத்தான் அவனை விடுவிக்க வேண்டியதாயிற்று. ஆனால், இதிலிருந்து அவனுக்கு மனம் பேதளித்துப் பைத்தியம் பிடித்துவிட்டது.

டர்பன் நகரம் ஒன்றில்தான் பாம்புகள் வந்து பரபரப்பூட்டுகின்றன என்பதில்லை. தென்னாப்பிரிக்கா எங்குமே எல்லா நகரங்களிலும் பாம்புகள் வந்து பரபரப்பூட்டுகின்றன. விக்டோரியா வெஸ்ட் என்ற நகரில் மிஸஸ் இ. ந்யூபெர்ரி என்ற அம்மாளையும் அவளுடைய இரண்டு குழந்தைகளையும் ஸர்ப்பங்கள் வந்து, அவர்கள் குடியிருந்த வீட்டை விட்டே விரட்டிவிட்டன. ஒரு ஸர்ப்பம் ரெஃப்ரிஜெரேட்டர் பெட்டிக்குப் பின்னாலிருந்து ஒரு நாள் வந்தது. அடுத்த நாள் படுக்கைக்கு அடியிலே வந்து ஒண்டியது ஒரு ஸர்ப்பம். மூன்றாவது நாள் உணவுப் பண்ட அறையிலிருந்து இரண்டு ஸர்ப்பங்கள் வெளிவந்தன. வேறு நாலு ஸர்ப்பங்கள் வெவ்வேறு மூலைகளில் வந்து தரிசனம் தந்தன. மூன்று அந்த வீட்டுக் கூடத்திலேயே ஒரு பொந்துக்குள் நுழைந்து மறைந்தன. அம்மாள் மனமில்லாமலே மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு, குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வேறு ஜாகை தேடிச் சென்றுவிட்டாள்.

ஜோஹான்னஸ்பர்க் நகரில், ஒருவரின் ரேடியோ பாடவில்லை. பழுது பார்த்துச் செப்பனிடுவதற்காக ரேடியோப் பெட்டியைத் திறந்தார். உடனே மூன்றடி நீளக் கருநாகம் ஒன்று அதற்குள்ளிருந்து வெளியே வந்தது. இதைக் கொன்றுவிட்டு, பெட்டியை மூடினார். பிறகும் அது பாடவில்லை. திரும்பவும் பெட்டியைப் பிரித்துப் பார்த்தபோது, மற்றொரு ஸர்ப்பம் கண்ணாடி வால்வுகளைச் சுற்றிக்கொண்டு சௌக்கியமாய்ப் படுத்திருந்தது!

கேப் டவுனில் ஒரு வீட்டுச் சமையலறையைப் போய்ப் பிடித்துக்கொண்டது ஒரு ஸர்ப்பம். சுதேசிச் சமையற்காரன் அதற்குள் போய் வேலை செய்ய மறுத்துவிட்டான். குடும்பத்தினரில் எவருக்கும் அதற்குள் நுழையத் துணிவில்லை. வீட்டுக்காரி, நகரத்துச் சுகாதார இலாகாவுக்கு டெலிபோன் செய்தாள். மிருகக் காட்சிச் சாலைக்குத் தெரிவிக்கும்படி சுகாதார அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள். மிருகக் காட்சிச் சாலையினரை அழைத்தபோது, அவர்கள் போலீஸாரைக் கூப்பிடச் சொன்னார்கள். "இது எங்கள் இலாகா சம்பந்தப்பட்டதல்ல. இருந்தாலும், பரவாயில்லை. ஒரு கான்ஸ்டபிளை அனுப்புகிறேன். பாம்பை ரிவால்வரால் சுடக் கூடிய நிலையில், அவனுக்கு

அதை நீங்கள் காட்டவேண்டும். அப்போதுதான் அவன் உதவி புரிவான்'' என்றார் போலீஸ் சூப்பரிண்டெண்டெண்ட். அப்புறம் என்ன நடந்ததோ தெரியவில்லை.

தென்னாப்பிரிக்காவிலேயே மிக அழகான ஊர் ஸ்டெல்லென்பாஷ் என்ற நகரம். அங்கே கல்லூரியில் பயிலும் மிஸ் உஹ்லென்ப்ரக் என்ற வாலிபப் பெண், போன வருஷம் ஒரு நாள் திடீரென்று வீரிட்டுக் கூச்சலிட்டாள். தெரியாத்தனமாக ஐந்தடி ஸர்ப்பம் ஒன்றை அவள் மிதித்துவிட்டாள். நல்ல வேளையாக அதன் தலைமேல் அவள் காலை வைத்து அழுத்திக் கொண்டிருந்தாள். காலைத் தூக்காமல் அப்படியே அவளை அழுத்திக்கொண்டிருக்கச் சொல்லிவிட்டு, ஸர்ப்பத்தைக் கத்தியால் அறுத்துச் சிலர் கொன்றார்கள்.

மோட்டார் சவாரி செய்யும் ஒவ்வொருவரும் தென்னாப்பிரிக்காவில் அநேகமாகப் பாம்பைக் கண்டிருப்பார்கள். சில பாம்புகள் பம்பரில் மோதி, காரில் ஏறிவிடும். ஆனால் காருக்குள் வராமல் கதவுப் பிடியிலோ பம்பர்மீதோ சுற்றிக் கொண்டபடி, கார் சவாரி செய்து நகரத்துக்கு வந்துவிடும். இப்படி நகரத்துக்குள் வந்த பாம்புகள், கீழிறங்கி ஓடி, நகரவாசம் செய்யத் தொடங்கி விடுகின்றன.

தென்னாப்பிரிக்கத் தொழிலாளர்கள் அதிகாலையில் இடுப்பு பெல்டைத் தேடும்போது, பல சமயம் வந்து ஒண்டிய ஏதாவது பாம்பையே பெல்டென்று நினைத்துக் கையில் எடுத்து விடுகிறார்கள். சில சமயம் அவர்களைப் பாம்பு கடிக்கவும் கடித்து விடுகிறது.

தென்னாப்பிரிக்க நகரங்களில் பாம்பு எங்கேதான் தோன்றும், எங்கே தோன்றாது என்பதில்லை. பூ ஜாடி, ரேடியோப் பெட்டி, அலமாரி, மேஜை டிராயர், ரொட்டி அடைத்த டின் இப்படிச் சகல வஸ்துக்களிலும் பாம்பு பிரசன்னமாகிறது. படுக்கையிலும் தோல் பையிலுங்கூடப் பாம்பு புகுந்துவிடுகிறது. தோட்டங்களிலே பாம்பு அதிகம்.

இந்தப் பாம்புபற்றிய செய்திகளைப் பத்திரிகைகள் பிரமாதப்படுத்துவதேயில்லை; நாலைந்து வரியில் முடித்து விடுகின்றன. பாம்பு அவ்வளவு சகஜமாகி விட்டது தென்னாப்பிரிக்க வாசிகளுக்கு. தென்னாப்பிரிக்க வாசிகள் வேடிக்கையாக ஒன்று சொல்லுவார்கள்: "ஒரு பாம்பைக் கண்டதும் ஒருவன் எத்தனை தடவை வீரிட்டுக் கத்துகிறானோ அதைக் கொண்டே, அவன் தென்னாப்பிரிக்காவுக்கு வந்து எவ்வளவு நாளாகிறது என்பதைச் சொல்லிவிடலாம்'' என்பார்கள்.

கீதையின் உபதேசம்

'கிருஷ்ணார்ப்பணம' என்றால் நம் உடல், மனம், புத்தி, சக்தி, சம்பத்து அனைத்தையும் சமூகத்துக்கென்று சமர்ப்பித்து விட்டு அதன் பணியாட்கள் ஆவதே; இதுவே கீதையின் பொருள். உணவில்லாதவனுக்கும், துணியில்லாதவனுக்கும், பிணியால் வாடும் நோயாளிக்கும் சேவை செய்யாமல் கடவுளைச் சந்தோஷப் படுத்த எண்ணினால் அது வஞ்சனை வாழ்க்கையாகும்.

—வினோபா பாவே

ஈரான் பிரதமர்

ஸிட்னி லென்ஸ்

மேல்நாட்டார் என்னதான் ஈரான் பிரதமர் மொஸாடெக்கைப்பற்றிக் கிண்டல் செய்தாலும் அவர் ராஜதந்திரத்தில் வல்லவர் என்பதை இந்தக் கட்டுரையின் ஆசிரியர் விருப்பு வெறுப்பின்றி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஈரான் பிரதம மந்திரி மொஸாடெக் ஒரே அறையில்தான் குடியிருக்கிறார் என்று யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். அவரை நேரில் போய்ப் பார்த்த பிற்பாடு அது உண்மைதான் என்று படுகிறது. படுக்கையில் சாய்ந்தபடி 1 கோடியே 80 லட்சம் மக்களைக் கட்டி ஆளும் ஒருவர் கொஞ்சமாவது ஆடம்பரமாக இருக்க வேண்டுமே; அதுதான் துளிக்கூட இல்லை. முரட்டுப் பாய் ஒன்றில் படுத்திருக்கிறார். அதற்கு அருகில் ஒரு சின்ன மேஜை—சமீபத்தில் சாதாரணக் கறுப்பு வர்ணம் அடித்தது—போட்டிருக்கிறது. அதன்மேல் கண்ணாடி வைத்திருக்கிறது. தம் கருத்தை வலியுறுத்தும்போதெல்லாம் அந்தக் கண்ணாடியைத் தட்டுகிறார். 12 அடி அகலமும் 13 அடி நீளமும் உள்ள சிறிய அறை அது. சுவரில் சில ஷெல்ஃபுகளும், நாலு டெலிபோனும் இன்னும் ஏதோ சிலசாமானும் தான் இருக்கின்றன. இவர் ஜமீன்தார்; பல கிராமங்கள் இவருக்குச் சொந்தம். வேறு சொத்தும் உண்டு. அமெரிக்க 'நாலு அம்ச உதவித் திட்ட' நிபுணர்கள் இருக்கும் கட்டடமே இவருடையதுதான். கீழ்த்தரக் குமாஸ்தாகூட இன்னும் வசதியான இடத்தில் வசிக்க, நாட்டை ஆளும் இப்பேர்ப்பட்ட ஓர் ஆசாமி இந்தமாதிரி ஒரு குச்சுக்குள் வசிப்பதென்றால் இவர் அந்தஸ்துக்கே ஏற்றதாக இல்லை.

மங்கிய மஞ்சள் நிற 'ஸ்போர்ட் ஜாக்கெட்' போட்டுக்கொண்டு காலை மடித்தபடி இவர் படுக்கையில் உட்கார்ந்திருக்கிறார். இதை அசப்பில் பார்க்கும்போது காலே இல்லையோ என்று தோன்றும். மேல்நாட்டுப் பத்திரிகைகள் இதைப்பற்றியும், இவர் அடிக்கடி மூர்ச்சை போட்டு விழுவதையும் கேலி செய்தாலும் இவருக்குக்

காப்பிரைட்: வீபி ஸிண்டிகேட் (ஆங்கிலம்), லஸ், சென்னை-4.

காதில் கோளாறு இருப்பதால் தான் இவரால், பாவம், சமாளிக்க முடிகிறதில்லை.

இவருடைய எளிமை, பிடிவாத குணம் இவைகளை யெல்லாம் தவருகப் புரிந்துகொண்டு, தொண்டு கிழவி தொணதொணப்புச் செய்து வீட்டைக் குட்டிச் சுவராக்குவதுபோல் இவரும் படுக்கையில் கிடந்தபடி ஈரானைப் பாழடிப்பதாகச் சிலர் பிரசாரம் செய்துவிட்டார்கள். ஆனால் டெஹ்ரானிலேயே இருந்து கவனிக்கும் அமெரிக்கர்களுக்கு இது உண்மை அல்ல என்று தெரியும். இவர் மகாதந்திரசாலி; நன்ருகப் பேசி ஆளை மயக்கி விடுவார். சில மாதங்களுக்குமுன் வெளி நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் சிலர் வந்திருந்தார்கள். இவர்களுக்கு மொஸாடெக் என்ருல் பிடிக்காது. அப்பேர்ப்பட்டவர்கள், இவரோடு பேசிவிட்டுத் திரும்பியதும் இவரைப் புகழ ஆரம்பித்து விட்டார்கள். படுத்த படுக்கையாக இருந்து மனுஷர் நயமாகப் பேசினுலும் அரசாங்கத்தைக் கட்டிப் பிடிக்க இவருக்கு உரம் உண்டு; உலகமே திடுக்கிடும்படி சில விஷயங்களை முடிவு செய்வார்; அவ்வளவு பிரமாதமான ஆசாமி.

"நீங்கள்சோஷலிஸ்டா?" என்று இவரைக் கேட்டேன். ஈரானில் படித்தவர்கள், தொழிலாளர், உழவர் எல்லாருமே—அவர்கள் வலது சாரிகளாக இருந்தாலும் சரி, இடது சாரிகளாக இருந்தாலும்சரி —தாங்கள் சோஷலிஸ்டுகள் என்றே சொல்லிக்கொள்கிருர்கள்.

நான் கேட்ட கேள்விக்கு மொஸாடெக், "என்னுடைய கொள்கைக்கு இன்னும் ஒரு பெயரும் வைக்கவில்லை, ஐரோப்பாவில் நான் படித்துக்கொண்டிருந்த காலத்தில் - அப்போது கம்யூனிஸமே வரவில்லை - நான் என் ஆசிரியரை, 'சோஷலிஸ்ட் என்ருல் யார்?' என்று கேட்டேன். அவர், 'யாருக்கு எந்த விஷயத்தில் அதிருப்தி ஏற்பட்டாலும் சரி அவர்தான் சோஷலிஸ்ட்' என்ருர். ஈரானில் இப்போது அநேகம்பேர் சோஷலிஸ்டுகளாக இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கெல்லாம் அதிருப்தி ஏற்பட்டிருப்பதுதான்" என்ருர்.

ஈரானில் கம்யூனிஸ்டுகளின் பலத்தை இவர் மறைத்துப் பேசவுமில்லை; மிகைப்படுத்தவுமில்லை. "ஜனங்களிடத்தில் அதிருப்தி எவ்வளவு இருக்கிறதோ அதைப் பொறுத்துக் கம்யூனிஸ்டுகளும் தழைக்கிருர்கள்; அவ்வளவுதான்" என்ருர்.

தீவிரவாதி என்று இவரைச் சொல்வதற்கில்லை. நிலச் சீர்திருத்த விஷயத்தில் இவருக்கும் இவரை ஆதரிக்கும் கஷனி மலேகி போன்ற இடதுசாரிப் பிரமுகர்களுக்கும் எவ்வளவோ வேற்றுமை. உழவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதனுல் ஒன்றும் பலன் ஏற்படாது என்பது இவர் கருத்து. "மிராசுதார்கள் தலைமுறை தலைமுறையாக அங்கே ஒரு ரீதியில் கவனித்து வந்திருக்கிருர்கள். அந்தமாதிரி கவனித்துக்கொள்ள உழவர்களுக்குத் தெரியுமா?" என்ருர். ஈரான் மன்னர் தம் நிலத்தைப் பிரித்துக் கொடுத்ததைக்கூட மொஸாடெக் ஆட்சேபித்தார். ஒரு கிராமத்தை அங்கே இருக்கிற குடிகளுக்கெல்லாம் பங்கிட்டுக் கொடுத்தால், அக்கம்பக்கம் நாற்பது கிராமத்தில் இருப்பவர்களெல்லாரும் சும்மா

இருந்துவிடுவார்களா? கலவரம் செய்ய ஆரம்பித்துவிட மாட்டார்களா?'' என்றார்.

ஈரான் மன்னரைப்பற்றி ஒளிவு மறைவில்லாமல் தாக்கியே பேசுகிறார். "6,000 கிராமங்களை அநியாயமாகப் பிடுங்கிக்கொண்டார் எங்கள் ஷாவின் தகப்பனார்! இவர் இஷ்டப்படி அதையெல்லாம் தானம் வழங்கிவிட இவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ தெரியவில்லை! அது சர்க்கார் செய்ய வேண்டியது'' என்பார். கடைசியில் மொஸாடெக்கின் கைதான் ஓங்கியது.

ஈரானில் இப்போது நிலைமை ஒன்றும் சரியாக இல்லை. மண் எண்ணெய்த் தகராறு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது; 10 கோடி டாலர் வெளிநாட்டிலிருந்து பிரதி வருஷமும் ராயல்டித் தொகையாகவும் சம்பளமாகவும், சாமான் விநியோக மூலமும் அப்போது கிடைத்து வந்தது. இன்றோ பண மார்க்கெட் நிலையில்லாமல் இருக்கிறது. வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எண்ணெய்க் கிணறுகளை நடத்த வேறு ஏராளமான செலவு பிடிக்கிறது. எப்போதோ முடிந்திருக்க வேண்டிய அபிவிருத்தித் திட்டத்தைப்பற்றிய தஸ்தாவேஜிகள் கவனிப்பாரின்றித் தூம்பு படிந்து கிடக்கின்றன.

இதற்கு நடுவே மொஸாடெக் பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலமாக விளங்குகிறார். எதிர்காலமும் தம்மால் உருவாகலாம் என்றுதான் அவருக்கு நம்பிக்கை. பிரிட்டிஷாரை ஈரானை விட்டே கிளப்பிவிட்டார்; மன்னருக்கிருந்த செல்வாக்கை ஒடுக்கிப் பேரளவுக்கு அதைக் கொண்டு வந்து விட்டார். பழைய ஊழல் மலிந்த நிர்வாக அமைப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக உடைத்து மாற்றி வருகிறார். வருஷத்தில் 70 அல்லது 80 லட்சம் டன் மண் எண்ணெய் விற்றால் முன்னே பிரிட்டிஷாரிடமிருந்து கிடைத்த அளவோ அதற்கு மேலோ கூடத் தொகை கிடைக்கும் என்று இவர் சொன்னார். இந்த 72-ஆம் வயதில் பிரிட்டிஷாரின் உதவி இல்லாமல் ஆட்சி நடத்த வேண்டும்; அதை நன்றாகவும் நடத்த வேண்டும் என்று இவருக்கு ஆவல்.

அமெரிக்க சர்க்கார் ஈரானுக்கு உதவாமல் அந்தரத்தில் விட்டுவிட்டது என்பதுதான் இவர் குறை. "எங்களுக்குப் பணம் தேவைதான். பெற்றுக்கொள்ளவும் தயார். ஆனால் அவர்களிடமிருந்து பணம் பெயரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனாலும் எங்கள் எதிரிகளுக்காவது அவர்கள் உதவாமல் இருந்தால் போதும். நாங்கள் ஆங்கிலோ-ஈரானிய எண்ணெய்க் கம்பெனியை எடுத்துக்கொண்டபோது பிரிட்டிஷாருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அமெரிக்க சர்க்கார் உடனே பணவுதவி தந்து ஈடு செய்துவிட்டது. ஆனால் ஈரானும் எண்ணெய்த் தகராறு காரணமாக நஷ்டமடைகிறதே என்று எங்களுக்கு உதவ அமெரிக்காவுக்கு மனம் வரவில்லை. இது அநியாயம். இத்தனை நாள் அவதிப்பட்டவர்களுக்குத்தான் கட்டாயம் உதவ வேண்டும். அமெரிக்க நாலு அம்சத் திட்டம் நல்லதுதான். ஆனால் அது ஒரு தலைப்பட்சமானது. இப்படி இப்படிக் காரியங்கள் செய்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னால்மட்டும் போதுமா?

அதற்குரிய சாதனங்களை வாங்கப் பணம் வேண்டாமா? இப்போது தொழில் நிபுணர்களின் உதவியும் அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய பணமும் தேவை. அப்போதுதான் நாலு அம்சத் திட்டத்தினால் பலன் உண்டு'' என்றார்: தம் கருத்தை வலியுறுத்த, ''20 வருஷத்துக்கு முன்னால் நான் ஒரு கிராமத்தில் வசித்து வந்தேன். அப்போது அங்கே மலேரியா மும்முரமாக இருந்தது. கொயினா வேண்டு மென்று டெஹ்ரானுக்கு எழுதி னேன். பழைய ராஜா ரீஸா ஷா என்ன செய்தார் தெரியுமா? நன்றாக ஜீரணமாகிப் பசி எடுக்க ஒரு மருந்து அனுப்பி வைத்தார்! இந்த மாதிரி உதவி எதற்குப் பிரயோஜனம்?'' என்றார்.

குறிப்பிட்ட கொள்கையோ, தமக்கென்று சொந்தக் கட்சியோ இவருக்கு இல்லை. ஆனாலும் ஈரான் மண்ணெண்ணெயை வாங்க முடியாதபடி பிரிட்டிஷார் வெளி நாட்டாரைப் பயமுறுத்திக் கொண்டிருந்தும் (இத்தனைக்கும் முன்னே விற்ற விலையில் பாதிக்கு இப்போது தருகிறார்.) எப்படியோ மொஸாடெக் நீடித்துச் சமாளித்து வருகிறார். ஆகவே, இவரை ஏதோ பிச்சு என்று எண்ணிவிடுவதற் கில்லை. ஒரு நாட்டோடு இன் னொரு நாட்டையும், ஒரு கட்சி யோடு இன்னொரு கட்சியையும் எப்படியோ மோதவிட்டுக் காரி யத்தை நடத்தி வருகிறார். சமூகச் சீர்திருத்தம் வேண்டும் என்று அடிக்கடி கிளர்ச்சி மூளும்போது சில சீர்திருத்தம் செய்தவைக்கி றார். சென்ற வருஷம் ஒரு சட்டம் இயற்றினார். அதன்படி மிராசுதார் கள் தம் நிலத்திலிருந்து கிடைக் கும் வருமானத்தில் 20 சதவிகிதம் சர்க்காருக்குத் தர வேண்டும். அதில் 10 சதவிகிதம் உழவர்களுக் கும் மீதியைக் கிராமப் பஞ்சாயத் துக்கும் சர்க்கார் அளிக்கும். கிராமப் பஞ்சாயத்தார் பாட்டை, ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் முதலிய வற்றுக்காக அந்தத் தொகை யைச் செலவிட ஏற்பாடாகி இருக் கிறது. ஆனாலும் அந்தச் சட்டம் சரிவர அமலில் இல்லை. அப்படி ஒன்றும் நடக்காவிட்டால் தீவிர மான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொல்கி றார் மொஸாடெக். ''மிராசுதார் கள் தாமாக விட்டுப் போகிறவரை 40 சதவிகிதம், ஏன் 60 சதவிகிதம் கூடச் சர்க்காருக்குச் சேர வேண் டும் என்று விதிக்கத்தான் போகி றோம். ஆனால் அவர்களிடமிருந்து பலாத்காரமாகப் பிடுங்கிக் கொள்ள மட்டும் மாட்டோம். அது சட்ட நீதிக்கும் விரோதம்; அது கம்யூனிஸ்டுகள் செய்கிற வேலை. அந்த மாதிரி புரட்சிகரமான மாறுதல் செய்யக் கூடாது; அது சரி அல்ல'' என்றார்.

இதுதான் மொஸாடெக்கின் ராஜதந்திரம். சந்தர்ப்பம் கிட்டும் போது அஸ்திரத்தைச் சரியானபடி பிரயோகிக்காமல் விடமாட்டார். பிரிட்டிஷார், ஈரான் மன்னர் இவர்கள் விஷயத்தில் இப்படி நடந்து காட்டிவிட்டார். நாணல் போல் பணிந்து கொடுக்கவும், பிறகு சமயம் பார்த்திருந்து தலை தூக்கவும் இவருக்குத் தெரியும்.

இப்படி எத்தனை நாள் நடக் குமோ சொல்ல முடியாது. மொஸா டெக்கின் ஆட்சி, பின்னால் ஈரா னியப் புரட்சிக்குக் காரணமாக அமைந்தாலும் அமையலாம். ஆனால் இவரே அதை நடத்தி வைப்பார் என்பதற்கில்லை.

பெற்றோர்கள் அவசியம் குழந்தைகளிடம் காட்டவேண்டியது—

அன்பின் அறிகுறி

ஆண்ட்ரூ டகாஸ்

குழந்தைகளுக்குப் பெற்றோர்களுடைய அன்பு வேண்டும்; அதுதான் உலகில் மற்ற எதையும் விட அவர்களுக்கு மிகவும் அவசியம். குழந்தையிடம் தாயும் தந்தையும் எவ்வளவு அன்பு காட்டினாலும் அதிகமாகிவிடாது. அநேகம் குழந்தைகளிடம் பெற்றோர்கள் போதிய அளவு அன்பு காட்டவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அன்பே குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, ஆதரவு எல்லாம். அன்பு இருந்தால்தான் குடும்பத்தில் மற்றவர்களிடம் குழந்தை ஒட்டுதலாக இருக்கும். வளர்ந்து பெரியவனான பிறகு வீட்டின்மேல் பாசம் அன்பினாலேயே எற்படுகிறது. அன்பில் எத்தனையோ விதம் உண்டு. தாய் சின்னஞ் சிறு குழந்தையை மடியில் வைத்து அணைத்துக் கொள்கிறாள்; குழர்தை வளரும்போது அதைக் சட்டிக் கொஞ்சி முத்தமிடுகிறாள்; குழந்தை பெரியவனாகித் தனக்குமேல் உயரமாய் வளர்ந்துவிடும்போது கண் குளிரப் பார்க்கிறாள். அன்புதான் இத்தனை விதமாகவும் வெளிப்படுகிறது.

அப்பா குழர்தையிடம் போதிய அன்பு காட்ட முடியுமா என்றால், அது கொஞ்சம் கஷ்டந்தான். ஆபீஸிலிருந்து மிகுந்த களைப்போடு அப்பா வீட்டுக்கு வந்து உடைகளைக் களைந்துவிட்டு ஆயாசத்துடன் உட்காருகிறார். அந்தச் சமடம்பார்த்து, ஸூஸி ஓடி வந்து, "அப்பா, இங்கே வா; இந்தக் கயிர்றை வைத்துக்கொண்டு எப்படிக் குதிப்பது? கொஞ்சம் சொல்லிக்கொடேன்" என்று கேட்கிறாள்.

அதற்குப் பதில் அருமை அப்பா என்ன சொல்லுகிறார்? மனம் சரியாக இல்லாவிட்டால், "போ! முடியாது" என்று சொல்லிவிடுவார். அப்படி இல்லையென்றால், "சரி; இன்னொரு சமயம் ஆகட்டும். இப்போது வேலை இருக்கிறது" என்ற முணுமுணுக்கிறார்.

தந்தை குழந்தைகளோடு இப்படியெல்லாம் பழகவேண்டும்.

ஆனால் ஸூஸியை அப்படி

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன், (ஆங்கிலம்: மே '53), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

ஏமாற்றி விடமுடியுமா? அப்பாவுக்கு இப்போது அப்படி ஒன்றும் வேலை இல்லையென்று அவளுக்குத் தெரியாதா? அவர் சும்மாத்தானே உட்கார்ந்திருக்கிறார்? 'யாரும் தம்மைத் தொந்தரவு செய்யக் கூடாது; தாம் நிம்மதியாயிருக்க வேண்டும்' என்றே அவர் நினைக்கிறார்; அவ்வளவுதான். ஐந்து வயதுக் குழந்தைக்குக்கூடப் பார்த்தவுடனே இது தெரிந்து விடுகிறது. ஆனால் அதற்காக ஸூஸி கூப்பிடும்போதெல்லாம் அப்பா போய்க் கூடக் குதிக்கவேண்டும் என்று அர்த்தம் அல்ல. அப்படிச்செய்தால் ஸூஸி வெகு சீக்கிரத்தில் கொடுங்கோலாட்சி புரியத் தொடங்கிவிடுவாள். தாம் சற்று நிம்மதியாக இருக்கவேண்டும் என்றாலும், ஐந்து நிமிஷம் அவள் கூறியதையும் செய்துதான் ஆக வேண்டும். வேலை இருக்கிறது என்றால், உண்மையாகவே வேலை இருப்பதைக் காண்பிக்கவேண்டும். அன்புடன் ஒரு வார்த்தை பேசி அவளை முத்தமிட்டுச் சமாதானப் படுத்தி அனுப்ப முடியாதபடி அப்படித்தான் என்ன பிரமாத வேலை?

பத்து வயதான பக்கத்து வீட்டு ஜாக் என்ற சிறுவன் சென்ற வாரம் ஒரு சிறு ஏரோப்பிளேன் செய்தான். மூன்று நாள் சேர்ந்தாற்போல் என்னிடம் மாலை வேளையில் வந்து, "இதை எப்படிக் கோப்பது? அப்புறம் என்ன செய்வது?" என்றெல்லாம் கேட்டு நச்சரித்தான். சிறுவனின் அப்பா ஓர் எஞ்சினீர். சிறுவன் என்னிடம் வந்து இப்படிக் கேட்கும் போதெல்லாம் அவர் வீட்டில்தான் இருந்தார். கடைசியாகப் பொறுக்க முடியாமல், "என் ஜாக், உன் அப்பாவுக்கு நன்றாகத் தெரிந்திருக்குமே; அவரைக் கேளேன்!" என்று சொல்லிவிட்டேன்.

"அப்பாவா? அவர்தான் எனக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ளும்படி சொல்லிப் பணத்தைக் கொடுத்துவிட்டாரே! இனிமேல் ஒன்றையுமே கவனிக்க மாட்டார்" என்றான் ஜாக்.

பத்து வருஷம் கழித்துக் கேட்டால் ஜாக்கின் அப்பா என்ன சொல்லுவார் தெரியுமா? "அவன் கேட்டபோதெல்லாம் நான் பணம் கொடுத்து வந்ததில் குறைவில்லை. என்ன கொடுத்தும், என்னவோ எங்களிருவருக்கும் ஒத்து வரவேயில்லை" என்றுதான் குறைப்பட்டுக்கொள்ளுவார்.

குழந்தைகளிடம் எப்போதும் அன்பு காட்டவேண்டும் என்றால், அது லேசான காரியமல்ல. நாம் என்ன செய்துகொண்டிருந்தாலும் அதை நிறுத்திவிட்டு அவர்களுடைய காரியத்தைக் கவனிக்க வேண்டும். அது கொஞ்சம் சுவாரசியமில்லாததாயும் இருக்கும். அவர்கள் வளர்த்திச் சொல்லும் கதைகளைக் கேட்க வேண்டும். அவர்கள் கோணலும் மாணலுமாய்க் கிறுக்கி இருப்பதையெல்லாம் பார்த்துச் சந்தோஷப்படவேண்டும். குழந்தைகள் விரும்பியபடி செய்யவேண்டும் என்றால், நம் சௌகரியத்தைக் கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டியதுதான்.

அப்பா பத்திரிகையில் விளையாட்டுப் பத்தியைப் படிப்பதில் மூழ்கியிருக்கும் சமயம் குழந்தைகள் அவரிடம் வருவார்கள். அவர் படிப்பதற்கு இடைஞ்சலில்லாமல் அவர்கள் நடந்துகொண்டால், அவர் போனால் போகிறதென்று அவர்களுக்கு முத்தம் கொடுத்துத் தூங்கச் சொல்லி அனுப்புவார்.

அவராக என்றைக்காவது பத்திரிகையை வைத்துவிட்டுக் குழந்தைகளின் படுக்கையறைக்குச் சென்று அவர்களுடன் சிறிது விளையாடித் தூங்க வைத்துவிட்டு வருவாரா? மாட்டார். அது மிகவும் சிரமமான வேலைதான். ஆனால் வருஷங்கள் செல்லச் செல்ல அப்பாவாகத் தங்களிடம் அன்பு காட்டவில்லை யென்று குழந்தைகளின் மனத்தில் நன்றாகப் பட்டுவிடுகிறது.

அன்பு எவ்வளவோ சிக்கல்களைத் தீர்க்கிறது; சிக்கல்களே ஏற்படாவண்ணமும் தடுக்கிறது. பெற்றோர்களின் பரிபூர்ண அன்புக்குரிய குழந்தை சந்தோஷமாய் வளர்வதுடன், வேறு சங்கடத்துக்கு ஆளாகாமலும் இருக்கும்.

நாம் வெளியில் பல பேரைப் பார்க்கும்போது குழந்தைகளிடம் அன்பாய்ப் பேசுகிறவர்களை, அன்பில்லாமல் பேசுகிறவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தங்களுடன் அன்பாய்ப் பேசிப் பழகுகிறவர்களைக் கண்டு குழந்தைகள் எவ்வளவு ஆர்வத்தோடு சுற்றிக் கொள்ளுகிறார்கள் என்பது அப்போது நமக்குத் தெரியும்.

அவ்வாறே நம் குழந்தைகளும் நம் அன்பை எவ்வாறு நாடுகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். நம் காரியத்தைக்கூட விட்டு விட்டு அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்து நம் அன்பை அவர்களுக்குக் காட்ட வேண்டும் என்ற உறுதி கொள்ள வேண்டும்.

விநோத 'க்யூ' வரிசை

சென்னை சர்க்கார் இனிமேல் தங்கள் பஸ்களில் மெத்தை தைத்த 'ஸீட்' அமைக்கப் போவதில்லை என்று தெரிவித்த பிறகு பிரயாணிகள் பலர் இப்படித் தலையணையும் கையுமாக நிற்க எண்ணினார்களாம். சர்க்கார் இந்த 'மர ஸீட்' யோசனையைக் கை விட்டு விட்டதால் இந்த 'க்யூ' வரிசை இனித் தேவை இல்லை.

உதட்டில் பொன்

எழுதியவர்: **மஞ்சேரி எஸ். ஈசுவரன்**

தமிழ்: **கா. ஸ்ரீ. ஸ்ரீ.**

'இந்தக் கதையில் வரும் பாத்திரம் இதற்கு முன் வாழ்ந்ததா, இனி வாழுமா?' என்பதுதான் ஒரு நல்ல கதைக்குப் பொருந்தக்கூடிய கேள்வி என்றார் ஓர் ஆங்கில ஆசிரியர். இந்தக் கதையின் பாத்திரம் இந்தக் கேள்விக்கு விடை சொல்கிறது.

நான் கதை சொல்லும் தொழிலை ஆரம்பித்து அதில் சிறிது வெற்றி பெற்றதிலிருந்து, 'உங்களுக்குக் கருத்துக்கள் எங்கிருந்து கிடைக்கின்றன?' என்று பல பேர் என்னைக் கேட்கிறார்கள்.

சில சமயம் இந்தக் கேள்வி எனக்கு வேடிக்கையாக இருக்கிறது; சில சமயம் எரிச்சலாக இருக்கிறது. என் மனநிலை கோணலாக இருந்தாலோ, 'நான் என் சரக்கைத் தேடுவதற்கு ருஷியாவுக்கும் பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போகிறேன்; எப்பொழுதாவது ஹங்கேரிக்கும் செக்கோஸ்லாவாகியாவுக்கும் போவதுண்டு. அன்பும் அருளும் கொண்டிருப்பதனால் என் சொந்த நாட்டை மட்டும் விட்டு விடுகிறேன்' என்று பதில் சொல்வேன்.

எழுத்தாளனுக்கு அவனுடைய கருத்துக்கள் எங்கிருந்து கிடைக்கின்றன?

இந்த நிமிஷத்தில் நான் குஷியாக இருக்கிறேன். 'உண்மையான எழுத்தாளனுக்கு அவனுடைய சொந்த அநுபவ நிகழ்ச்சிகளிலிருந்தே சரக்குக் கிடைக்கிறது; உண்மையல்லாத ஒருவனுக்குப் பிற எழுத்தாளர்களிடமிருந்து கிடைக்கிறது' என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். இரவல் வாங்கிய பிறகு எவ்வளவுதான் பளபளப்பான நிறம் வாய்ந்திருந்தாலும் எனக்கு அது பிடிப்பதில்லை. அப்படி இரவல் வாங்கி அதற்குச் சப்பைக் கட்டுகள் கட்டி வெளியே விகாரமாகக் காண்பித்துக்கொள்வது எவ்வளவு மோசம்!

என் அநுபவத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இப்பொழுது உங்களுக்குச் சொல்லப் போகிறேன். சம்பவத்தை உண்டாக்கிய பாத்திரம் இதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை; நிலைக்களமோ உள்ளூர்க் காட்சிகளைக் கொண்டது. என் பாத்திரந்தான் உங்களைப் போல இந்தக் கதையைக் கேட்க முடியாது. ஆகா, அவன் மட்டும் கேட்க முடிந்தால்! நாதியற்ற அந்த எளிய ஜீவன்.. ஆனால் என் கதையில் பின்னால் வரப்போகிற விஷயத்தை இப்போதே சொல்லத் தொடங்கிவிடுகிறேனே!

காப்பிரைட்: (ஆங்கிலச் சிறுகதை), அ. இ. ரேடியோ சென்னை நிலையத்தில் ஒலி பரப்பியது.



பத்து வருஷம் கழித்து அப்பொழுது தான் நான் முதலில் மலபாருக்குப் போனேன். நான் சிறுபையனாக இருக்கும்போதே பட்டணத்துக்கு வந்து நகரத்து நாகரிகத்தில் வளர்ந்துவிட்டேன். இப்பொழுது, மங்கிய நினைவுள்ள காலத்தையும் காட்சிகளையும் நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன். நான் இறங்க வேண்டிய பெரோக் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தபோது, என்னை வளர்த்த நாடு எனக்கு வெறும் பூகோளப் படமாக இல்லை; அதன் ஆத்மா என்னைப் பற்றிக்கொண்டது. என்னை அதற்கு உரியவனாக மதித்தேன். ஏனென்றால், பழைய கிழக்கிந்தியக் கம்பெனியாரைப்போல, என் முன்னோர்களும் தமிழ் நாட்டிலிருந்து மலையாளத்துக்கு வியாபாரம் செய்ய வந்து, நிலத்தை ஆதிக்கப்படுத்திக்கொள்ள ஆரம்பித்தவர்கள். என் சிறு பருவத்து நகரம் பின்னால் தொலைவிலே கருவாகக் கிடந்தது.

காத்திருந்த பஸ்வில் நான் ஏறினேன். டிரைவருக்குப் பக்கத்து ஸீட்டில் உட்கார்ந்தேன். என் ஐரோப்பிய உடைகள்—நிஜாரும் கோட்டும் கழுத்தணியும் பூட்ஸும் ஹாட்டும்—எனக்கு இந்தப் பெருமையைத் தந்தன. நான் துரையாக இருந்தேன். ஒவ்வொருவனும் என்னை உற்றுப் பார்த்தான். இது எனக்குச் சங்கடமாக இருந்தது. என் பின்னால் இருந்த ஒரு பிரயாணி, என்னுடைய ஒமேகா கைக் கடிகாரத்தைக் கண்கொட்டாமல் பார்த்தான். அவன் மூச்சுக்காற்று என் கழுத்தைச் சுற்றி, மெல்லிய பாம்பு போல் வளைத்துக் கொண்டது. அவன், பாவம், எனக்கு ஒரு கெடுதலும் நினைக்கவில்லை; ஆனால் அந்த மெல்லிய பாம்பு என் தொண்டையை அழுத்தியது. நான் அந்தப் பட்டிக்காட்டானுடைய அஞ்ஞான ஆசையை எண்ணி, அந்தப் பாம்பின் உபத்திரவத்தைத் துணிச்சலாகப் பொறுத்துக் கொண்டேன்.

சுமார் பதின்மூன்று மைல் தூரம் போனதும், பஸ் ஓர் கிராமத்தில் கால் மணிநேரம் நின்றது. மளிகைக் கடை, கறிகாய்க் கடை, கசாப்புக் கடை,

ஸலூன், தைத்த துணிகள் விற்கும் கடை - இப்படி எறக்குறைய ஒரு டஜன் கடைகள் இருந்தன. ஒரு தட்டான் பட்டரைக் கல்லில் தட்டிக்கொண்டிருந்தான். ஒரு தச்சன் மஞ்சள் பலா மரத்தாலான பெட்டியை இணைத்துக்கொண்டிருந்தான். ஒரு கருமான் வண்டிச் சக்கரத்துக்குக் கட்டுப் போட்டுக்கொண்டிருந்தான். சிறிது தொலைவில் ஒருவன் எருதுக்கு லாடம் அடித்துக்கொண்டிருந்தான். சோம்பேறிக் கூட்டம் ஒன்று பக்கத்திலே நின்றது. அழுக்கும் அம்மணமும் பாதி அம்மணமுமான குழந்தைகள் சாக்கடையில் விளையாடின. ஒரு சேவல், குப்பை மேட்டின் உச்சியிலிருந்து கூவியது. பெட்டைக் கோழிகள் தங்கள் குஞ்சுகளோடு கொக்கரித்தன. திருட்டு ஆடு ஒன்று தொண்டை கிழியக் கத்திக்கொண்டே, துணி உலரப் போட்டிருந்த வேலியை நோக்கி ஓடியது. கசாப்புக் கடையிலிருந்து எறிந்த ஓர் எலும்பைக் கடித்துக்கொண்டிருந்த நாய், பஸ் நின்ற சத்தம் கேட்டதும், பல்லில் எலும்பை இடுக்கி, வாலைக் குழைத்துக்கொண்டு ஓடியது. பிறகு அந்த எலும்புத் துண்டைப் போட்டுவிட்டு, முனிசிபல் லாந்தல் கம்பத்தின் மேல் காலைத் தூக்கியது. பஸ்ஸின் கண்டக்டரும் டிரைவரும் தேநீரைச் சுவைத்துக்கொண்டும், வாழைக்காய் வறுவலைத் துவம்சம் செய்துகொண்டும் இருந்த டீக்கடையில், ஒரு கிராமபோன், ஹிந்திச் சினிமாப்பாட்டை அழுத்தலான பெருமிதத்தோடு கொலை செய்துகொண்டிருந்தது.

பஸ்ஸைச் சுற்றி அழுக்கும் அம்மணமும் பாதி அம்மணமுமான பையன்கள் கூடினார்கள். ஆண்களும் பெண்களுமான பிச்சைக்காரர்கள், கையில் தகரக் குவளையும் கப்பரையும் ஏந்திப் பிச்சையெடுத்தார்கள். சிகரெட் புகைத்துக்கொண்டிருந்த ஒரு பிரயாணியைப் பார்த்து, அவர் எப்பொழுது அதன் துணுக்கைத் தெருவில் எறிவாரென்று ஒரு சிறுவன் ஆசையோடு எதிர்பார்த்து நின்றான். பிச்சைக்காரர்கள் உரக்க ஓலமிட்டார்கள். கோவணம் கட்டிக்கொண்டு கொழுக்குமழுக்கென்று இருந்த ஒருவன், கையில் அரிவாளோடு இளநீர் விற்றுக்கொண்டிருந்தான.

அப்பொழுது அந்தச் சம்பவம் திடீரென்று நடந்தது. ஒரே கலவரமாக இருந்தது. நான் என் வீட்டிலிருந்து பார்த்தேன். ஒரு பெண்மணிதான் இவ்வளவுக்கும் காரணம். அவள் எங்கிருந்தோ அங்கே வந்து சேர்ந்தாள். அவள் ஹரிஜனப் பெண். வயது ஐம்பதை விட நாற்பதுக்கு அருகில் இருக்கும். எள்ளும் அரிசியும்போல இருந்த பரட்டைத் தலையை அவள் வெறியோடு பிய்த்துக்கொண்டாள். தகரக் குவளையைக் குலுக்கினாள். அழுக்குப் பிடித்த கந்தலின் அடியில், ஒட்டி உலர்ந்த அவளுடைய நகில்கள், ஆட்டின் அலைதாடியைப் போலத் தளர்ந்து தொங்கின. கண்ணில் ஆவேச ஒளி வீசியது. குதித்து ஆடிக்கொண்டு, சூம்பிய துடையைத் தட்டிக்கொண்டு, கரகரப்பான குரலில் அவள் ஒரு பாட்டைப் பாடியபடியே பஸ்ஸைச் சுற்றிச் சுற்றி வந்து ஒவ்வொருவரையும் ஒரு தம்படி - ஒரே ஒரு தம்படி - கேட்டாள்.

"பைத்தியக்காரி!" என்று குழந்தைகள் உரக்கச் சிரித்துக் கொண்டே கத்தின.

"ஓ, அவள் வந்துவிட்டாளா!" என்முன் ஒரு பிச்சைக்காரன், தன் தடியைத் தூக்கிக்கொண்டு.

"பைத்தியம், வெறி பிடித்தவள், பித்துப் பிடித்தவள்!" என்று பல குரல்கள் கூவின.

"யாருக்குப் பித்து?" என்று கத்திய அந்தப் பெண், "எனக்கு அல்ல; நீதான்; உனக்குத்தான் பித்துப் பிடித்திருக்கிறது. எனக்கு ஒரு தம்படி கொடு" என்றாள்.

சுற்றுப்புறமெங்கும் சிரிப்பாக இருந்தது.

அவள் தன் நாக்கை நீட்டினாள்; காறித் துப்பினாள்; ஒவ்வொருவரையும் திட்டினாள்; திடீரென்று அழ ஆரம்பித்தாள்.

"உதட்டில் பொன்!" என்று அவள் விக்கிக்கொண்டே, "பொன்! ஆனால் அவன் என் என்னை விலக்கி விட்டான்? நான் ஒரு தவறும் செய்யவில்லையே! நான் எங்கள் புழைக்கடையோரத்தில் பூசனிக்கொடிக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தேன். அந்தக் கொடி அவர்கள் வேலியில் படர்ந்து அங்கே ஒரு காய் காய்த்தது. ஒரு நாள் மாலை அதை நான் பறிக்கப் போனேன். அப்பொழுது அவன் என்னைப் பார்த்தான்" என்றாள்.

அவள் வெட்கத்தினால் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள்; தெருப் புழுதியிலே கால் கட்டை விரலால் பாதி வட்டமொன்று வரைந்தாள்.

சுற்றுப்புறமெங்கும் பின்னும் பலமான சிரிப்புக் கேட்டது.

"அவன் உதட்டில் பொன்!" என்று அவள் அழுதுகொண்டே, "ஆனால், ஆனால், நாங்கள் அடிக்கடி சந்தித்தோம். அவன் என்னைத் தன்னோடு ஓடி வரச் சொன்னான். எனக்கு அந்தத் துணிச்சல் இல்லை. அதோ பார்! என் தகப்பனாரா அது, வருவது? அவர் எவ்வளவு கோபமாக இருக்கிறார், கையிலே கத்தியோடு? ஆ! எனக்குப் பயமாக இருக்கிறது! பயமாக இருக்கிறது! என்னைக் காப்பாற்று, கடவுளே! பிறகு ஒரு நாள் அவன் பினாங்குக்குப் போவதாகச் சொன்னான். நான் அழுதேன். அவனுக்குக் குழந்தை பிறக்கப்போவதாகச் சொன்னேன். அவன் என்னைக் கூர்ந்து பார்த்தான். அவன் வாய் திறக்கவேயில்லை. அதற்குப் பிறகு நாங்கள் சந்தித்தபோதெல்லாம் நான் அழுதேன். எங்கள் சந்திப்பில் எவ்விதமான மகிழ்ச்சியும் இல்லை. அவன் என்னைத் தன்னோடு அழைத்துப் போவதாக உறுதி கூறினான். அப்புறம் ஒரு நாள் அவன் மறைந்துவிட்டான். அவனுடைய உதட்டிலே பொன்; ஆனால்—ஆனால்—" என்று அவள் விக்கினாள்.

"அந்தப் பொன்னில் கொஞ்சம் நீ வைத்துக்கொள்வதுதானே, பேதைப் பெண்ணே?" என்று கேட்ட ஒரு பிச்சைக்காரன், "இதெல்லாம் அத்தைப் பாட்டி கதை. யாரும் இவளை நம்பாதீர்கள்" என்றான்.

"அவன் போய்விட்டான்!" என்று அவள் புலம்பியபடியே, "வெளியில் எல்லாம் தெரிந்துவிட்டது. பொழுது விடிந்தால் பொழுது போனால் அம்மா என்னைத் துடைப்பக் கட்டையால் அடிப்பாள். அவள் என்னை ஓர்

அறைக்குள் பூட்டிவைத்தாள். நான் பட்டினி கிடந்தேன். அப்பா என்னை அவிசாரி என்று திட்டி, என் வயிற்றில் உதைத்தார். அந்தக் குழந்தை செத்துப் பிறந்தது. என் புரு, என் பச்சைக்கிளி—'' என்றாள்.

அவள் தன் கையிலிருந்த தகரக்குவளையை மெதுவாக ஆட்டிக்கொண்டே ஒரு தாலாட்டுப் பாடினாள்.

''அதே பழைய கதைதான். இவள் அதைச் சொல்லிச் சொல்லி அலுப்பதில்லை'' என்றான் இளநீர் விற்பவன்.

''மூடு வாயை!'' என்று அவள் கீச்சிட்டாள்.

''பைத்தியக்காரி!'' என்று பல குரல்கள் கூவின.

உடனே அவள் என்னைக் கண்டு பிடித்து, பஸ்ஸைச் சுற்றி ஓடி வந்து, என் முன்னால் நின்றாள்.

தகரக் குவளையைப் பிடித்துக் கொண்டு, ''எனக்கு ஒரு தம்படி கொடுங்கள். நான் கெடுக்கப் பட்ட பெண்'' என்றாள்.

பைத்தியத்துக்கு நடுவே இப்படி ஒருத்தி தெளிவாகப் பேசுவதை நான் ஒருபோதும் கேட்டதில்லை. அவளுடைய மெய்மறந்த நிலையாகிய காரிருளின் நடுவே அது மின்னல் வீச்சுப்போல இருந்தது.

டிரைவர் தன் வீட்டில் வந்து உட்கார்ந்திருந்தான்.

''எனக்கு ஒரு தம்படி கொடுங்கள், ஐயா!'' என்று அவள் குழந்தைபோலக் கேட்டாள்.

அவசர அவசரமாக என் பையைத் துழாவினேன். அதில் சில்லறை நாணயம் எதுவும் இல்லை. விலகியிருந்த கரென்ஸி நோட்டுகளுக்கு நடுவே ஒரு ரூபாய் நாணயம் ஒன்று என் கையில் தட்டுப் பட்டது. நான் அதை எடுப்பதற்குள், பஸ் உறுமிக்கொண்டே பெருஞ் சத்தத்தோடு எழும்பிக் குதித்தது. நான் அந்த நாணயத்தை அவளிடம் வீசி எறிந்தேன். அதை அவளால் தகரக் குவளைக்குள் பிடித்துக்கொள்ள முடியவில்லை. அது புழுதியில் ஓடுவதை நான் பார்த்தேன். அவள் அதை எடுக்க ஓடினாள்.

பஸ் ஒரு கணம் எருதைப்போல ஆடிக்கொண்டு பின்னுக்குத் தாவியது. நான் திரும்பியபோது ஒவ்வொரு பிரயாணியும் என்னை விசித்திரமாகப் பார்ப்பதைக் கண்டேன்.

''ஒரு ரூபாயா!'' என்று ஒருவன் ஆ என்று வாயைப் பிளந்து கொண்டு கூவினான்.

அவர்கள் என்னைக் கிறுக்கன் என்று நினைத்திருக்கலாம்; அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.

பின்னால் ஒரே கூச்சல் கேட்டது. எட்டிப் பார்த்தபோது, சோம்பேறிப் பையன்கள் அவளைக் கல்லால் அடிப்பதைக் கண்டேன். அவள் தெளிவற்ற சொற்களில் கூச்சல் போட்டுக்கொண்டே இப்படியும் அப்படியுமாக ஓடினாள். புழுதி அவளைத் தொடர்ந்தது.

'அவனுடைய உதட்டில் பொன்—ஆனால்—ஆனால்...' அவள் இந்த வார்த்தைகளை, 'அவனுடைய உள்ளம் கல்' என்ற அர்த்தத்திலேதான் சொன்னாளா! அவள் அப்படி விரும்பினாலும் சொல்லியிருக்க முடியாது. அவள் தன் முதற் காதலையும் ஒரே காதலையுந்தான் நினைக்க முடியும். அது மட்டுமா? அவனுடைய உதட்டில் பொன்னையுங்கூடத்தான்!



இதய நாதம்

ந. சிதம்பரசுப்ரமணியம்

தமிழ் நாட்டுச் சிறுகதை உலகில் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளர்களில் ஸ்ரீ ந. சிதம்பரசுப்ர மணியமும் ஒருவர். விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய சிறுகதைகளே எழுதியிருந்தபோதிலும் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் வரிசையில் புகழுக்குரிய இடம் இவருக்குண்டு. உலகத்துச் சிறந்த சிறுகதைகளுடன் ஒப்பிடக்கூடிய தமிழ்க் கதைகள் எழுதிய பலர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள்; இருந்திருக்கிறார்கள். ஆயினும் அவர்களில் பலர் தமிழில் நவீனம் எழுதவில்லை. சிறுகதை எழுதுவதில் சிறந்துவிளங்கும் எழுத்தாளர்கள் இனி நவீனம் எழுதுவார்கள் என்றே நம்ப இடமிருக்கிறது.

'இதய நாதம்' என்ற இந்த நாவல் தமிழ் நாட்டில் சென்ற தலைமுறையைச் சேர்ந்த ஒரு வித்துவானுடைய ஆதர்ச வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுகிறது. சங்கீதம் என்பது நாதோபாஸனையின் மூலம் இறைவனுடைய திருவருள் பெற முயலும் யோகம் என்று கருதி வாழ்ந்த நம் முன்னோர்களுடைய வழி வழி வந்த ஒரு சங்கீத வித்துவானைக் கதாநாயகனாகக் கொண்டது இந்த நவீனம்.

ஆசிரியருடைய சொல்லாட்சி ரம்மியமானது. இடமறிந்து சேதமின்றி விழும் சொற்கள்; அதே சமயம் நிறைந்த விஸ்தாரமான காட்சியை எழுப்பக் கூடியவை. உள்ளத்து உணர்ச்சியைக் கூட்டி நெகிழவும் செய்கிற வல்லமை படைத்தவை.

தமிழ் நாட்டு ரஸிகர்கள், சங்கீதக் கலைஞர்கள் அனைவரும் விரும்பிப் படிக்கக்கூடிய ஒரு முழுமை கொண்ட நவீனம் இதய நாதம்.

காப்பிரைட்: இதய நாதம் (தமிழ் நாவல்), விலை ரூ. 4/-
பிரசுரம்: ஜோதி நிலையம், சென்னை-5.

இதய நாதம்

★

இலுப்பூர்க் கிராமத்து வீதியின் திருப்பத்திலிருந்த மாமரத்தடியில் நாலைந்து சிறுவர்கள் கோலி விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

கௌரி அம்மாள் தன் வீட்டின் சமையலறையிலிருந்து, "கிட்டு கிட்டு" என்று கூப்பிட்டாள். பதிலே இல்லை. வேகமாக வாசல் பக்கம் வந்தாள். கிட்டு, கீழே குனிந்தபடி நின்றுகொண்டிருந்தான். அவன் காதைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து, "நீ நாசமாய்ப் போக! நீயாவது உருப்படுவாயென்று பார்த்தால், அப்பன் மாதிரி தறிதலையாகத்தான் போய்விடுவாய் போல் இருக்கிறது" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள் கௌரியம்மாள். பிரசித்தி பெற்ற பஞ்சநத தீக்ஷிதரின் பெண் அவள். ஆனால் அவளுடைய துரதிருஷ்டம், வாய்த்த கணவன் எங்கேயாவது தாசி வீட்டில் போய் இரவு முழுவதும் பாடிக்கொண்டிருப்பான். அவன் வாழ்க்கையில் அமைதி, ஒழுங்கு, நியதி ஒன்றும் கிடையாது. கடைசியில் இரண்டு வயதுக் குழந்தையான கிட்டுவையும் மனைவியான கௌரியையும் விட்டுவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டான். தன் மகன ஸம்ஸ்கிருதத்திலும் சாஸ்திரங்களிலும் பயிற்சி பெற வேண்டும் என்று கௌரி விரும்பினாள்.

கிட்டுவின் மனம் பாடத்தில் செல்லவில்லை. ஆனால் பஜனைப் பாட்டுகள், தெம்மாங்குகள், தில்லானாக்கள், ஜாவளிகள் எல்லாம் ஒன்று விடாமல் அவனுக்குப் பாடம். அவன் சாரீரமோ கந்தர்வனுடையதாகவே இருந்தது.

கௌரியின் தமையனார் சங்கர கனபாடிகள், ஒரு வேதாத்தியயன பாடசாலைக்குத் தலைவர். அங்கே பிள்ளையை அனுப்பிவைத்தால், வேதாத்தியயனம் பண்ணுவதற்கும், சாஸ்திரோக்தமான கல்வி பயில்வதற்கும், ஒழுக்கம் திருந்துவதற்கும் சௌகரியமாயிருக்கும் என்று அவருக்குச் சொல்லியனுப்பியிருந்தாள் கௌரி.

கைக்காரியத்தை முடித்துக்கொண்டு கூடத்துக்கு வந்தாள். கிட்டு, "ஜரா, ஜரே, ஜராஹ" என்ற சப்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் கண்ணிலிருந்து கன்னத்தில் வழிந்தோடிய நீர் இன்னும் உலரவில்லை. முகத்தைப் பார்த்ததும், தாய்க்குக் கருணை பிறந்தது. அவனை அருகில் அழைத்துக் கட்டிக்கொண்டு, "திங்கட்கிழமையன்று மாமா வரப்போகிறார். உன்னை அழைத்துக்கொண்டு போய்ப் பாடசாலையிலே சேர்க்கப்போகிறார். நீ அங்கேயே இருந்து சமத்தாகப் படிக்க வேண்டும்" என்றாள்.

இந்தச் செய்தியைக் கேட்டதும், கிட்டுவுக்கு வெலவெலத்துவிட்டது. மாமாவின் வீட்டுக்குப் போய் அத்தியயனம் செய்வதில்லை, எங்காவது ஓடிப்போய் விடு

வது என்று தீர்மானித்து விட்டான்.

வாசல் பக்கம் நிழல் தெரிந்தது. ரேழியிலிருந்து அவன் எட்டிப் பார்க்கையில், ராமு அவனைச் சமிக்ஞை செய்து அழைத்தான்.

"ஏண்டா பித்துக்குளி, இன்னிக்கு மாத்தூர்த் தேருடா. அதை மறந்துட்டியா?" என்றான். அப்பொழுதுதான் கிட்டுவுக்கு ஞாபகம் வந்தது. அம்மா என்ன செய்கிறாள் என்று பார்த்தான். கொல்லையிலே பற்றுத் தேய்த்துக்கொண்டிருந்தாள். அரிசிப் பானைக்குப் பக்கத்திலுள்ள தகர டப்பாவைப் பார்த்தான். அதில் இரண்டு ரூபாய்கள் இருந்தன. அப்படியே கையில் எடுத்துக்கொண்டான். வாசற் படியைத் தாண்டும்பொழுது என்னவோ அவன் மனத்தில் குடைந்து கொண்டு வேதனை செய்தது.

மாத்தூர்க் குளத்தின் வடகரையில் ஒரு தண்ணீர்ப் பந்தல் இருந்தது. அங்கே சுவாமி வரும் பொழுது சுண்டலும் நீர் மோரும் விநியோகம் செய்வார்கள். கிட்டுவும் நண்பர்களும் அந்தச்சுண்டலைக் கை நிறைய வாங்கிக்கொண்டு எதிர்த்தாற்போல் இருந்த திண்ணையில் உட்கார்ந்துகொண்டு தின்றுகொண்டிருந்தார்கள். அது சத்திரத்தைச் சேர்ந்த பெரிய விடுதி. அதிலே, கல்யாணத்துக்குப் போய்க்கொண்டிருந்த பெரிய கோஷ்டி ஒன்று தங்கியிருந்தது. அதைச் சேர்ந்த கிழவர் ஒருவர் திண்ணையின் சாய்மானத்தில் சாய்ந்துகொண்டிருந்தார். ஏதோ நினைத்துக்கொண்டவராய், அந்தப் பையன்களைப் பார்த்து, "யாராவது போய்க் காலணாவுக்குப் பொடி வாங்கி வாருங்களேன்" என்றார். கூப்பிட்ட காரியம் தெரிந்தவுடன் சிறுவர்கள் அசுவாரசியத்துடன், "இங்கே பொடி கிடையாது, தாத்தா" என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தார்கள். கிட்டு காலணாவை வாங்கிக்கொண்டு, "நான் வாங்கி வருகிறேன்" என்று பொடிக் கடைக்குப் போனான்.

கிட்டு, பொடி வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தான். ஒரு சிமிட்டா உறிஞ்சியவுடன், கிழவர் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. "பலே அம்பி! நல்ல பையன் நீ. நன்றாக முன்னுக்கு வருவாய். பெரியவர்கள் சொன்னால் அதைத் தட்டாமல் கேட்கவேண்டும். என்ன வாசித்துக்கொண்டிருக்கிறாய்?" என்றார். "நான் படிக்கவில்லை, தாத்தா" என்று தாழ்மையுடன் சொன்னான் கிட்டு.

"படிக்க வயசாகவில்லையா உனக்கு?" என்றார்.

"படிக்க வைக்க ஒருவரும் எனக்கு நாதியில்லை, தாத்தா" என்றான்; கிழவரின் நன்மதிப்பை எப்படியும் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பொய் சொல்வதைப்பற்றிக் கூசவில்லை.

கிழவருக்குப் பையன்மேல் இரக்கம் பிறந்தது.

"வாடா அம்பி, எங்கள் பின்னோடே. சில்லுண்டிக் காரியங்களுக்கு ஒரு பொடியன் வேண்டித்தான் இருக்கு" என்று உள்ளே சாப்பிட அழைத்துச் சென்றார். கிட்டு அந்தக் கோஷ்டியில் ஒருவனாகிவிட்டான்.

கல்யாண கோஷ்டி பெண் வீட்டாரின் ஊரை அடைந்தது. பெண் வீடும் மாப்பிள்ளை வீடும் பெரிய இடங்களாகையால், எல்லாம் விமரிசையாக நடந்தன. கல்யா

ணத்துக்கு வாசிக்க அமர்த்தி யிருந்த நாயனக்காரர்கள் உள்ளூரைச் சேர்ந்தவர்களானாலும், ஸ்வரஸ்வரமாகவும், சுத்தமாகவும் வாசித்தார்கள்.

மேளகாரன் வாசிக்கும்போது கிட்டு அங்கே வந்து உட்காருவான். நாதஸ்வரக்காரனுக்குக் கிட்டுவிடம் ஒருவிதப் பிரியம் உண்டாயிற்று. "இங்கே வா, தம்பி. நீ நல்லாப் பாடுவாய் போல் இருக்கிறதே!" என்றான்.

கிட்டுவுக்குக் குஷி பிறந்துவிட்டது. அவன் பாட ஆரம்பித்தான்.

வேறு ஒருவரிடமும் இல்லாத திவ்வியமான சாரீரம். வெள்ளி மணி அடிப்பது போல், கண கண வென்று உருளும் இனிமையான குரல். சிறு பையனானபடியால், சாரீரம் இன்னும் 'உடைய'வில்லை. அப்படியே மைனாக்குருவி பாடுவது போல், 'ஜிலு ஜிலு' என்று சங்கதிகள் விழுந்துகொண்டிருந்தன; வயதுக்கு மீறிய ஞானம்.

மேளகாரன் பிரமித்து விட்டான். அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

கிழவர் ஏதோ பாட்டுச் சத்தம் கேட்டுப் பக்கத்துத் திண்ணையை எட்டிப் பார்த்தார். கிட்டு பாடிக் கொண்டிருந்தான். அந்தப் பாட்டைக் கேட்கக் கேட்க அவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. கிட்டு பாடி முடித்தவுடன், அவனருகே வந்து அன்புடன் தடவிக் கொடுத்தார்.

"என்ன சாரீரம்! என்ன ஞானம் சாமி, இந்த வயதிலே!" என்றான் மேளகாரன். கிட்டுவைக் கிழவனாரின் பேரன் என்று அவன் நினைத்துவிட்டான்.

இந்தப் பயலிடம் இவ்வளவு வித்தை இருக்குமென்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. "எனக்கு ஒரு யோசனை. திருவையாறு சபேசையர் எனக்கு மிகவும் வேண்டியவர்; பந்துவுங் கூட. அவரிடம் சொல்லி, இவனை அங்கே சேர்த்துவிடலாம் என்று யோசிக்கிறேன்!" என்றார் மேளகாரனிடம்.

கிட்டுவுக்கோ சந்தோஷம் தாங்க முடியவில்லை.

கிட்டுவும் கிழவனாரும் திருவையாற்றில் சபேசையர் வீட்டை அடைந்தபொழுது, பிற்பகல் சுமார் மூன்று மணி இருக்கும்.

சபேசையர், ஒரு பலகையில் சாய்ந்துகொண் டிருந்தார். கீழே புலித்தோல் போட்டிருந்தது. கையில் வால்மீகி ராமாயணம். ஆஜானுபாகுவான சரீரம். முகத்தில் தேஜஸ் ஜொலித்துக்கொண்டிருந்தது. வித்தை, ஒழுக்கம், இவைகளின் நிறைவினால், அவர் உருவத்திலே ஒரு காம்பீரியம் இருந்தது. ராமாயணத்தைக் கீழே இருந்த சிக்குப் பலகையில் வைத்துவிட்டு, "வாருங்கள், கணேச சாஸ்திரிகளே" என்றார்.

சபேசையருக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் கிட்டு. அவனை அவர் ஆசீர்வதித்தார்.

அந்தக் கூடத்தைக் கவனித்தான் கிட்டு. ஒரு மூலையில் அழகான சுரைக்காய்த் தம்பூரா தொங்கிக்கொண் டிருந்தது. இன்னொரு பக்கத்தில் வீணை ஒன்று இருந்தது. எதிரில் ராமர் பட்டாபிஷேகப் படம். அதற்குப் பக்கத்தில் தியாகப் பிரம்மத்தின் படம். படங்களுக்குக் கீழே பூஜை அறையில், பூஜைப்பெட்டியும், பூஜைப் பாத்திரங்களும் இருந்தன.

"குழந்தை யார்?" என்றார் சபேசையர்.

"இந்தப் பையன் சம்பந்தமாகத் தான் இப்பொழுது இங்கே வந்திருக்கிறது. பையனுக்குத் திவ்விய மான சாரீரம். நல்ல ஞானம் இருக்கிறது. நீங்கள் கிருபை செய்து இவனுக்கு வித்தையை அளிக்க வேண்டும்" என்றார் கணேச சாஸ்திரிகள்.

"உங்கப்பா பெயர் என்ன, அம்பி?" என்றார் சபேசையர்.

"எங்கப்பா பெயர் வைத்தி" என்றான் கிட்டு.

"எண்டா, இலுப்பூர் வைத்தி பிள்ளையா நீ?" என்றார் சபேசையர்.

அவன் திகிலுடன், "ஆமாம்" என்றான்.

அவர், "இந்தப் பையன் தகப்பனை ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்திருக்கிறேன். பாடச் சொல்லியும் கேட்டிருக்கிறேன். பாவம், அல்பாயுசாகப் போய்விட்டான். என்ன சாரீரம்! வித்துவத்திலும் குறைவில்லை. ஈசுவரனுடைய சங்கல்பம் விசித்திரமாகத்தான் இருக்கிறது. அவன் பிள்ளையை என்னிடம் கொண்டுவந்திருக்கிறது பாருங்களேன்! அம்மா இருக்கிறாளா?" என்றார். "ஊஹூம்" என்று சொல்லிவிட்டான் கிட்டு.

விஜயதசமியன்று கிட்டுவுக்கு வித்தியாப்பியாசம் தொடங்கியது.

சபேசையர் தியாகராஜ ஸ்வாமிகளின் நேர்ச் சிஷ்ய பரம்பரையில் வந்தவர். ஆகவே, தியாகப் பிரம்மத்தின் நாதோபாஸனையும் ராம பக்தியும் அவரிடம் பரிபூரணமாகப் பரிணமித்திருந்தன.

சபேசையருக்கு அதிகமான குடும்ப பாரம் இல்லை. ஒரே ஒரு பெண் குழந்தை இருந்தது. அந்தப் பெண்ணை மிகுந்த பிரியத்துடன் தான் வளர்த்து வந்தார். ஆனால் அந்தப் பெண், புருஷன் வீட்டுக்குப் போன நாலு வருஷத்துக்குள், ஓர் ஆண் குழந்தையை விட்டுவிட்டு, இறந்துவிட்டாள். அந்தப் பையன் பெயர் மகாதேவன். கிட்டுவுக்கும் அவனுக்கும் சம வயசு.

சபேசையர் பூஜைப் பொருள்களில் ஒரு வீணையும் இருந்தது. அது அவருடைய குருவின் வீணை.

ஒரு சமயம், மகாதேவன் வேஷ்டியை உலர்த்துவதற்காகக் கொடியில் போட்டுக்கொண்டிருந்தான். குச்சியினால் கொடியில் போடும்பொழுது தவறி அது விழுந்துவிட்டது. அந்தக் கொடிக்குக் கீழே வீணை இருந்தது. வீணைக்கு வெகு சமீபத்தில் வேஷ்டி விழுந்துவிட்டது. குடத்தின்மேல் பட்டு அதை ஓர் ஆட்டம் ஆட்டிற்று. அவ்வளவுதான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த சபேசையருக்கு அளவற்ற கோபம் வந்துவிட்டது. தம் பூஜைக்குரிய வீணை அல்லவா? வேகமாக வந்து மகாதேவன் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை அறைந்தார். அந்தக் காட்சி கிட்டுவின் மனத்தில் நன்றாகப் பதிந்திருந்தது. ஆனாலும், ஒரு சமயமாவது தான் அதை மீட்டிப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அவன் உள்ளத்தில் குமுறிக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் யாரும் இராத சமயம் ஓர் ஓரமாக உட்கார்ந்துகொண்டு அந்த வீணையை எடுத்துச் சுருதியைச் சேர்த்துக்கொண்டான் கிட்டு. அந்தச் சுருதியின் நாதத்திலே ஈடுபட்டான். சட்டென்று யாரோ வாசல் பக்கம் வருவதுபோல் தெரிந்தது. வீணையைத் திருப்பி வைக்கப் போனான். என்ன போதாத காலம்! அவனுடைய

பதைபதைப்பிலும் நடுக்கத்திலும், வீணையின் பிருடை ஒன்று சுவரில் மோதி, உடைந்து கீழே விழுந்தது. கிட்டுவின் சுவாசமே ஒரு கணம் நின்றுவிட்டது. முகமெல்லாம் வேர்த்துக் கொட்டியது. உடல் எல்லாம் நடுக்கம் கொடுத்தது. வாசல் பக்கம் ஒருவரும் வரவில்லை. பிரமைதான்!

இனி அவன் எப்படிச் சபேசையர் முகத்தில் விழிப்பது? தன் மனம் பலவிதமாகக் குழம்பினாலும் வீணையை இருந்த இடத்தில் வைத்துவிட்டு, சபேசையர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

சபேசையர் வந்தார். அவர் முகம் வாடியிருந்தது. முகமெல்லாம் வேர்த்திருந்தது. வந்து ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்தார்.

காரணமின்றிச் சுற்றித் திரிந்த அவர் கண்களை மூலையில் கிடந்த வஸ்து பிடித்து இழுத்தது. வீணையிடம் ஓடினார். ஆம், அது மூளியாகி யிருந்தது. அவர் முகத்தில் பொறி பறந்தது. "மகாதேவா" என்று ஒரு கூச்சல் போட்டார். என்ன ஆவேசத்தை அது ஒலித்தது! "மகாதேவன் எங்கேடா?" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கேட்டார். கிட்டுவுக்குப் பேச நா எழவில்லை. அவன் உடல் உதறல் எடுத்தது. உதடுகள் துடித்தன. அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை. கண்ணிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகிக்கொண்டிருந்தது. "நான்தான்", "நான்தான்" என்றான். அதற்குமேல் பேச்சு வரவில்லை. ஒரு நிமிஷம் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாகத்தான் அவருக்குத் தெரிந்தது. "தெரியாமல் செய்துவிட்டேன்" என்று கதறினான், விம்மலுக்கிடையே. அவர் முகத்திலே கொதித்த கோபம் மறு விநாடியில் கருணையைக் காட்டியது. சாந்தமாக, "இங்கே வா" என்றார்.

கிட்டுவின் தோள்மேல் கையை வைத்துக்கொண்டு, "உனக்கு ஏன் இந்தப் புத்தி வந்தது?" என்றார். கிட்டுவுக்கு ஆயிரம் ஈட்டிகளை வைத்துக் குத்தினதுபோல் இருந்தது, இந்தக் கேள்வி. அவன் கண்களிலிருந்து வழியும் நீர் அவன் வேதனையை நன்கு வெளிக்காட்டியது. அவன் உதடுகள் அசைந்தன. ஆனால் வார்த்தைகள் ஏதும் வெளி வரவில்லை.

சபேசையர் சொன்னார்: "போனால் போகிறது. அது முன்பே விரிந்திருந்தது. ஏதோ நடந்துவிட்டது. ஆனால் நீ உண்மையை ஒப்புக்கொண்டாயே, அதுவே போதும். வீணை உயர்ந்தது தான். ஆனால் உண்மை அதைவிட உயர்ந்தது" என்றார்.

அவர் சொன்ன சொற்கள், அவன் நெஞ்சிலே வெகு ஆழமாகப் பதிந்தன.

சபேசையர் வருஷந்தோறும் ஸ்ரீராமநவமி உற்சவத்தை விமரிசையாக நடத்துவது வழக்கம். அநேக வித்துவான்கள் பல ஊர்களிலிருந்து பங்கெடுத்துக் கொள்ள வருவார்கள். சபேசையர் அன்று பாடுவார்.

ஆனால் அந்த வருஷம் ஸ்ரீராமநவமிக்கு ஒரு மாதத்துக்கு முன்பே அவருக்குக் கடுமையான ஜுரம் வந்து அவர் உடல் நலம் மிகவும் குன்றியிருந்தது. ஆகவே, அன்று, "கிட்டுதான் பாடட்டுமே இந்த வருஷம், எனக்குப் பதிலாக" என்றார் சபேசையர்.

கிட்டு அவருடைய ஆசீர்வாதம் பெற்று மேடையில் உட்கார்ந்து பாட ஆரம்பித்தான். அவனுடைய இளங்குரல் கணீரென்று பெருகி வந்தது. அவனுக்குள்ள ஞானமும், லயத்திலும் சுருதியிலுமுள்ள சுத்தமும்போகப் போக நன்றாகப் பிரகாசித்தன.

அன்று வந்த பிரமுகர்களும், வித்வத் கோஷ்டியினரும் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

பாட்டு முடிந்தது. அவன், கீழே இறங்கி வந்து தன் குருவை அடிபணிந்து மனப்பூர்வமாக வணங்கினான். "உனக்கு ராமன் அநுக்கிரகம் என்றும் கிடைக்கட்டும்" என்று சொல்லி விட்டுச் சிறிது நேரம் இருந்தார்.

கிட்டு அவரையே பார்த்துக் கொண்டு நின்றான். "சங்கீதம் என்பது ஒரு மகத்தான யோகம். நாதோபாஸனையும் ராமபக்தியும் ஒன்று என்று ஸ்ரீ ஸத்குரு தியாகப் பிரம்மம் நன்கு காட்டியிருக்கிறார். உன் இருதயத்தில் பக்தியும் நாதத்தில் ஈடுபாடும் இருக்கும் வரையில் உனக்குச் சகல செளபாக்கியங்களும் உண்டாகும்" என்று ஆசீர்வதித்தார்.

ஒருநாள் சபேசையர் கொல்லைப் பக்கம் போய்விட்டு வரும்பொழுது காலில் ஏதோ ஒன்று நன்றாகக் குத்திவிட்டது. என்னவென்று பார்க்கும்பொழுது அது ஒரு கண்ணாடித் துண்டு. ஆனால் அது பட்ட இடத்தில் இரண்டொரு நாளில் வீக்கம் கண்டது.

வைத்தியன் வந்து மருந்து தடவினான். பச்சிலை இடித்து வைத்துக் கட்டினான்.

ஆனால் அது குணமாகவில்லை. வரவர ஜுர வேகம் கடுமையாகி, அவர் நிலைமை ஆபத்தாகிவிட்டது.

ஒருநாள் பக்கத்திலே இருந்த கிட்டுவை அவர் கூப்பிட்டார். அவன் சமீபத்தில் வந்தான். அவனைத் தடவிக் கொடுத்தார். கண்களில் அன்பு வழிந்தது. "நாதத்தைப் பக்தியோடு உபாசனை செய். பக்குவம் ஏற்படும். மங்களம் உண்டாகும்" என்றார். தம் குருவிடமிருந்து தமக்குக் கிடைத்த வீணையைக் காட்டி, "அது உன்னுடையதுதான்; நீதான் இந்தப் பரம்பரைக்கு வாரிசு. அதற்குப் புகழ் உண்டாகும்படி நட. சுவாமி படத்துக்கு எதிரே தீபம் ஏற்றி வைத்துவிட்டுப் பஞ்சரத்தின கீர்த்தனத்தில் இரண்டு சொல்லிவிட்டு, ராமாயணம் கொஞ்சம் வாசி" என்றார்.

அவன் அப்படியே செய்தான். ராமாயணம் காதில் விழுந்துகொண்டிருக்கும்பொழுதே, அவருடைய சுவாசம் நெஞ்சுக்கு வந்துவிட்டது. அந்த நிலையிலும் "ராம ராம" என்று இரண்டு தரம் கதறினார். அவர் பிரக்ஞை தவறியது. கண்கள் மூடின. ராமநாமம் காதில் விழுந்துகொண்டிருக்கும் பொழுதே ராமனுடைய பாதாரவிந்தங்களை நோக்கிச் சென்று விட்டார்.

தனக்குத் தந்தையும் அன்னையுமாக இருந்த குரு போன பிறகு, சொந்தத் தாயைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படவே குருவின் மனைவி தர்மாம்பாளிடம் விடைபெற்று, கிட்டு பிறந்த ஊருக்குத் திரும்பினான்.

பத்து வருஷத்தில் அவனிடம் தான் மாறுதல் ஏற்பட்டிருந்தது. மற்றப்படி கிராமக் காட்சிகள்

மாறவேயில்லை. ஆனால் தாய் இறந்துவிட்டாள் என்று கேட்டதும் தன்னை அநாதையாக விட்டுவிட்ட பகவானிடம் அவனுக்குக் கோபந்தான் வந்தது.

கிட்டு நேரே தஞ்சாவூர் வந்து சேர்ந்தான். தஞ்சாவூரில் சபேசையரின் அத்தியந்த நண்பரான பொன்னையா பிள்ளை என்றதனவந்தர் இருந்தார். அவரிடம் போய்க் கலந்துகொண்டு அவர் யோசனையின்படி தன் வாழ்க்கையை நடத்துவது என்று தீர்மானித்தான். பொன்னையா பிள்ளை ரசிகர்; சபேசையரிடம் அளவிறந்த பக்தியும் பிரியமும் கொண்டவர். அவர் மனத்தில் கிட்டுவைப்பற்றி உயர்ந்த அபிப்பிராயம் பதிந்திருந்தது. கர்நாடக சங்கீதத்துக்கே ஒரு தூண் போல இருந்துகொண்டிருந்த சபேசையர் ஞாபகார்த்தமாகவும், கிட்டுவின் யோக்கியதையை உத்தேசித்தும் அவன் முன்னுக்கு வர உதவினார்.

தஞ்சாவூரில் வசிக்க ஆரம்பித்த ஒரு வாரம் கழித்து திருவையாற்றுக்குப் போனான் கிட்டு. தருமாம்பாள் கிட்டுவைப் பார்த்தவுடன் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தாள். கிட்டுவிடம் அவளுக்கு அலாதியான வாஞ்சை இருந்தது. தங்கள் குடும்பத்துடன் அவன் தொடர்பு அறுந்துபோகாதபடி செய்ய அவள் ஒரு திட்டமும் போட்டிருந்தாள். அதைச் சொல்லாமலேயே, "சரி, உனக்கு வித்தை முடிந்தது. பெரிய மனிதனாகப் போகிறாய். தனியாக இருக்கப் போகிறாய்" என்று சொல்லும்பொழுது அவள் கண்களிலிருந்து நீர் பெருக ஆரம்பித்தது.

"அம்மா, நான் தனியாகப் போகவில்லை. நான் தஞ்சாவூர் வந்ததற்குக் காரணமே, உங்கள் அருகில் இருப்பதற்காகத்தான். உங்களைத் தவிர வேறு யார் கதி எனக்கு?" என்றான்.

சீக்கிரத்திலேயே தருமாம்பாளின் விருப்பப்படி அவள் தங்கை பெண் நீலாம்பாளுக்கும் கிட்டுவுக்கும் கல்யாணம் ஆயிற்று.

தஞ்சாவூரில் கந்தசுவாமி பாகவதர் என்று ஒருவர் இருந்தார். அவர் சுப்பிரமணியஸ்வாமி பக்தர். வருஷந்தோறும் கந்த சஷ்டி உற்சவம் வெகு விமரிசையாக நடத்துவார். பழுத்த ஞானஸ்தர். அவரிடம் எல்லா வித்துவான்களுக்கும் அளவிறந்த மரியாதை உண்டு.

கிட்டு தஞ்சாவூரில் பொன்னையா பிள்ளையின் ஆதரவில் குடியேறிய வருஷத்திலும் பாகவதர் கந்தசஷ்டி விழாவை வழக்கம் போல் நடத்தினார்.

அந்த வருஷம் இரண்டாவது நாள் உற்சவத்துக்கு ஒரு சிறந்த வித்துவானின் கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. ஆனால், குடும்பத்தில் ஏற்பட்ட ஏதோ அசௌகரியத்தினால் தமக்கு வர இயலாது என்று ஆள் மூலம் அவர் இரவு ஏழு மணிக்குச் சொல்லி அனுப்பிவிட்டார். பொன்னையா பிள்ளைக்கு இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட விருப்பமில்லை. கந்தசாமி பாகவதரிடம் நெருங்கி, "நம் கிருஷ்ணையாவைப் பாடச் சொன்னால் என்ன?" என்றார்.

கந்தசுவாமி பாகவதர், "பக்கவாத்தியக்காரர்கள் முரட்டு ஜாம்பவான்களாயிற்றே. அவர்கள் ஆமோதிப்பார்களோ

என்னவோ?" என்றார். எதற்கும் ஒரு வார்த்தை கேட்டுவிடலாம் என்று பிடில் வாத்தியக்காரரையும் மிருதங்கக்காரரையும் கூப்பிட்டுக் கேட்டார் பாகவதர். "யாரா யிருந்தால் என்ன? தகுதி இருந் தால் அரங்கத்துக்கு வரவேண்டி யதுதானே! நன்றாகப்போடுங்கள். எனக்கு ஆட்சேபணையில்லை" என்று சொல்லிவிட்டார் பிடில்காரர். மிருதங்கக்காரரும் அந்தக் காலத் தில் பிரதான ஸ்தானம் வகித்த வர்தான். இருந்தாலும் அவருக்கு அகங்காரம் உண்டு. அவர் முகத் தைச் சுளித்துக்கொண்டார். "அவனுக்கு மேடையிலே உட்கா ரத்தெரியுமா?" என்றார்.

பாகவதருக்கு அவரைச் சரியான படி மட்டந்தட்ட வேண்டுமென்று தோன்றியது. "அவனுக்கு உட் காரவும் தெரியும். பக்க வாத்தியக் காரர்களைத் தக்கபடி நடத்தவும் தெரியும்"என்றுசொல்லிவைத்தார்.

"அடே! அவ்வளவு பெரியவனு அவன்! சரி; பார்ப்போம். பாடச் சொல்லுங்கள்" என்றார் மிருதங் கக்காரர். கச்சேரி ஏற்பாடாயிற்று.

கிட்டு வந்து மேடை நடுவில் உட்கார்ந்தான். பகவானையும் குருவையும் தியானித்தான். மிரு தங்க வித்துவானின் அலட்சியம் எல்லோர் கவனத்தையும் இழுக் கும்படி வெட்ட வெளிச்சமாக இருந்தது. கிட்டு, "இருக்கட்டும்; பகவான் என்னைக் கைவிட மாட் டார்" என்று நினைத்துக் கொண்டே, 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பித்தான்.

கூட்டத்திலிருந்த கசமுசப்புப் சப்தம் ஓய்ந்தது. கணீரென்று வந்தது கிட்டுவின் குரல். குளுமை யும் மௌனமும் நிறைந்த அந்த இரவிலே, அமிர்த தாரையைப் போல் பெருகிவந்தது, கிட்டுவின் பாட்டு. இது மனிதன் பாடும் பாட்டா, கந்தர்வகானமா என்று வியப்புறும்படி, கீர்த்தனம், ராகம், நிரவல் ஸ்வரம் எல்லா வற்றிலும் தன் கைவரிசையைக் காட்டிக்கொண்டே வந்தான்.

கிட்டு ஒரு கீர்த்தனத்துக்கு ஸ்வரம் பாடிக்கொண் டிருந்தான். அவன் எடுத்துக்கொண்டிருந்த காலப்ரமாணம் எக்கச்சக்கமாக வும் இடைஞ்சலாயும் உள்ளது. மிருதங்க வித்துவான் இதுதான் சமயம் என்று யோசித்தார். கிட் டுவை நோக்கி, "தம்பி, அதைத் திரிகாலப் படுத்திவிடேன்!" என் றார். அதாவது, எடுத்துக்கொண்ட காலத்துக்கு மேல்காலமும் கீழ்க் காலமும் ஸ்வரத்தில் பாடச்சொன் னார். கிட்டு தயங்கவில்லை. கொஞ்ச மும் கவலையைக் காட்டிக்கொள் ளாமல், "அதற்கென்ன, பேஷா கப் பாடுகிறேன்" என்று சொல்லி விட்டு, மேலும் கீழும் லயம் ஒரு துளிக்கூடப் பிசகாமல், ராகச் சாயை பரிபூரணமாக இருக்கும் படியான ஸ்வரக் கோவைகளினால் பாடிக் காண்பித்தான். அவன் பாடி முடித்ததும் பிடில்காரர் அவன் கைகளை அப்படியே கட்டிக் கொண்டார். அவருக்குச் சந்தோ ஷம் தாங்க முடியவில்லை. ஜனங் களின் உற்சாகமும் அப்படியே பொங்கிக்கொண்டு வந்தது. ஆனால், மிருதங்க வித்துவான் முகம் மாத் திரம் 'கடு கடு' என்றிருந்தது.

கிட்டுவுக்கு ஒரு யோசனை தோன்றியது. பல்லவி வரும் பொழுது, காலத்தை மாற்றி அநுலோமம், பிரதிலோமம் செய்து நடையின் போக்கில் கால ப்ரமாணத்தைக் காட்டாதபடி, ஸ்வரங்களைப் பாடி மிருதங்கக்

காரரைப் பார்த்து, "நடக்கட்டும்" என்றான். கிட்டு கையினால் தாளம் போடாமல் மனசுக்குள்ளேயே போட்டுக்கொண் டிருந்தான். திடீரென்று சொல்லவும் வித்துவான் ஒரு முறைப்பு முறைத்துவிட்டு, ஒரு நிமிஷம் சந்தேகத்துடன் தயங்கினார்; பிறகு சமாளித்துக் கொண்டு வாசிக்க ஆரம்பித்தார். ஒரு திருப்புத் திருப்பித் தாளத்தைப் புரட்டும்பொழுது தாளம் தவறிவிட்டது. அதைக் கவனித்து, "பலே" என்றான் கிட்டு. வித்துவானின் ஸப்த நாடியும் விழுந்துவிட்டன.

கிட்டுவை எல்லாரும் பாராட்டினார்கள். அவன் புகழ் வெகு சீக்கிரத்தில் நாடெங்கும் பரவ ஆரம்பித்தது.

ஒரு சமயம், ஒரு பெரிய மிராசுதார் வீட்டுக் கல்யாணத்தில் கிட்டு பாடுவதாக ஏற்பாடாகி இருந்தது. பக்கத்துக் கிராமங்களிலிருந்தும், சுற்று வட்டாரங்களிலிருந்தும், ஜனங்கள் வந்து கிட்டுவின் கச்சேரியைக் கேட்கக் குவிந்தார்கள். மணி ஐந்தாயிற்று; ஆறும் ஆயிற்று. கிட்டுவைக் காணவில்லை. மிராசுதாருக்கு அவன்மேல் அளவற்ற ஆத்திரம் உண்டாயிற்று. "என்ன திமிரையா இந்தப் பேர்வழிக்கு! இவ்வளவு பேர் காத்துக்கொண் டிருக்கிறோம். அவன்பாட்டுக்கு எங்கோ போய்விட்டானே! யோக்கியதை நன்றாயிருக்கிறது!" என்று திட்டிக்கொண் டிருந்தார்.

கிட்டு, இந்தச் சமாசாரங்கள் ஒன்றும் தெரியாமல் சந்தியா வந்தனம் செய்துகொண் டிருந்தான். அதற்குள் அவனை அழைத்துப் போக ஓர் ஆள் வந்தான். பின்னாலேயே மிராசுதாரும் வந்தார். கிட்டு ஜபம் முடிந்ததும் வாசல் பக்கம் வந்ததுதான் தாமதம்; அவர், "என் ஐயா, நீர்தான் சங்கீதக் கச்சேரிக்கு வருகிறவரா! சாவகாசமாகச் சந்தியா வந்தனம் செய்துகொண் டிருக்கிறீரே! நீர் கேட்ட ரூபாயை நான் கொடுத்திருக்கிறேனா இல்லையா? நான் சொல்லும் நேரத்தில் நீர் பாட வேண்டாமா? வேறு யாராவதாக இருந்தால் அவன் தோலை உரித்திருப்பேன்!" என்று மளமளவென்று பேசிவிட்டார்.

கிட்டுவின் தலை சுற்றியது. நாக்கில் வார்த்தை புரளவில்லை. "ஐயா, உமக்குத் தராதரம் தெரியாது. நீர் ரூபாய் கொடுத்து என்னையே வாங்கிவிடவில்லை. நான் பணத்தைத் திருப்பித் தந்துவிடுகிறேன். உம்மைப் போன்றவர்கள் முன்னிலையில் பாடுவதே மகா பாவம்!" என்று சொல்லிவிட்டு விருட்டென்று ஜாகையை நோக்கி நடையைக் கட்டிவிட்டான்.

மிராசுதார் இதை எதிர்பார்க்கவில்லை. அவருக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. இந்தச் சமயத்தில் கந்தசாமி பாகவதர் வந்தார். விஷயத்தை அறிந்துகொண்டு, கிட்டுவின் ஜாகைக்குப் போனார்.

"அப்பா, நீ பால்யம். உணர்ச்சி வேகத்தில் பேசுகிறாய். பணந்தான் அவனுடையது. நீ பாடும் பாட்டு அவனுக்கு அல்ல; எங்கேயாவது ஒரு மூலையில், அழுக்கு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு ஒரு பரம ரஸிகன் உட்கார்ந்திருப்பான். நீ பாடும் பாட்டைக் கேட்டுவிட்டு, ஆத்மானந்தத்தினால் உன்னை மனப்பூர்வமாக ஆசீர்வதிப்பான். அது

தான் நீ கற்ற வித்தையின் பலன். கோபத்தினல் அதைக் கெடுத்துக் கொள்ளாதே. ஒருவருடைய கோபத்துக்காக ஆயிரக்கணக்கான ஜனங்களை ஏமாற்றி வருத்தக் கூடாது'' என்று சொல்லிச் சமாதானப்படுத்தினர்.

அன்று கச்சேரி அமோகமாக நடந்தது. ஜனங்களின் உற்சாகத்தையும் கிட்டுவின் பாட்டையும் கண்டு மிராசுதாருக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

நீலாவுடன் வாழ்க்கைச் சகடத்தை ஓட்ட ஆரம்பித்த கிட்டு, வாழ்க்கையை இன்பக் கனவாகவோ, ஒரு காவிய உலகமாகவோ காணவில்லை.

கிட்டு, வறுமையில் பிறந்து வளர்ந்தவன். 'தான்', 'தனது' என்று ஒன்றையும் சொல்லிக் கொள்ள வசதியில்லாமலே வாழ்க்கையைக் கடத்தியவன். ஆனல் நீலாவோ விருப்பு வெறுப்புகளைக் கொண்ட சாதாரணப் பெண்.

ஒரு நாள் மாலை கிருஷ்ணன் கோவிலில் கிட்டுவின் கச்சேரி. அது 'தேங்காய் மூடிக் கச்சேரி.'

கச்சேரிக்குப் போட்டுக்கொள்வதற்காக ஜதை ஜதையாக ஜரிகை வேஷ்டிகளும் அங்கவஸ்திரங்களும் இல்லை. இரண்டே இரண்டு ஜோடிகள்தான் கிட்டுவிடம் உண்டு. அதிலே ஒன்று ஒரு மகாராஜா கிட்டுவுக்குச் சம்மானம் செய்த பட்டு வஸ்திரம். நீலா அந்தப் பட்டு வஸ்திரத்தை எடுத்து வெளியே வைத்தாள்.

சிறிது நேரம் சென்றது. வாசற் பக்கம் ஏதோ வாத்திய சப்தம் கேட்டது. வடநாட்டுச் சாயபு ஒருவன் சாரங்கி வாத்தியத்தை வாசித்துக்கொண்டிருந்தான். கிட்டு, அப்படியே அந்த நாதத்தில் லயித்துவிட்டான்.

கிட்டுவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. அந்த வடநாட்டுப் 'பிச்சைக்காரச் சாயபு'வின் அழுக்குப் படிந்த கைகளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

''ஒரு சட்டை வேண்டும்'' என்று ஜாடை காட்டினன் சாயபு. கிட்டு எழுந்திருந்து உள்ளே போனன். மகாராஜா சம்மானம் செய்த பட்டு வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு வந்து அந்தச் சாயபுவின்மேல் போர்த்தினன். ''நீ ஒரு மகாராஜன்! நன்ருக இருக்க வேண்டும்'' என்று ஹிந்துஸ்தானியில் ஆசீர்வாதம் செய்துவிட்டுச் சந்தோஷத்துடன் அந்த வடநாட்டு வித்துவான் வெளியேறினன்.

நீலா இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். ''ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்று வைத்திருந்த அந்த ஒரு பட்டையும் அந்தப் பிச்சைக்காரனுக்குத் தானம் கொடுத்து விட்டீர்களே; என்ன தாராளம்!'' என்ருள். வறண்ட சிரிப்புடன், ''எனக்கு ஒருவன் அதைக் கொடுத்தான். அதையே இன்னெருவனுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டேன். அதில் என்ன நமக்கு நஷ்டம்?'' என்ருன் கிட்டு.

சபேசையரின் பேரன் மகாதேவன் திடீரென்று ஒரு நாள் வந்துசேர்ந்தான். மகாதேவனுடன் கிட்டு சாப்பிட உட்கார்ந்தான். இருவருக்கும் பரிமாறினன் நீலா.

மகாதேவன் நீலாவின் மனநிலைமையையும் கிட்டுவின் போக்கையும் தெரிந்துகொண்டான். பேச்சுவாக்கில், ''கட்டின மனைவியைத்

திண்டாட விட்டுவிட்டு இப்படி நாதோபாஸனை செய்கிறாய் என்றால் உன் குருவின் ஆத்மாகூடச் சாந்தி அடையாது'' என்றான்.

கிட்டுவின் நெஞ்சில் ஈயத்தை உருக்கி வார்த்தது போல் வந்து விழுந்தன, அந்த வார்த்தைகள். பாதி சாப்பிட்டுக்கொண் டிருந்த வன் எழுந்திருந்து கையை அலம் பிக்கொண்டு வேகமாக வெளியே போய்விட்டான்.

எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்ற நினைவு இல்லா மல் பஜனை மடத்துப் பக்கம் போனான். அங்கே வந்த கந்தசாமி பாகவதர் இவன் தோற்றத்தி லிருந்து, ஏதோ விசேஷம் நடந் திருக்கும் என்று அறிந்து கொண்டார்.

"உனக்கு ஏன் இவ்வளவு கோப மும் வருத்தமும்?''

"என் மனைவியரல்தான்.''

"நாதோபாஸனை செய்ய வேண்டாமென்று அவள் சொல்லி யிருக்கமாட்டாள்; குடும்ப வாழ்க் கையை நடத்திக்கொண்டு உபா ஸனை செய்யச் சொல்கிறாள். அதில் தவறென்ன? கோபம், தாபம், வருத்தம் எல்லாம் ஒன்றிலிருந்து தான் பிறக்கும். அதுதான் அகங் காரம். அது இம்மியாவது உன் னிடம் இருக்கிறதா என்பதைத் துருவிப் பார். அப்பொழுது தெரி யும், இதற்குக் காரணம் எது என்பது.''

"வாஸ்தவந்தான். என் பிழையை ஒப்புக்கொள்கிறேன். அகங்காரம் இல்லை என்று நான் சொல்லிவிட முடியாது. என்னை மன்னியுங்கள். நான் ஏதோ பிதற்றி விட்டேன்'' என்றான் கிட்டு.

பாகவதர் கிட்டுவை நேரே காமாட்சி அம்மன் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். கோவிலி னுள்ளே ஏகக் கூட்டம். அதைத் தாண்டிக்கொண்டு கர்ப்பக்கிருகத் தண்டையில் சென்றார்கள்.

தேவி தேஜோமயமாகத் திகழ்ந் தாள். கிட்டு சியாமா சாஸ்திரி களின் பாட்டை ஒவ்வொன்றாகப் பாட ஆரம்பித்தான். ஏதோ பக்தி வெறி வந்ததுபோல் அவன் பாடும் பாட்டில் ஒரு பயங்கரமான காம்பீரியம் இருந்துகொண்டிருந் தது.

வீட்டு வாசலை அடையும்போது இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. ஜன நடமாட்டம் அடங்கியிருந் தது. காலை அலம்பிவிட்டு, நீலா வைப் பார்த்தான் கிட்டு. தன் இடுப்பிலிருந்த பொட்ட லத்தை எடுத்து, "இந்தா, இந்தக் குங்குமத்தை வாங்கிக்கொள்'' என்று நீட்டினான். அவள் கையை நீட்டி வாங்கி நெற்றியில் இட்டுக் கொண்டாள். நீலாவை மறுபடி யும் பார்த்துக்கொண்டே நின் றான் கிட்டு. இருவரும் பேச வில்லை. "இதோ பார் நீலா, விதி செய்யும் கொடுமை போதும். நீயும் நானும் ஒருவருக் கொருவர் கொடுமை செய்துகொள்ள வேண் டாம்'' என்றான்.

நீலா வாயைத் திறக்க வில்லை.

கிட்டுவை இப்போது எல் லோரும், "கிருஷ்ண பாகவதர்'' என்று மரியாதையாக அழைக்க லானார்கள்.

திருவையாற்றில் தியாகையர் உற்சவம் சில வருஷங்களாக நடந்துகொண்டிருந்தது. ஆனால் அந்த உற்சவத்தை நடத்துவதில் சங்கீத வித்துவான்களுக்குள்ளே அபிப்பிராய பேதம் ஏற்பட்டு

இரண்டு கட்சிகளாகப் பிரிந்து அதை நடத்தி வந்தார்கள்.

கிருஷ்ண பாகவதரின் கச்சேரியை ஏற்படுத்தியிருந்த கட்சிக்காரர்களுக்கு மிகவும் பெருமை. சங்கீத உலகின் சக்கரவர்த்தியான கிருஷ்ண பாகவதரைத் தங்கள் சார்பில் பாட ஒப்புக்கொள்ளச் செய்துவிட்டோமென்று அவர்கள் மார் தட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால், கச்சேரியன்று அவர்களுக்குக் கிடைத்த செய்தி அவர்களைத் திடுக்கிடச் செய்தது. அதாவது, கிருஷ்ண பாகவதர் பாடப்போகும் அதே நேரத்தில் எதிர்க்கட்சியில், தாசியான பாலாம்பாள் என்ற பிரபல பாடகியும் பாடப் போகிருள் என்பதுதான் அந்தச் செய்தி. அவர்களுக்கு ஒரு பயம் வந்துவிட்டது.

காரியதரிசி மெதுவாகக் கிருஷ்ண பாகவதரிடம் வந்தார். "ஒரு பிரார்த்தனை: கச்சேரியை நாளைக்கு வைத்துக்கொண்டால் என்ன?" என்ருர். கிருஷ்ண பாகவதர் அதற்கு இணங்கவில்லை. அவர் வழக்கம் போல் 'வாதாபி கணபதிம்' பாடி முடித்துவிட்டு, ஒரு ராகத்தை ஆரம்பித்து ஆலாபனை செய்துகொண்டிருந்தார். திடீரென்று ஏதோ பெரிய ஆரவாரம் கேட்டது. திமுதிமுவென்று ஜனங்கள் வெளியிலிருந்து வந்து உட்கார ஆரம்பித்தார்கள்.

கூட்டத்தைப் பிளந்துகொண்டு, காரியதரிசி ஒரு பெண்மணியை மரியாதையுடன் அழைத்து வந்தார்.

கிருஷ்ண பாகவதருக்கு, வந்திருப்பது பாலாம்பாள்தான் என்பது புரிந்துவிட்டது.

கச்சேரி முடிந்தது. "ஒரு வார்த்தை" என்று நெருங்கிக் கொண்டு வந்தார் ஒரு வித்தவான். பின்னேடு வந்தாள் பாலாம்பாள். "இந்த அம்மாள் யாரென்று தெரியுமா? இவர்தான் பாலாம்பாள். உங்கள் பாட்டு என்ருல் உயிர்" என்று அறிமுகப்படுத்திஞர் நண்பர். பாலாம்பாள் நமஸ்கரித்துவிட்டுப் பணிவுடன் நின்ருள்.

"கேள்விப்பட்டிருக்கிறேன். என், இன்று அங்கே கச்சேரி இல்லையோ?" என்று கேட்டார்.

நண்பர் அதற்குப் பதில் சொன்னர்: "அடேயப்பா! சமாசாரம் எப்படியாயிற்று, தெரியுமா? நீங்கள் பாடப் போவது அவர்களுக்குத் தெரியாதாம். நீங்கள் பாடுவது, உங்களுக்குப் போட்டியாகத் தானும் பாடுவதா என்று எண்ணிச் சதசிலேயே, 'பாகவதர்வாள் அங்கே பாடுகிருர்கள்; நான் அங்கே போய்க் கேட்கப் போகிறேன்; எல்லோரும் அங்கே போங்கள்' என்று சொல்லிவிட்டு இறங்கிவிட்டார். அந்த உற்சவக்காரர்களுக்குத்தான் முகத்தில் அடித்ததுபோல் ஆகிவிட்டது" என்ருர்.

மறுநாள் காலையில், ஸ்நானம் செய்துவிட்டு, கிருஷ்ண பாகவதர் பூஜையை முடித்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், பாலாம்பாளும் மற்ருெரு சங்கீத வித்துவானும் அங்கே வந்தார்கள். "நான் பாடிவிட்டேன். நீயும் பாடலாம். உன் பாட்டைக் கேட்கும் சந்தர்ப்பம் இதுவரையில் கிடைக்கவில்லை" என்ருர் பாகவதர்.

அவள் பாட ஆரம்பித்தாள். கிருஷ்ண பாகவதர், ஒரு நிமிஷம் திடுக்கிட்டார். அந்தச் சாரீரத்தில் இருந்த கவர்ச்சி அவருக்கு மயிர்க்கூச்சை உண்டாக்கியது. "ஆகா, என்ன அற்புதமான சாரீரம்!

ஈசுவரனுக்குத்தான் அர்ப்பணம்'' என்றார்.

''நான் வெகு நாட்களாக, ஏகலைவனைப் போலத் தங்களைத் தான் குருவாக எண்ணி வந்திருக்கிறேன். ஏதோ, ஈசுவர சங்கல்பம், இவ்வளவு தூரம் இங்கே என்னைக் கொண்டு வந்திருக்கிறது. நீங்கள்தான், இனிமேல் எனக்குக் கிருபை கூர்ந்து, வித்தையை அநுக்கிரகம் செய்ய வேண்டும்'' என்றாள். அன்று முதலே சிட்சை ஆரம்பமாயிற்று.

ஒரு நாள் காலை சுமார் ஒன்பது மணி இருக்கும். கிருஷ்ண பாகவதர் கூடத்தில் படுத்துக்கொண்டிருந்தார். அவருக்கு நெஞ்சிலே லேசான வலி. இப்பொழுதெல்லாம் அவரால் முன்போல் பாட முடியவில்லை. அதிக நேரம் பாடினாலோ மேல் ஸ்தாயிகளில் அதிகமாகப் பாடிவிட்டாலோ நெஞ்சில் வலி வந்துவிடும். கயிற்றுக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தார். கூடத்தின் மற்றொரு கோடியில் நீலா யந்திரத்தில் அரிசி அரைத்துக்கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் பாலாம்பாள் வந்து சேர்ந்தாள். ''வா'' என்றார் கிருஷ்ண பாகவதர். ''வா அம்மா, பாலம்'' என்றாள் நீலாவும்.

''என்ன, மறுபடியும் வலி வந்துவிட்டதா?'' என்று கேட்டாள் பாலாம்பாள். கிருஷ்ண பாகவதர் கட்டிலில் படுத்திருப்பதற்குக் காரணம் அதுவாகத்தான் இருக்க முடியும் என்பது அவளுக்குத் தெரியும்.

''சும்மா லேசாக வலிக்கிறது. அவ்வளவுதான்'' என்றார் பாகவதர்.

கிருஷ்ண பாகவதருக்கு உடம்பு சரியிராவிட்டாலும் பாலாம்பாள் வந்திருக்கிறாளே என்று பாட ஆரம்பித்தார். அவர் பாடியது என்ன சங்கீதமா? அது ஒரு ராகமா? சாட்சாத் பரமேசுவரனது திவ்விய ரூபத்தையே சித்திரித்துக் காட்டும் நாத சித்திரமாகத்தான் திகழ்ந்தது. பாலாம்பாளும் அந்தச் சங்கீத வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தாள். மேல் பஞ்சமத்தில் சஞ்சாரம் செய்யும் சில சங்கதிகளைப் பாடிவிட்டு, ஒரு சங்கதியைப் பாடப்போனார். அறுந்த தந்தியைப் போல், ஏதோ பளீரென்று அவர் மார்பில் குத்தியது. அப்படியே கட்டிலின்மேல் விழுந்துவிட்டார். பாலாம்பாள் நடுங்கிவிட்டாள். தம்பூராவை வைத்துவிட்டு, ''என்ன, என்ன!'' என்று திகிலுடன் கேட்டாள். ''ஒன்றுமில்லை. வலிதான்'' என்று வலி பொறுக்க முடியாமல், வாயைக் கடித்துக்கொண்டே மார்பை அமுக்கிக்கொண்டு சொன்னார். பாலாம்பாள் நீலாவைப் பார்த்து, ''அவருக்கு வலி அதிகமாகிவிட்டிருக்கிறது. கொஞ்சம் தணல் கொண்டு வருகிறீர்களா? ஒத்தடம் கொடுக்கலாம்'' என்றாள்.

நீலாம்பாள் சிறிது நேரமாகச் சுமுகமாகவே இல்லை; பாலாம்பாள் அவளிடம் பரபரப்புடன் சொல்லுவதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போலவே, யந்திரத்தில் அரிசியை அரைத்துக்கொண்டிருந்தாள். நீலாம்பாளுடைய அசிரத்தையும் அடமும் பாலாம்பாளுக்கு ஆத்திரத்தை உண்டாக்கின. ''உங்களைத்தான் அம்மா! அவர் துடிதுடிக்கிறார். தணல் கொண்டு வாருங்கள்'' என்று

சொன்னான். மறு நிமிஷம், பாலாம்பாள் அவன் முன்னே நிற்கவில்லை. நேரே அலமாரிக்குப் போனாள். தைலத்தை எடுத்துக்கொண்டு வந்து கிருஷ்ண பாகவதர் மார்பில் பூசி, அழுத்தித் தடவிக் கொண்டிருந்தாள். நீலாவின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம் இந்தக் காட்சியைக் கண்டவுடன் வெடித்துக் கொண்டு வெளிப்பட்டது. அவளை அப்படியே எரித்து விடுவதைப் போலப் பார்த்தபடியே, "அம்மா! தொட்டுத் தாலி கட்டின பொம்மனாட்டிக்கு மேலேதான் உனக்கு மனசு பதறுகிறது. இங்கே கொண்டா தைலத்தை" என்று அந்தச் சீசாவை அவள் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டான். அந்தச் சொல்லம்பு பாலாம்பாள் நெஞ்சில் வெகு ஆழத்தில் சென்று தைத்தது.

"அம்மா, அந்தப் பாக்கியம் செய்தவர்கள் நீங்கள்தான். ஆனால் இங்கே தவிக்கும் ஜீவன் உங்களுக்கு மாத்திரம் சொந்தமில்லை" என்று கிருஷ்ண பாகவதரைச் சுட்டிக் காட்டியபடியே தலை குனிந்து நின்றாள்.

அந்தச் சம்பவத்திலிருந்து, பாலாம்பாள் கிருஷ்ண பாகவதர் வீட்டுக்கு வருவதில்லை.

ஒரு நாள் மாலையில், பாலாம்பாள் பாடிக்கொண்டிருந்தாள்.

பாட்டு முடிந்து திரும்பிப் பார்த்தாள். கிருஷ்ண பாகவதர் நின்று கொண்டிருந்தார்.

"ஏன் இங்கேயே நின்றுகொண்டிருக்கிறீர்கள்?"

'இல்லை; உன் பாட்டைத்தான் கேட்டு அநுபவித்துக்கொண்டிருந்தேன்."

பாலாம்பாள் அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தாள். "நான் மிகவும் கேவலமான குலத்தில் பிறந்தவள். இருந்தாலும் என்னிடம் கிருபை கூர்ந்து வித்தையை அநுக்கிரகித்தீர்கள். என்னுடைய சங்கீத பாணியில் மாத்திரம் நீங்கள் இருக்கவில்லை. என்னுடைய இருதயத்திலும் நீங்கள் இருக்கிறீர்கள்" என்று நாத் தழுதழுக்கச் சொன்னாள். அவளுடைய கண்கள் வாய்க்கு எட்டாத பாஷையைப் பேசிக்கொண்டிருந்தன.

மற்றொரு நாள் மாலை வழக்கம் போல் கிருஷ்ண பாகவதர் பாலாம்பாள் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தார். வழியில், சந்தனக் கடை வியாபாரி ஒருவர் கிருஷ்ண பாகவதரைப் பார்த்துவிட்டார். அவர் பழுத்த சங்கீத ரஸிகர். அதுவும் கிருஷ்ண பாகவதர் பாட்டு என்றால் உயிர். கிருஷ்ண பாகவதரை அன்புடன் அழைத்து அவருக்குச் சந்தனத்தைப் பூசி, ஜவ்வாதினால் பொட்டிட்டு, மாப்பிள்ளையைப்போல ஆக்கி அநேக உபசாரங்கள் சொல்லி அனுப்பினார்.

கிருஷ்ண பாகவதர், அந்த மாப்பிள்ளைக் கோலத்துடன் பாலாம்பாள் வீட்டில் நுழைந்ததும், இவர் இருக்கும் கோலமும் இவர் செய்துகொண்டிருக்கும் அலங்காரமும் அவளுக்கு ஆச்சரியத்தை விளைவித்தன. பாகவதர் வந்து உட்கார்ந்தார். எப்போதும் போலவே வந்து உட்கார்ந்தவுடன், "தம்பூராவை எடுத்து வா" என்றார். அதை எடுத்துக் கொண்டுவந்து வைத்தாள் பாலாம்பாள். அதன் பிருடைகளை முடுக்கிச் சுருதி சேர்த்தாள். ஆனால்,

எதிரேயிருக்கும் பாலாம்பாளின் உள்ளம் அதற்கு முன்பே முறுக் கேறிக் கிடந்தது. அவளுடைய மனம் கிருஷ்ண பாகவதரிடம் லயித்திருந்தது. மனிதனுடைய செவிகளுக்கும் புலன்களுக்கும் எட்டாத நாதத்தைக் கைப்பற்ற முயலும் கிருஷ்ண பாகவத ருக்கு, பாலாம்பாளின் உள்ளக் குரலா காதில் விழப்போகிறது? கிருஷ்ண பாகவதர் பாடி முடித் தார். பாலாம்பாள் உணர்விழந்து நின்ருள். அவள் கண்களில் அவ ளுடைய இதயத்தின் வேதனை தளிர்த்துக்கொண் டிருந்தது. இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் அவர் பாதத்தில் விழுந் தன. அந்தத் திவலைகள், நெருப் பைப்போல் அவர் சரீரத்தைச் சுட்டெரித்தன. கண்களையும் இருதயத்தையும் ஊடுருவிப் பார்ப்பதுபோல் பார்த்தார். சங் கீதம் உணர்ச்சியை வெள்ளமாகப் பெருக்கிக் கண்கள் மூலம் ததும் பச் செய்வதை எத்தனையோ தரம் கண்டும் அநுபவித்தும் இருக் கிருர். ஆனுலும், இன்று பாலாம் பாள் கண்கள் பெருகி நிற்பது சங் கீதத்தால் மாத்திரம் அல்ல என் பதை அறிந்துகொண்டார்.

"என்ன, பாலம்?" என்று மெது வாகக் கேட்டார்.

சொல்லாமல் அறியவேண்டிய தோர் உள்ளப் பாங்கைச் சொல் லியா தெரிவிக்க முடியும்? பின் னும் அவள் நெஞ்சம் வேதனையில் ஆழ்ந்தது.

"ஒரு காலத்தில் நான் பணத் துக்கு அடிமையானேன். கொஞ்ச நாள் சங்கீதத்துக்கு அடிமையா னேன். ஆனுல் எப்போதும் உங் கள் அடிமையாகத்தான் இருக்கி றேன்" என்ருள்.

கிருஷ்ண பாகவதருக்குப் பகீ ரென்றது. அவள் கருத்து அவ ருக்குத் தெரிந்துவிட்டது. அவள் முகத்தைப் பார்த்துப் பேச அவர் மனம் கூசியது. "நான் நாதத்தை ஒரு மகத்தான யோகமாகவே உபாஸித்து வந்தேன். சங்கீதம் மனத்திலே தூய்மையான எண் ணங்களைத்தான் உண்டுபண்ணும் என்று எண்ணியிருந்தேன். என் பாட்டுக் கேவலம் மிருக இச்சை களைத் தூண்டுமானுல், என் சங்கீ தம் பொய்; என் யோக்கியதையும் பொய். நான் பாடுவதற்கே லாயக் கில்லாதவன். நான் இன்றுமுதல் பாடுவதை நிறுத்திவிடுவதைத் தவிர வேறு வழியில்லை" என்ருர்.

பாலாம்பாள் திடுக்கிட்டாள். இது என்ன! அனர்த்தத்தில் அல் லவா கொண்டுவந்து விட்டது! கிருஷ்ண பாகவதரின் காலில் விழுந்து நமஸ்கரித்து, "வேண் டாம். என்னை நீங்கள் பாடவைத்த தற்கு உங்களை நான் பாடாமல் இருக்கச் செய்தேன் என்ற அபக் கியாதி வேண்டாம். சங்கீதத்துக்கு நான் தொண்டு செய்யாவிட்டா லும் அபராதமாவது செய்யாமல் இருக்கவேண்டும்" என்று சொன் ஞள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்து கொண் டிருந்தது.

"இதுவரையில் வித்தையில் நாட்டங் கொண்ட மாணவி யாக இருந்தாய். இப்போது உணர்ச்சி வசப்பட்ட பெண்ணுகி விட்டாய். இனிமேல் எனக்கு இங்கே வேலை இல்லை. வித்தையை வீணுக்காமல் போற்றி வளர்த்துச் சௌக்கியமாய் இரு" என்று சொல்லிவிட்டு, பதிலை எதிர்பார்க் காமல் திரும்பியும் பாராமல் வெளி யேறினுர்.

கிருஷ்ண பாகவதருக்கும் பாலாம்பாளுக்கும் ஏற்பட்ட பிளவு, பலருக்குப் பலவிதமான ஹேஷ்யங்களை உண்டு பண்ணியது. நீலாம்பாளுக்கு, தன் கணவனுக்கும் அந்தத் தாசிக்கும் ஏற்பட்ட உறவு அறுந்துபோனதில் ஒருவித திருப்திதான்.

கந்தசாமி பாகவதரின் பஜனை மடக்கட்டிட வசூல் கச்சேரிகள் ஏற்பாடாவதற்கு மும்முரமாக வேலைகள் ஆரம்பமாயின. சங்கீதத்தில் பழுத்திருந்த கிருஷ்ண பாகவதரின் அற்புத கானத்தை ஜனங்கள் கேட்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். கிருஷ்ண பாகவதருக்கு இந்தக் கச்சேரியில் ஒரு தனி ஆனந்தம்.

ஆனால், எதிர்பாராதபடி ஒன்று நிகழ்ந்தது. இந்த விழா நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகத் திடீரென்று கிருஷ்ண பாகவதருக்கு ஜலதோஷமும் ஜுரமும் வந்துவிட்டன. ஆனாலும் கச்சேரிக்கு இரண்டு நாள் முன்னதாகக் கிருஷ்ண பாகவதரின் உடம்பு சொஸ்தமாயிற்று. தலைக்கு ஜலம் விடவில்லை.

கச்சேரி ஆரம்பிக்கும் நேரம் வந்தது. பஜனை மடத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஜன சமூகம் பொங்கி வழிந்து நின்றது.

கிருஷ்ண பாகவதர் மேடைக்கு வந்தார். அன்று என்னவோ, அவருக்கு மனத்தில் ஓர் அச்சம் உண்டாயிற்று. சபையில் உட்கார்ந்திருக்கும் ஜனங்களைப் பார்த்து ஒரு நமஸ்காரம் செய்தார். கண்ணை மூடிக்கொண்டு வழக்கம்போல் குருவைத் தியானித்தார். சுருதியில் செவியையும் மனத்தையும் இதயத்தையும் புகுத்திக்கொண்டு, வாயைத் திறந்து சுருதியுடன் ஒட்டியபடி பாட ஆரம்பித்தார். சுருதிக்காக அவர் கொடுத்த ஆவென்ற சப்தத்துக்குப் பதிலாக, அவர் தொண்டையிலிருந்து வெறும் காற்றுத்தான் கிளம்பியது. ஒரு விநாடி அவர் உடம்பு அப்படியே திடுக்கிட்டு, ஸப்த நாடியும் ஒடுங்கியது போல் அசைவற்று நின்றது. மறுபடியும், "சங்கரா" என்று சுருதியுடன் தம் சாரீரத்தை ஒட்டவைத்துப் பாட ஆரம்பித்தார். மறுபடியும் அதேமாதிரி வெறும் காற்றுடன் வந்தது ஒலி. இது அவருடைய சாரீரந்தானா? அவர் குரல் எங்கே போய் ஒளிந்துகொண்டது?

அவருக்குத் தலை சுழன்றது. மயக்கம் வருவதுபோல் ஓர் உணர்ச்சி தோன்றியது. வேகமாக மேடையிலிருந்து இறங்கிப் பின் பக்கமாக நடந்து போனார். சபையில் உள்ளவர்கள் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றார்கள். கந்தசாமி பாகவதர் மாத்திரம் பேசாமல் பின் தொடர்ந்து போய் உட்கார்ந்தார்.

"என்னப்பா கிட்டு, என்ன விஷயம்?" என்று பரிவு ததும்பக் கேட்டார்.

கிருஷ்ண பாகவதர் தழுதழுத்த குரலில், "மாமா, என் சாரீரம் போய்விட்டது. சரீரந்தான் நிற்கிறது; என் குரலுக்குப் பதிலாக என் உயிரைக் கடவுள் கொண்டு போயிருக்கக் கூடாதா?" என்றார்.

"கிட்டு, நீ வருத்தப்படுவதில் ஆச்சரியமில்லை. ஆனால், நீ இதை உணரவேண்டியதுதான். துன்பம் என்பது ஒரு மாயை. ஒவ்வொரு தரம் இமைகள் மூடும்பொழுதும், ஒவ்வொரு தரம் அவை திறந்து

தான் நிருகின்றன. துன்பமும் அத்தகையதுதான். துன்பம் நம் அகக்கண்ணை இமைகள் போலத் தான் மறைக்கிறது. ஆனால், அவை மறுபடியும் திறந்துதான் ஆகவேண்டும். அறிவாளி தன் துன்பத்தைத் தன் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்திக் கொள்கிறான்'' என்று ஆறுதல் கூறினார் கந்தசாமி பாகவதர்.

கிருஷ்ண பாகவதர் சிரத்தையுடன் கேட்க ஆரம்பித்தார்.

"நீ இவ்வளவு தூரம் நாதத்தை உபாஸித்துவந்தாயே. எதற்காக?'' என்றார் கந்தசாமி பாகவதர்.

"இதோ தெரியும் சிவலிங்கத்தைப்போல, அது பரம்பொருளின் சின்னமாக இருப்பதால் தான்.''

"வாஸ்தவந்தான்; ஆனால் அந்த நாதப் பிரம்மத்தை நீ உன் செவிகளினால்தானே உணர்ந்தாய்?'' என்றார் கந்தசாமி பாகவதர்.

"ஆம்.''

"சரி. உன் செவிக்குள் அடங்கிக் கிடப்பதுதானா நாதம்? அங்கிங்கெனாதபடி உள்ள பரம்பொருளுக்கு இந்த லிங்கம் எப்படிச் சின்னமாக நிற்கிறதோ, அதே போல் வானிலும் வெளியிலும் அணுவிலும் இயங்கும் நாதப்பிரம்மத்தின் ஒரு திவலையைத்தானே உன் காதுகள் ஏற்று வாங்கிக் கொள்ளுகின்றன? செவிகள் கேட்கும் இனிய கீதத்தில் இதுவரை ஈடுபட்டிருந்தாய். செவிக்கு எட்டாது நிற்கும் பரம கீதத்தில் இனி ஈடுபடப் போகிறாய்'' என்றார்.

கிருஷ்ண பாகவதர் ஸ்தம்பித்து நின்றார். அவர் உடம்பெல்லாம் புல்லரித்தது. அவர் கண்களிலிருந்து நீர் பெருகியது.

கந்தசாமி பாகவதர், அப்படியே அவரை அன்புடன் தூக்கி, "அப்பா கிட்டு, நீ நாதத்தின் எல்லையைக் கடந்துவிட்டாய்; அடுத்தபடியில் இருப்பது மௌனம்; அதற்கு நீ வந்துவிட்டாய்'' என்றார்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

"தியானம்'' என்றார் கந்தசாமி பாகவதர்.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார் கிருஷ்ண பாகவதர்.

"வாஸ்தவந்தான். இதுவரையில், பகவானைக் குரல் கொடுத்துக் கூப்பிட்டு வந்தேன். இனி என் இதயத்தால் அவரைக் கூப்பிடுவேன்'' என்றார்.

பூஜைக்காகக் கோவில் மணி கணீரென்று ஒலித்தது. இப்பொழுது எழுந்த ஒலி, கிருஷ்ண பாகவதர் காதில் மாத்திரம் விழவில்லை; அவருடைய உள்ளத்தின் ஆழத்திலும் விழுந்தது.

அவருடைய கண்களிலே ஒரு புது ஒளி வீசியது. அவருடைய உள்ளத்தில் ஒரு புதிய இசை பெருகியது.

சஞ்சலம் நீங்கியது. சாந்தம் பிறந்தது. வெளியே இருண்டுதான் இருந்தது. ஆனால் கிருஷ்ண பாகவதரின் இதயத்தில் இருள் இல்லை.

தம் இதய நாதத்திலேயே ஈடுபட ஆரம்பித்துவிட்டார். ★

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

சமாதானக் கூட்டம்

ஏழு கடல்களுக்கு அப்பால் பெரும் போர் தொடங்கியிருந்தது. அந்தப் போரை எதிர்த்துத் தீர்மானம் செய்ய, ஊர்க் கோயிலிலே கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்துக்கு வராதவர் யாருமில்லை. குழந்தைக்காரியான மருமகளோடு அவளை வாட்டியெடுக்கும் மாமியாரும் வந்தாள். பணக்காரனும் படிப்பாளியும் சரியாசனத்தில் அமர்ந்தார்கள். உண்டியும் உடையும் உகந்து ஓடும் இல்லறத்தானோடு, காட்டில் வாழ்ந்து இறைவனையே சிந்திக்கும் ஆண்டியும் வந்தான்.

நாம் ஏதோ பெரிய செயலில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற பெருமிதம் எல்லாருடைய முகத்திலும் தோன்றியது. 'அமைதி வெல்க!' என்ற கொடிகள் எங்கும் பறந்தன.

கூட்டத்தில் சொற்பொழிவுகள் வெள்ளமாய்ப் பாய்ந்தன. கடைசியில் ஒரு சாமியார் பேசுவதற்கு எழுந்தார். "நாம் அனைவரும் ஆண்டவனுடைய மக்கள். எந்தப் போர் நடந்தாலும் அது அண்ணன் தன் தம்பியைக் கொல்வதுபோல ஆகும்" என்று அவர் ஆவேசத்தோடு பேசினார்.

அதற்குள் மற்றொரு சாமியார் எழுந்து, "மகா ஜனங்களே, இவன் பேச்சை நம்பாதீர்கள். இவன் பெரிய புரட்டன். கடவுளிடம் உங்களுக்கு இருக்கும் குருட்டுப் பக்தி வளர வேண்டுமென்பதே இவன் நோக்கம். இவனை விரட்டுங்கள்!" என்றார்.

முதல் சாமியார் கண் சிவக்கக் கூவினார்: "இவன் நாஸ்திகன். இவன் சொல்வது பொய். இவனை விரட்டுங்கள். கடவுள் சாட்சியாக நான் சொல்கிறேன்—"

இரண்டாம் சாமியார் பைத்தியம்போலக் கத்தினார்: "நானும் கடவுள் சாட்சியாகச் சொல்கிறேன். உலகில் கடவுளே கிடையாது. கடவுள் என்று நாம் வழிபடுவது வெறுங் கல்!"

'கடவுள் உண்டு', 'கடவுள் இல்லை' என்று இரண்டு சாமியார்களும் சண்டையிட்டார்கள். வாய்ப் பேச்சு நின்று, அவர்கள் தங்கள் கைகால்களையும் பல்லையும் பயன்படுத்தினார்கள்.

மக்கள் வந்து ரத்தக்களரியாக நின்ற அவர்களை விலக்கினார்கள். கடைசியில் பிரியும்போது, "அமைதி வெல்க!" என்று அந்த ஆண்டிகள் இருவரும் ஒரே குரலில் கூவினார்கள். —காண்டேகர்.

Aug. '53 Regd. No. M. 4975

மஞ்சரி

விஜய - ஆவணி

ஊரும் உலகமும் 1
சபாபதி ஐயர் .. .. பாரதி 3
ரமணர்: வாழ்வும் வாக்கும் 6
என்னைக் கேளுங்கள் .. காப்டன் என். சேஷாத்திரிநாதன் 9
வெளிநாட்டில் ரவீந்திரர் .. .. .. விசுவபாரதி க்வார்ட்டர்லி 13
கவர்னரின் புலி வேட்டை .. .. ஃப்ரீ இந்தியா 17
பல சரக்கு 22
ஹிரணியாட்ச வதம் 24
கார்ட்டூன் கதம்பம் 28
மன்னனைத் தேர்ந்தெடுத்தல் .. .. பிரஜா மத 30
குழந்தைகள் பொம்மை 33
மாண்ட அணு உளவாளிகள் .. .. ஸ்வதந்த்ரா 36
நகர நிர்மாணம் .. .. மாடர்ன் ரெவ்யூ 41
நர்மதைக் கரையில் .. .. ப்ரபாவலி 44
பாகிஸ்தானில் கலியாணம் .. .. .. பம்பாய் கிரானிக்கிள் 47
பரீட்சித்துப் பார்த்தவை .. .. ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம் 51
பாபு ராவ் பதில் சொல்லுகிறார் .. .. பிலிமிண்டியா 52
பட்டணத்தில் பாம்பு .. .. .. அமிர்த பஜார் பத்திரிகா 54
ஈரான் பிரதமர் .. .. லிபி ஸிண்டிகேட் 59
அன்பின் அறிகுறி .. .. பேரெண்ட்ஸ் மகஸீன் 63
உதட்டில் பொன் (சிறு கதை) .. .. மஞ்சேரி எஸ். ஈசுவரன் 66
இதய நாதம் (நாவல் சுருக்கம்) .. .. ந. சிதம்பரசுப்ரமணியம் 71
சமாதானக் கூட்டம் .. .. (3-ஆம் அட்டை)